# பகுதி II

# பகுதி 11

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| பொன்விழாக் கொண்டாட்டம் | 1 |
| வங்கியை நவீனப்படுத்தல் | 11 |
| கணக்குகளும் வங்கித் தொழிற்பாடுகளும் | 1V |
| நாணய வெளியீடு | X1V |
| வங்கி மேற்பார்வை | XV1 |
| வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | XX |
| அபிவிருத்தி நிதி | XX11 |
| கிராமியக் கொடுகடன் | XXV11 |
| நிதியியல் சந்தை | XL |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | XL111 |
| புள்ளி விபரங்களும் கள அளவீடுகளும் | XLV |
| ஊழியர் சேமநிதியம் | XL1X |
| செலாவணிக் கட்டுப்பாடு | L |
| பொதுப்படுகடன் | L1V |
| வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம் | LX |
| செயலகம் | LX111 |
| சட்டம் | LX111 |
| பணிமனை | LX1V |
| புதிய கட்டடங்கள் | LX1V |
| பாதுகாப்புப் பணிகள் | LXV |
| தகவல் | LXV |
| தகவல் தொழில் நுட்பம் | LXV1 |
| முகாமைக் கணக்காய்வு | LXV111 |
| பயிற்சி | .LXV111 |
| நலன்புரி | LX1X |
| ஆளணி | LXX |

## பொன் விழா கொண்டாட்டம்

1950ஆம் ஆண்டு ஒகத்து 28ஆம் நாள் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி ஒகத்து 27ஆம் நாள் அதனது பொன்விழாவைக் கொண்டாடியது. ஐம்பது ஆண்டுகளின் பணிகள் இதனைவிடச் சிறப்பான கொண்டாட்டங்களை வேண்டி நின்றபோதும் நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு சார்பு ரீதியில் எளிமையான கொண்டாட்டமாக இது அமைந்தது.

இந்த நிகழ்ச்சியினைக் குறிக்கு முகமான சமய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட பாரிய இடரிலிருந்து வங்கி மீண்டெழுந்தமைக்கான அடையாளச் சின்னமும் அந்த விபத்தில் அகப்பட்டு துன்பத்துக்குள்ளானோருக்கான காணிக்கையுமாகிய மத்திய வங்கியின் புதிய தலைமையகக் கட்டடத்தின் முறைசார்ந்த திறப்பு விழா கொண்டாட்டத்தின் முக்கிய அம்சமாக விளங்கியமை பொருத்தமான விடயமொன்றாகும். கட்டடம் அதி மேதகு சனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டதுடன் அவரினால் தானாகவே சமூகமளிக்க இயலாது போனாலும்கூட திறப்பு விழாவுக்கான அவரது சொற்பொழிவை ஆற்றுவதற்காக நவீன தொழில்நுட்பத்தின் புதுமைகளை அவர் பயன்படுத்தினார். இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் பெயர்ப் பலகை பிரதி நிதி அமைச்சர் என்ற தகைமையில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களினால் திரைநீக்கம் செய்யப்பட்டது. இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் அதி கௌரவ ஸ்ரீமான் எட்வர்ட் ஜோர்ஜ் ஜீபீஈ அவர்கள் அங்குராப்பண விழாவின் மதிப்பிற்குரிய அதிதியாகவும் பேச்சாளராகவும் கலந்து கொண்டார்.

திறப்பு விழா உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்தான மதிப்பிற்குரிய அதிதிகள் பலரின் முன்னிலையில் நடாத்தப்பட்டது. இவர்களிடையே தென்கிழக்காசியா, அவுத்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் குழுவின் (சியென்சா) மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் மற்றும் பிரதிநிதிகள், தூதரங்களின் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் முன்னைய மூத்த அலுவலர்கள் நாணயச்சபை உறுப்பினர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள் ஆகியோர் காணப்பட்டனர். மத்திய வங்கிக்காக இயற்றப்பட்ட கீதமொன்று பாடப்பட்டமையும் பொன்விழா நிகழ்ச்சிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட, இசை மேதை பிரதீப் இரத்நாயக்க அவர்களின் "இந்திரகீலய" என்ற இசைநிகழ்ச்சியின் சிறப்பு அரங்கேற்றமும் இந்த விழாவின் பண்பொன்றாக விளங்கியது. இந்த நிகழ்ச்சி பெருமளவு வரவேற்பினைப் பெற்றது. இதற்கு மேலதிகமாக அஞ்சல் திணைக்களத்தினால் முத்திரையொன்றும் விஷேட முதல் நாள் கடிதஉறையொன்றும் வெளியிடப்பட்ட வேளையில் ஆண்டு விழா நினைவு நாணயக்குத்தி ஒன்றினையும் "இலங்கையின் நாணயக் குத்திகளினதும் நாணயத்தாள்களினதும் வரலாறு" என்ற நூல் ஒன்றினையும் மத்திய வங்கி வெளியிட்டது.

சியென்சா ஆளுநர்கள், வங்கித் தொழில் சமூகத்தின் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் மூத்த அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்காக ஆளுநரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இராப்போசன விருந்தொன்றில் மறைந்த பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர அவர்களினால் உருவாக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட "மனமே" என்ற மூல நாடகத்தின் குறுகிய வடிவிலான அரங்கேற்றமொன்றுடன் அன்றைய தின நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

திறப்பு விழாவில் பல பேச்சாளர்களினால் குறிப்பிடப்பட்டவாறு, இலங்கைமத்திய வங்கி இலங்கைக்கும் அதனது மக்களுக்கும் ஐம்பது ஆண்டுகள் பணியாற்றியுள்ளது. பொன் விழாக் கொண்டாட்டமானது இதன் பிரதிபலிப்பாகவும் இன்னும் பல ஆண்டுகளுக்கான பணியின் தொடக்கமாகவும் இருந்தது.

## வங்கியை நவீனமயப்படுத்தல்

அதிகளவு செயல்திறன் மிக்க, தொழில்துறை சார்ந்த கச்சிதமான நிறுவனமாக தன்னை அபிவிருத்தி செய்து கொள்ளும் நோக்கில் வங்கி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தொடங்கியது. அதிகரித்துச் செல்லும் உலகமயமாக்கலின் அறைகூவல், பொருளாதாரக் கொள்கைகளில் புதிய கருத்துக்கள் மற்றும் மாற்றமடைந்துவரும் உலகில் மத்திய வங்கிகளின் பங்கு என்பன இந்த மாற்றங்களுக்கான தேவையை உருவாக்கின.

தற்போதைய கொள்கைகளையும் தொழிற் பிரயோகங்களையும் மீளாய்வு செய்வதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட "பின்நோக்கிய பார்வையுடன்" சீர்திருத்தச் செயல்முறை தொடக்கி வைக்கப்பட்டது. "மத்திய வங்கி - புத்தாயிரமாம் ஆண்டுக்குள் நுழைதல்" என்பதன் மீதான பின்னோக்கிய பார்வை 2000ஆம் ஆண்டு யூலை 8ஆம் 9ஆம் நாட்களில் மத்திய வங்கியில் இடம் பெற்றது. இதில் ஆறு அமர்வுகள் இடம் பெற்றதுடன் பங்குபற்றிய குழுக்கள் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக எடுத்துரைப்புக்களை வழங்கின.

- மத்திய வங்கி ஏன் மாற்றமடைய வேண்டும்
- மத்திய வங்கியின் குறிக்கோள்கள் பற்றிய மீளாய்வு
- முன்னுரிமை வழங்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்குப் பின்பற்ற வேண்டிய செயல்முறை
- இக் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான புதிய தேர்ச்சிகளும் ஊக்குவிப்புக்களும்.
- நவீனமயப்படுத்தலை மத்திய வங்கி எவ்வாறு செயற்படுத்த வேண்டும்.
- நவீன மயப்படுத்தல் செயல்முறையினை முற்றுப் பெறச் செய்வதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய உபாயமுறைகள்.

செயற்பாட்டுக் குழு ஒன்றினால் பின்நோக்கிய பார்வை ஒழுங்குபடுத்தப்பட்டதோடு இதில் அறுபது பங்கேற்பாளர்கள் கலந்த கொண்டனர். இந்த கூட்டு "கருத்துத் தெரிவிப்பு" செயல்முறையானது அலுவலர்களின் விரிவான பிரிவினருக்கு கருத்துப் பரிமாற்றலுக்கான வாய்ப்பினை வழங்கியதோடு மூத்த முகாமைத்துவத்துடன் விரிவான கலந்துரையாடல்களுக்கும் வசதி செய்து கொடுத்தது.

மத்திய வங்கியினுள் மாற்றங்களுக்கான முக்கியத்துவத்தினை பின்னோக்கிய பார்வை வலியுறுத்தியதோடு மாற்றம் தேவைப்படும் முக்கிய பல விடயங்களையும் இனங்கண்டது. குறிக்கோள்களின் தெளிவாக்கம் மற்றும் முன்னுரிமை, நிறுவன ஒழுங்கமைப்பு, முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன.

நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை உட்படுத்தும் வேலைகள் மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தலுக்கான நிரந்தர செயற்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளும் செயற்பாட்டுக் குழுவுக்கான நியதிகளும் பின்வருமாறு:

1. இனங்காணப்பட்ட அதனது முதன்மைக் குறிக்கோள்களாகிய விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல்முறை உறுதிப்பாடு என்பனவற்றின்பால் மத்திய வங்கியின் கவனத்தினை மீளத் திருப்புதல். ஏனைய குறிக்கோள்களின் மீளாய்வினையும் இந்த விடயங்களில் மத்திய வங்கியின் பங்கின் மீள் மதிப்பிடலையும் இது உள்ளடக்கும்.
2. மத்திய வங்கியின் முக்கிய கருமங்களில் கவனம் செலுத்தும் செயல்திறன் மிக்க, கருமங்களை ஒழுங்குபடுத்தும் அமைப்பு முறையொன்றினை அபிவிருத்தி செய்தல். வங்கியின் முதன்மைக் கருமங்களை

பயனுறும் வகையிலும் செயற்திறனுடனும் நிறை வேற்றுவதற்கு எவ்வளவு தூரம் உதவி புரிகின்றனவோ அவ்வளவு தூரத்துக்கே ஆதாதரப் பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

3. சுருக்கமானதும் விரைவானதுமான அறிக்கையிடல், ஊழியரின் உற்பத்தி யாக்கத்தினை மேம்படுத்தல், வேலைச் செயல்முறையில் பெருமளவு பங்கேற்பு, உடைமை சம்பந்தப்பட்ட பெருமளவு உணர்வு, வகைகூறல் மற்றும் தலைமைத்துவ தேர்ச்சிகள் என்பனவற்றிற்கு வசதிசெய்து கொடுக்கும் முகாமைத்துவப் பண்பாட்டுச் செயல்முறையொன்றினை அபிவிருத்தி செய்தல்.

4. மனித மூலவள தேர்ச்சியினை இனங்காணும் மனித மூலவள முகாமைத்துவத்துவ முறையொன்றினை விருத்தி செய்தல். ஆட்சேர்ப்பு, இழப்பீடு, செயலாற்ற மதிப்பீடு, பதவி உயர்வு, பயிற்சி ஆகிய அனைத்து மனித மூலவள் விடயங்களினதும் மீள் வடிவமைத்தலை இது உள்ளடக்குகின்றது.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக விதந்துரைப்புக்களை வழங்குவதற்காக வங்கியின் அனைத்து மட்டங்களிலுமான அலுவலர்களை உள்ளடக்கிய ஐந்து மையக் குழுக்களை செயற்பாட்டுக் குழு நியமித்தது.

அ. நவீன யுகத்தில் மத்திய வங்கியின் கருமங்களின் சூழலில் மத்தியவங்கியின் குறிக்கோள்களை மீள் வரைவிலக்கணப் படுத்தல்.

ஆ. அதனது கருமங்களை மிகப் பயனுறும் வகையில் செயற்படுத்துவதற்கு அதனை இயலச் செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கிக்கு பொருத்தமான ஒழுங்கமைப்பு முறையொன்றினைத் தீர்மானித்தல்.

இ. வங்கியின் முகாமைத்துவ செயல் முறையினைப் பாிசீலனை செய்து செயல்திறனையும் செலவுப் பயன் பாட்டினையும் எய்துவதற்காக அதனை மீள வடிவமைத்தல்.

ஈ. அலுவலர்களின் தேர்ச்சிகளை தொடர்ச்சி யாகத் தரமுயர்த்தி உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தும் தகுதி அடிப்படையிலான புதிய மனிதவள முகாமைத்துவ முறையொன்றினை விருத்தி செய்தல்.

உ. நவீன மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு அலுவலர் களிடையே இணக்கத்தினைக் கட்டி யெழுப்புவதற்குப் பொருத்தமான உபாயங்களை விருத்தி செய்தல்.

அட்டவணையிடப்பட்ட உரிய நேரத்தில் மையக் குழுக்கள் தமது அறிக்கைகளை முற்றுப்பெறச் செய்தன. அதன் பின்னர் செயற்பாட்டுக் குழு முன்மொழிவுகளின் முதலாவது தொகுதியினை உருவாக்கி வங்கியின் நவீனமயப்படுத்துவதற்கான "நடவடிக்கைத் திட்டத்தினைத்" தயாரித்தது. நடைமுறைப்படுத்தல் செயல்முறையின் முதலாவது கட்டம் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நடவடிக்கைத் திட்டத்தின் பல்வேறு விடயங்களின் விபரங்களைத் தீர்மானிப்பதற்காக வேண்டி அலுவலர் தேவைப்பாடுகள் திணைக்களங்களின் மறுசீரமைப்பு தகவல் தொழில்நுட்பம், பொதுப்படுகடன் முகாமைத்துவம், பதிவேடுகளின் முகாமைத்துவம், குழுக்கள் முறை மற்றும் அதிகார பேரளிப்பு என்பனவற்றிற்காக பல செயலணிக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

நவீனப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உலக வங்கியும் சுவீடிஸ் அபிவிருத்தி முகவராண்மையும் ஆதரவு வழங்குகின்றன.

# கணக்குகளும் வங்கித் தொழிற்பாடுகளும்

## 1. கணக்குகளும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

### அ. கணக்குகள்

#### (i) சொத்துக்கள்

2000ஆம் ஆண்டு இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் ரூ.217,191 மில்லியனாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 8.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. இந்த வளர்ச்சிக்கு வங்கி வசமிருந்த அரச, அரச உத்தரவாதப் பிணைகளும் அரசிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்களும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதே நேரம் மொத்தச் சொத்துக்களில் பன்னாட்டு ஒதுக்குகளின் பங்கு 1999இன் 54.0 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 35.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைக் காட்டும் முக்கிய விடயங்களாக வெளிநாட்டுப் பொதுப் படுகடனுக்கான மீள் கொடுப்பனவு, பன்னாட்டு நாணய நிதியத்திற்கான கொடுப்பனவு மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய விற்பனை என்பன விளங்கின.

வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 1999 இறுதியின் ரூ.62,598 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.107,914 மில்லியனுக்கு அல்லது 72.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு சந்தையில் காணப்பட்ட ரூபாவின் திரவத் தன்மையின் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கான குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக அரச பிணைகளின் அதாவது திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் உடமைகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட நடுத்தர மற்றும் நீண்டகால கொடுகடன் வசதிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்ததுடன் 2000ஆம் ஆண்டில் 29 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு அக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளும் செயற்படாக் கடன்களுக்காகச் செய்யப்பட்ட ஒதுக்கங்களுமே காரணமாகும். 2000ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளுக்கு குறுங்கால முற்பணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

#### (ii) பொறுப்புக்கள்

பொறுப்புக்கள் பக்கத்தில், ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் மிகப் பெரும் வகையாக தோற்றம் பெற்றதுடன் வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் 36 சதவீதத்திற்கும் வகைகூறியது. இவ்விடயத்தின் விபரமான பகுப்பொன்று அட்டவணை II-2இல் தரப்பட்டுள்ளது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1999இன் ரூ.70,210 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.73,316 மில்லியனுக்கு அல்லது 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது. வைப்புக்களின் கீழான பொறுப்புக்கள் வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் 27.2 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் இதில் அரசினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்கள் 28.0 சதவீதத்தினால் அதிகரித்தன. நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளின் கீழ் வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்கள் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தன. பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்களின் மொத்த வைப்புக்கள் 17.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினது முக்கிய கூறுகளின் ஒப்பீடொன்று அட்டவணை II- 2இல் காட்டப்படுகின்றது.

#### (iii) வருவாய்

2000ஆம் ஆண்டிற்கான வங்கியின் மொத்த வருவாய் 1999இன் ரூ.18,675 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.26,495 மில்லியனாக விளங்கியது. வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட வெளிநாட்டு வருவாய் 1999இன் மொத்தத் தேறிய வருவாயான 71.0 சதவீதத்திற்கெதிராக மொத்தத் தேறிய வருவாயில் 53.0 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான வட்டிவருவாய் 1999இன் 29.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 47.5 சதவீதத்திற்கு வகைகூறி நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் உயர்ந்த அளவுகளிலிருந்து அதிகரித்தளவில் கிடைத்த உழைப்பினைப் பிரதிபலித்தது. சொத்துப் புரழ்வு விகிதம் அதாவது வங்கியின் தொழிற்பாட்டு வினைத்திறனைப்

அட்டவணை 11.1

# இலங்கை மத்திய வங்கி

## 2000 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு ஐந்தொகை

ரூபாய்கள்

| 1999 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 2000 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | மூலதனம் | 15,000,000 | |
| 985,000,000 | 1,000,000,000 | மிகை | 985,000,000 | 1,000,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 67,642,019,005 | | தாள்கள் | 70,427,916,466 | |
| 2,567,837,948 | 70,209,856,953 | குத்திகள் | 2,887,974,377 | 73,315,890,843 |
| | | **வைப்புக்கள்** | | |
| 2,462,875,895 | | அரசு | 3,152,081,409 | |
| 14,963,408 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் | 42,422,726 | |
| 30,219,690,513 | | வர்த்தக வங்கிகள் | 31,804,532,340 | |
| 28,464,527,121 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரச, வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் | 23,578,260,939 | |
| 1,245,562 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ.71,546,400/- நீங்கலாக கட்டாய சேமிப்பு நிதி | 759,962 | |
| 502,643,702 | 61,665,676,201 | ஏனையவை | 517,133,867 | 59,095,191,243 |
| | 4,925,000,000 | நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம் | | 4,925,000,000 |
| | 561,822,500 | மூலதன உதவுதொகைக் கணக்கு | | 576,108,601 |
| | 62,223,703,560 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 78,278,569,259 |
| | 200,586,059,214 | | | 217,190,759,946 |

| 1999 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 2000 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 20,840,344,684 | | வெளிநாட்டிலுள்ள பணங்களும் நிலுவைகளும் | 23,426,978,023 | |
| 87,315,952,047 * | | வெளிநாட்டிலுள்ள பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 53,736,757,405 * | |
| 66,259,739 | 108,222,556,470 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் | 29,915,472 | 77,193,650,900 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| 35,665,869,959 | | அரசாங்கத்துக்கான முற்பணங்களும் கடன்களும் | 39,865,969,959 | |
| | | ஏனையவற்றிற்கு | | |
| 736,673,603 | | – நடுத்தர நீண்ட தவணை | 519,719,010 ** | |
| 11,318,501 | | – குறுந் தவணை | - | |
| 25,622,731,925 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் | 66,951,926,120 | |
| 561,822,500 | 62,598,416,488 | நிதி ஏனையநிறுவனங்களுக்கான உதவுதொகைகள் | 576,108,601 | 107,913,723,690 |
| | 29,765,086,256 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் | | 32,083,385,356 |
| | 200,586,059,214 | | | 217,190,759,946 |

* அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூ.5,527,675/- முகப்புப் பெறுமானத்திலும் 1965 மே 24இல் ரூ.57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப் பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள் மேற்குறித்த திகதிகளில் முறையே ரூ.2,933,697/- ஆகவும் ரூ.34,340/- ஆகவும் இருந்தன.

** வெளிநின்ற தொகையானது கடன் இழப்புக்களின் ஏற்பாடுகளுக்கான ரூ.2,343,338,893/-=இலிருந்து தேறியதாகும்.

## 2000 திசெம்பர் 31ஆம் நாளில் முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

ரூபாய்கள்

| 1999 | | 2000 | 1999 | | 2000 |
|---|---|---|---|---|---|
| | பொதுச் செலவுகளும் (சம்பளங்கள், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும் காணியும் கட்டடங்களினதும் அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும் உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளும் | | 18,674,917,309 | பெறப்பட்ட வட்டி ஏனையவை | 26,494,774,788 |
| 15,474,917,309 | | 22,494,774,788 | | | |
| | ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | | |
| 3,200,000,000 | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39(இ)இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு | 4,000,000,000 | | | |
| 18,674,917,309 | | 26,494,774,788 | 18,674,917,309 | | 26,494,774,788 |

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர
முதன்மைக் கணக்காளர்

கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:

2000 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(1)உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 (1)இற்கு அமையவும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (1)இற்கு ஏற்கவும் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2)இன் நியதிகளுக்கிணங்க நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு - 1.
23 மாச்சு 2001.

எஸ். சி. மாயதுன்ன
கணக்காய்வாளர் நாயகம்

## அட்டவணை II.2

## மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு

பொறுப்புக்கள்

| விடயம் | 1999 இறுதியில் ரூ.மில். | % | 2000 இறுதியில் ரூ.மில். | % |
|---|---|---|---|---|
| மூலதனமும் மிகையும் | 1,000 | 0.5 | 1,000 | 0.5 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 70,210 | 35.0 | 73,316 | 33.8 |
| வைப்புக்கள் | 61,666 | 30.7 | 59,095 | 27.2 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925 | 2.5 | 4,925 | 2.3 |
| மூலதன உதவுதொகை கணக்கு | 562 | 0.3 | 576 | 0.3 |
| மத்திய வங்கிப் பிணைகள் | - | - | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 62,223 | | 78,279 | 36.2 |
| இதில் - | | | | |
| கூறுகளின் பேரில் வழங்கப் பட்ட உத்தரவாதங்கள் | 8,790 | 4.4 | 13,622 | 6.3 |
| கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஒதுக்குகள் | 24,363 | 12.1 | 26,430 | 12.2 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கு | 6,693 | 3.3 | 6,870 | 3.2 |
| பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக் கணக்கு | 2,727 | 1.5 | 6,537 | 3.0 |
| இலாப நட்டக் கணக்கு | 5,480 | 2.7 | 8,416 | 3.9 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கணக்கு | 8,689 | 4.3 | 10,998 | 5.1 |
| ஏனையவை | 5,481 | 2.7 | 5,406 | 2.5 |
| மொத்தம் | 200,586 | 100.0 | 217,191 | 100.0 |

சொத்துக்கள்

| விடயம் | 1999 இறுதியில் ரூ.மில். | % | 2000 இறுதியில் ரூ.மில். | % |
|---|---|---|---|---|
| பன்னாட்டு ஒதுக்கு | 108,223 | 54.0 | 77,194 | 35.5 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் | 62,598 | 31.2 | 107,914 | 49.7 |
| ஏனைய சொத்துக்கள் | 29,765 | 14.8 | 32,083 | 14.8 |
| இதில்- | | | | |
| வழங்கப்பட்ட உத்தரவாதங் களுக்கான கூறுகளின் பொறுப்பு | 8,790 | 4.4 | 13,622 | 6.3 |
| வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகள் | 3,843 | 1.9 | - | - |
| சீராக்கற் கணக்குகள் பெறத்தக்க தொகை | 2,701 | 1.3 | 3,333 | 1.5 |
| ஏனையவை | 14,431 | 7.2 | 15,128 | 7.0 |
| மொத்தம் | 200,586 | 100.0 | 217,191 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பிரதிபலிக்கின்ற சராசரி மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக மொத்த வருமானம் 1999இன் 9.6 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 12.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

(iv) **செலவினம்**

வங்கியின் மொத்தச் செலவினம் 1999இன் ரூ.15,475 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.22,495 மில்லியனுக்கு அதிகரித்தது. இதில் 10.6 சதவீதம் நிருவாகச் செலவினத்தின் பேரிலானதாக இருந்த வேளையில் 68.3 சதவீதம் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கியிருந்தது. செலவினங்கள், ஒதுக்குகளுக்கான ஒதுக்கீடுகள், தேய்மானம் மற்றும் அறவிடமுடியாக் கடன் போன்றவற்றிற்கான ஒதுக்குகள் என்பனவற்றிற்கு ஒழுங்குகள் செய்த பின்னர் மீதியாகவுள்ள தேறிய இலாபமான ரூ.4000 மில்லியன் கொண்ட தொகை மத்திய வங்கிக்கான எந்தவொரு வெளிநின்ற அரசின் கடப்பாடுகளையும் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

### ஆ. கணக்கீட்டுக் கொள்கை

(i) பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாபநட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டுக் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளன.

(ii) வெளிநாட்டு நாணய மாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப் பட்டுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

(iii) முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கொள்விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

(iv) முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக்கம்பனிகளிலிருந்து வரவேண்டிய செயற்படாக் கடன்களுக்கு எதிராக பின்வரும் அடிப்படையில் செய்யப்பட்ட தேறிய ஒதுக்கங்களைக் கழித்துப் பெறப்பட்டவையாகும்.

| வரவேண்டிய கடன்களின் காலம் (மாதம்) | ஒதுக்கு % |
|---|---|
| 6 - 12 | 20 |
| 12- 18 | 50 |
| 18 இற்கு மேல் | 100 |

(v) நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் கொள்விலையில் பெறுமானத் தேய்வைக் கழித்துக் காட்டப்பட்டுள்ளன. பெறுமானத் தேய்வு குறைந்து செல்லும் நிலுவை முறையில் பின்வரும் வீதங்களில் கணிக்கப்படுகின்றது.

| விடயம் | சதவீதம் (ஆண்டொன்றுக்கு) |
|---|---|
| கட்டடங்கள் | 2 |
| பொருத்துக்களும் இணைப்புக்களும் | 10 |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 10 |
| உந்து ஊர்திகள் | 10 |
| தன்னியக்கக் கருவிகள் | 20 |
| ஏஎஸ்/ 400 பிரதான சட்டக்கணனிகள் | 20 |
| தனியாள் கணனிகள் | 25 |
| நூலக நூல்கள் | 33 1/3 |

நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமானதாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு ஒதுக்கப்படமாட்டாது.

(vi) **கையிருப்புக்கள்**

இவ்வாண்டில் எழுதுகருவிகள், மற்றும் பொறியியல் களஞ்சியங்கள் மீது ஏற்பட்ட மொத்தச் செலவு இலாப நட்டக் கணக்கில் கழிக்கப்பட்டதுடன் முடிவுக் கையிருப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

### (vii) வருமானக் கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாக் கடன்கள் மீதான வட்டிதவிர, வட்டியும் ஏனைய வருமானங்களும் ஏடுகளில் ஒன்று சேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

### (viii) தேறிய இலாபம்

இலாப நட்டக்கணக்கில் வெளிப் படுத்தப்பட்டுள்ள தேறிய இலாபமானது அனைத்துச் செலவுகளும் அறவிடப்பட்ட பின்னரும் பின்வருவனவற்றிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னருமாகும்.

(அ) செயற்படாக் கடன்கள்

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

(இ) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்கிய ஒதுக்குகளுக்கான ஏனைய அவசிய ஏற்பாடுகளும் ஒதுக்குகளும்.

## 2. வங்கித் தொழில் தொழிற்பாடுகள்

### (அ) பொது

மத்திய வங்கியின் முக்கிய குறிக் கோள்களுக்கிணங்க ரூபாவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெறுமதியினைச் உறுதிப்படுத்தும் விதத்தில், வங்கித் தொழில் திணைக்களமானது வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம், நாணயக் கொள்கையின் நடைமுறைப் படுத்தல் அரசிற்கும் வர்த்தக வங்கிகளுக்கும் வங்கியாளராகத் தொழிற்படுதல் மேலும் இங்கு ஆராயப்பட்ட மற்றைய சிறப்புப் பணிகளை வழங்குதல் ஆகிய விடயங்களில் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

### (ஆ) வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளும் பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவமும்

அதன் முக்கிய குறிக்கோளினைப் பேணும் விதத்தில், சந்தைப் போக்குகளுடன் ஒத்த விதத்தில் ரூபாவின் வெளிநாட்டுப்

பெறுமதியைப் பேணும் கடப்பாட்டினை மத்திய வங்கி கொண்டிருந்தது. இதன்படி ஐ.அ.டொலர்களுக்கான மத்திய வங்கியின் வாங்கும் விற்கும் வீதங்களை நாளாந்தம் அறிவிப்பதன் மூலமான அதன் வழிகாட்டல்களுடன் மற்றைய நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி சந்தையில் நிர்ணயிக்கப்படுகின்றது. வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மிக ஆற்றல் வாய்ந்த முறையில் கூடியளவு சுதந்திரத்துடன் தொழிற்படுவதனை அனுமதிக்கும் நோக்குடன் ஐ.அ.டொலருக்கான மத்திய வங்கியின் வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வீச்சு 2000ஆம் ஆண்டு யூன் 20ஆம் நாளன்று 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு விரிவாக்கப்பட்டது. வீச்சில் ஏற்பட்டுள்ள விரிவாக்கமானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படும் அதற்கான நிரம்பல் மற்றும் கேள்வியின் அடிப்படையிலும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட அபிவிருத்திகளையும் கருத்திற் கொண்டும் ஐ.அ.டொலருக்கான சந்தை வீதங்களைத் தீர்மானிப்பதற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த வீச்சு நவெம்பர் 3ஆம் நாளன்று 6 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு திசெம்பர் 11ஆம் நாளன்று 8 சதவீதத்திற்கும் மேலும் விரிவாக்கப்பட்டது.

ஒப்பீட்டு ரீதியில் ஒடுங்கிய உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் தற்காலிகமாகக் காணப்பட்ட கேள்வி மற்றும் நிரம்பலுக்கிடையிலான பொருத்தப்பாட்டின்மையை சமப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் அதன் ஒழுங்கான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி, அவசியமெனக் கருதும் வேளைகளில் இலங்கை ரூபாவிற்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர்களின் உடனடி வாங்கும் விற்கும் வீதங்களை அறிவிப்பதன் மூலம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள் மற்றும் நிதியியல்முறை உறுதிப்பாடு என்பனவற்றின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு நாளாந்த செலாவணி வீத முகாமைத்துவம் கவனமாக மேற்கொள்ளப்பட்டது. முக்கியமாக ஊகக் கொடுக்கல் வாங்கல்களைக் குறைப்பதற்காகவும், குறிப்பாக அதிகரித்த வலு மற்றும் பாதுகாப்புடன் தொடர்பான இறக்குமதிகளைக் கவனத்திற் கொண்டு

### அட்டவணை II.3
### முக்கிய செலாவணி வீத மாற்றங்கள் - 2000

| நாள் | நிகழ்வு | இலங்கை மத்திய வங்கி வாங்கும் வீதம் | இலங்கை மத்திய வங்கி விற்கும் வீதம் |
|---|---|---|---|
| 20 யூன் 00 | 5 சதவீதம் கொண்ட நடு வீதத்திற்கு பிரிவு விரிவாக்கப்பட்டது. நடுவீதம் 4 சதவீதத்தினால் தேய்வடைந்தது வாங்கும் வீதத்தின் 6 சதவீதத்திற்கு | 75.60 | 79.47 |
| 3 நவெ 00 | பிரிவு விரிவாக்கப்பட்டது- ஒடுங்கிய பிரிவு வாங்கும் வீதத்தின் 8 சதவீதத்திற்கு | 75.60 | 80.14 |
| 11 திசெ 00 | பிரிவு விரிவாக்கப்பட்டது- ஒடுங்கிய பிரிவு | 76.87 | 83.0196 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

செலாவணி வீதத்தினை நியாயமான மட்டத்தில் பேணுவதற்காவும் சந்தையில் வங்கியின் தலையீடு காணப்பட்டது. 2000ஆம் ஆண்டுப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் ஐ.அ.டொலர் 303.6 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையைத் தோற்றுவித்தன. 2000ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் முறையே ரூ.71.3642 ஆகவும் ரூ.72.8059 ஆகவும் காணப்பட்ட ஐ.அ.டொலருக்கான மத்திய வங்கியின் வாங்கும் விற்கும் வீதங்கள் ஆண்டின் இறுதியில் முறையே ரூ.76.9850 ஆகவும் ரூ.83.1346 ஆகவும் காணப்பட்டன.

உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை தீவிரப்படுத்தும் பொருட்டு வங்கி இலங்கை வெளிநாட்டுச் செலாவணிச் சங்கம் மற்றும் இலங்கை வங்கியாளர் சங்கத்துடனும் மிக நெருக்கமாக இணைந்திருந்தது. வெளிநாட்டுச் செலாவணிக்காக இருவழி

### அட்டவணை II.4
### 2000இல் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடனான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

ஆயிரத்தில்

| மாதம் | உடன் கொள்வனவுகள் | | உடன் விற்பனைகள் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ | இ. ரூபா | ஐ.அ.டொ | இ. ரூபா |
| சனவரி | - | - | - | - |
| பெப்புருவரி | - | - | - | - |
| மாச்சு | - | - | - | - |
| ஏப்பிறல் | - | - | - | - |
| மே | - | - | 68,710 | 5,072,702 |
| யூன் | - | - | 39,785 | 2,951,988 |
| யூலை | - | - | - | - |
| ஒகத்து | - | - | - | - |
| செத்தெம்பர் | - | - | 26,475 | 2,052,871 |
| ஒற்றோபர் | - | - | 60,942 | 4,725,443 |
| நவெம்பர் | - | - | 86,189 | 6,748,228 |
| திசெம்பர் | 2,000 | 158,280 | 21,521 | 1,700,925 |
| மொத்தம் | 2,000 | 158,280 | 303,622 | 23,252,267 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விலைக் குறிப்பீடுகளைச் செய்யும் பொருட்டு உள்ளூர் வர்த்தக வங்கிகளின் தேவைகளுக்கு சிறப்பு வலியுறுத்தல்கள் வழங்கப்பட்டன. வர்த்தக வங்கிகளை ஊக்குவிப்பதில் மத்திய வங்கி மிக முக்கிய பங்கினை ஆற்றியதுடன், இருவழி விலைக் குறிப்பீடுகளைச் செய்யும் நோக்கத்திற்காக றொயிட்டர் திரையின் நாளதுவரையான புதிய தரவுகளை நிறைவு செய்யும் வசதியினைப் பெற்றுக்கொள்வதில் வங்கிகளுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களுடன் சில சமயங்களில் இணைப்புக்கள்யும் ஏற்படுத்தியிருந்தது. இம் முயற்சியின் விளைவாக இவ்வசதியைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ஆண்டின் தொடக்கத்தில் 03இலிருந்து ஆண்டினிறுதியில் 15 இற்கு அதிகரித்தது. றொயிட்டர் நாளதுவரையான புதிய தரவுகளை நிறைவு செய்கின்ற வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னமும் ஆயத்தமாகாத மீதமுள்ள வர்த்தக வங்கிகளுக்கு, வங்கியிலுள்ள பரந்த பிரதேச வலையமைப்பு இணைப்பினைப் பயன்படுத்தி தற்காலிக அடிப்படையில் மாற்று ஒழுங்கில் திரையில் நாளது வரையான புதிய தரவுகளை நிறைவு செய்து கொள்ளும் வசதியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரை மணித்தியாலத்திற்கு ஒருமுறை குறிப்பிட்ட சந்தை வட்டி வீதங்களையும் செலாவணி வீதத்தினையும் வங்கியின் மூத்த முகாமைத்துவத்துக்காக வழங்கப்படும் மேலுமொரு வசதியும் வங்கித் தொழிற் திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

மத்திய வங்கி வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் முதலீடுகளூடாக அதன் வருவாயை மிகக் கூடியளவிற்கு உயர்த்திக் கொள்ளும் அதே வேளையில் உயர்ந்த மட்ட திரவத்தன்மையினையும், தாழ்ந்தமட்ட இடர் நேர் விளைவுகளையும் பேணும் குறிக்கோளுடன் மத்திய வங்கியினால் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, முதலீடுகளில் பெரும்பாலானவை ஐ.அ.டொலர்கள், இசுடேர்லிங் பவுண், யூரோ நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நிலையான வருமான பிணையங்களாகக் காணப்பட்டன. வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தினூடாக உருவாக்கப்பட்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வருமானம் 1999இன் ரூ.6.5 பில்லியனுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் ரூ.6.6 பில்லியனாக விளங்கியது.

## இ. நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல்

### (i) திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைகளை முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் அரச பிணையங்களை உடனடியாக வாங்குதல் அல்லது விற்றல், மீள் கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாக திறைசேரி உண்டியல்கள் பயன்படுத்தப்பட்ட வேளையில் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையாக திறைசேரி உண்டியல்களும், திறைசேரி முறிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.


#### 1. இரண்டாம் நிலைச் சந்தையில் உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களை உள்ளடக்கிய பங்கேற்கும் நிறுவனங்களுக்கான திறைசேரி உண்டியல்களின் மொத்த உடனடி விற்பனைகள் (கழிவிடல்) 2000ஆம் ஆண்டில் ரூ.15,675 மில்லியனாக விளங்கி, 1999இன் ரூ.6,982 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இருமடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. உதவிய முக்கிய காரணியாக தொடர்பான வாங்குநர்கள் சந்தையில் வர்த்தகம் செய்வதற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக திறைசேரி உண்டியல்களாகவே வழங்கும் மத்திய வங்கியின் தீர்மானமே காணப்பட்டது. கடந்த காலத்தில், விற்பனை செய்யப்பட்ட உண்டியல் இலங்கை மத்தியவங்கியின் பாதுகாப்பில் வைத்திருக்கப்பட்டு பற்றுச்சீட்டு மட்டுமே வழங்கப்பட்டது. விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த அளவில் 50 சதவீதத்திற்கும் கூடுதலானவை ஆண்டின்

முதற்காலாண்டிலேயே விற்பனை செய்யப்பட்டன. ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களின் விற்பனையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு அக்காலப்பகுதியில் சந்தைத் திரவத் தன்மை வரண்டு விட்டமையே காரணமாகும். இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை மற்றும் கொள்வனவுகள் வரைபடம் 1இல் தரப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் அரச பிணையங்களின்

வரைபடம் I
2000ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனைகளும் கொள்வனவுகளும்




விளைவு வீதங்களில் படிப்படியான அதிகரிப்பொன்று காணப்பட்டது. எடுத்துக் காட்டாக, 3மாத, 6 மாத மற்றும் 12 மாத முதிர்ச்சிகளின் மீதான மத்திய வங்கியின் கழிவிடல் விளைவு வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தில் முறையே 11.57 சதவீதமாகவும், 12.09 சதவீதமாகவும் 12.39 சதவீதமாகவும் இருந்து ஆண்டின் இறுதியில் முறையே 17.86 சதவீதத்திற்கும் 17.88 சதவீதத்திற்கும் 18.96 சதவீதத்திற்கும் அதிகரித்தன.


குறிப்பாக, ஆண்டின் பிற்பகுதியில் சந்தையில் பாரிய தொடர்ச்சியான திரவப் பற்றாக்குறை காணப்பட்டபோதும் மத்திய வங்கியினால் மேற் கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த உடனடிக் கொள்வனவுகள் (மீள் கழிவிடல்) 1999இன் ரூ.1,443 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.2,105 மில்லியனுக்கு அதிகரித்து 46 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. சில பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் நீண்டகால திரவப் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்காக இலங்கை மத்திய வங்கியிலிருந்து கடன்படுவதற்கு நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியினைப் பயன்படுத்துவதிலும் பார்க்க திறைசேரி உண்டியல்களை மீள் கழிவிடுவதற்கு முன்னுரிமையளித்தன.

இவ்வாண்டுக் காலத்தில் முதனிலைச் சந்தை விளைவு வீதங்களுடன் இணைக்கப் பட்டுள்ள மத்திய வங்கியின் மீள் கழிவிடல் விளைவு வீதங்களும் மிகக் கூடியளவில் அதிகரித்தன. 3மாத, 6மாத, 12 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான மீள் கழிவிடல் விளைவு வீதங்களும் மிகக் கூடியளவில் அதிகரித்தன. 3மாத, 6 மாத, 12 மாத, முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் மீதான மீள் கழிவிடல் விளைவு வீதங்கள் ஆண்டின் தொடக்கத்தில் முறையே 14.29 சதவீதமாகவும், 14.79 சதவீதமாகவும் 15.27 சதவீதமாகவும் இருந்து ஆண்டின் இறுதியில் முறையே 21.27 சதவீதத்திற்கும் 21.40 சதவீதத்திற்கும் 21.72 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

**2. மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்**

மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த அளவு 1999இல் விற்பனை செய்யப்பட்ட ரூ.307,795 மில்லியனுக்கு எதிராக ரூ.110,476 மில்லியனாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் மொத்த மீள் கொள்வனவு அளவில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு பணச்சந்தையில் குறிப்பாக 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய பாரிய திரவப் பற்றாக்குறையே காரணமாகும்.

வரைபடம் II
மாதாந்த மீள்கொள்வனவு அளவுகளும் வீதங்களும்
1999 மற்றும் 2000




ஆண்டின் தொடக்கத்தில் 9.25 சதவீதத்தில் இருந்த ஓரிரவு மீள் கொள்வனவு வீதம் ஆண்டின் முதலரைப் பகுதியில் படிப்படியாகக் குறைவடைந்து 2000ஆம் ஆண்டு ஏப்பிரல் 6 அளவில் 9.00 சதவீதத்தினை அடைந்தது. எனினும், சந்தைத் திரவ நிலைமை இறுக்கமடைந்தமையினால், மீள் கொள்வனவு வீதம் 2000ஆம் ஆண்டு மே 9அன்று 9.25 சதவீதத்தினையும் அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு யூன் 8 அன்று 9.50 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு யூலை 26 அன்று 11.00 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு ஓகத்து 31 அன்று 11.75 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் 26 அன்று 12.50 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் 29 அன்று 13.00 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 8 அன்று 15.00 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 21 அன்று 17.00 சதவீதத்திற்கும் அதிகரித்தது. நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்துடன் ஒத்துச் செல்லும் விதத்தில் மீள் கொள்வனவு வீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு செலாவணி வீதத்தின் மீது காணப்பட்ட மிதமிஞ்சிய அழுத்தத்தினைக் குறைப்பது மட்டுமன்றி சந்தையில் முக்கியமாகக் காணப்படும் அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்களின் போக்குகளுடன் இணைந்து செல்ல வைப்பதும் காரணமாக இருந்தது.

**3. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்**

2000ஆம் ஆண்டில், நேர் மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் மேலெல்லையை உறுதிப்படுத்துவதற்கு மேலதிகமாக, சந்தைக்கு திரவத் தன்மையை வழங்குவதிலும் முக்கிய பங்காற்றியது. நிதியியல் முறையில் காணப்பட்ட பாரியதும் தொடர்ச்சியானதுமான திரவத்தன்மைப் பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், மத்திய வங்கியின் ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2000ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. (வரைபடம் II உம் III) மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு ரூ.2,075,098 மில்லியன்களாக விளங்கி 1999இன் ரூ.213,349 மில்லியனிலும் பார்க்க ஏறத்தாழ ஒன்பது மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. திறைசேரி உண்டியல்களுக்கெதிரான நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதியும் 1999இன் ரூ.137,829 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.252,581 மில்லியனுக்கு அதிகரித்து 83 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. திறைசேரி முறிகளுக்கு எதிரான நேர்மாற்று மீள்கொன்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 1999இன் ரூ.75,520 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டின் ரூ.1,826,518 மில்லியனுக்கு கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. மாதாந்த நேர்மாற்று மீள் கொள்வனவு அளவுகளும் வீதங்களும் வரைபடம் IIIஇல் காட்டப்பட்டுள்ளன.

ஓரிரவு நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம்


வரைபடம் III
மாதாந்த நேர்மாற்று மீள்கொள்வனவு அளவுகளும் வீதங்களும்
1999 மற்றும் 2000




ஆண்டின் தொடக்கத்தில் 13.48 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டு மே 9 அன்று 13.00 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததெனினும் 2000ஆம் ஆண்டு மே 11 அன்று 13.04 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் அதன் பின்னர் சந்தையில் இறுக்கமடைந்த திரவத்தன்மையுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் ஆண்டின் இறுதிப்பகுதியில் 20.0 சதவீதத்திற்கு படிப்படியாக உயர்வடைந்தது. ஆண்டின் தொடக்கத்தில் ஓரிரவாக இருந்த இலங்கை மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் காலப்பகுதி சந்தையில் காணப்பட்ட திரவ நிலைமையை இலகுபடுத்தும் நோக்குடன் ஆண்டின் நடுப்பகுதியில் முப்பது (30)

நாட்களுக்கு அதிகரிக்கப்பட்டதெனினும் பின்னர் மீண்டும் ஓரிரவு முதிர்ச்சிக்கு மாத்திரம் குறைக்கப்பட்டது.

வரைபடம் IV
நேர்மாற்று மீள்கொள்வனவின் நாளாந்தர சராசரி அளவு
1999 மற்றும் 2000




**(ii) வங்கி வீதம்**

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 2000ஆம் ஆண்டில் மூன்று தடவைகள் 2000ஆம்ஆண்டு ஒத்தோபர் 2 அன்று 16 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 8 அன்று 18 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 21 அன்று 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது.

**(iii) நியதி ஒதுக்குத் தேவைப்பாடு**

இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2000ஆம் ஆண்டில் 11 சதவீதத்தில் காணப்பட்டது. வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 2000ஆம் ஆண்டு ஓகத்து 4 இலிருந்து புறக்கீடு செய்யப்பட்டது.

**(iv) குறுங்காலக் கொடுகடன்**

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் வேளாண்மைக் கடன்பாட்டாளர்களுக்கு சுழலும் கொடுகடன் வசதியை வழங்கிய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு 1994 ஏப்பிறலிலிருந்து சுழன்ற தொகைகளின் அளவிற்கு மட்டும் மீள் நிதியிடல் வசதி வழங்கப்பட்டது. இவ்வசதியின் கீழ் வெளிநின்ற மொத்தத் தொகையும் (அதாவது ரூ.12 மில்லியன்) 2000ஆம் ஆண்டுப் பகுதியில் முழுமையாக மீளளிப்புச் செய்யப்பட்டது.

**(v) நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொடுகடன்**

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் ரூ.4,925 மில்லியனாக மாற்றமின்றியிருந்தது. இவ்வாண்டில் மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ.104.3 மில்லியனாக இருந்தவேளையில் 1988ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின்கீழ் இலங்கை வங்கிக்கு ரூ.50.0 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. அறவிடமுடியாக் கடன்களின் ஒதுக்கிற்கு முன்னராக நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கொடுகடனின் மொத்த வெளிநின்ற தொகை 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.2,654 மில்லியனாகக் காணப்பட்டது.

## ஈ. அரசிற்கும் வர்த்தக வங்கிக்கும் வங்கியாளராக தொழிற்படுகின்றமை .

**(i) நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்**

வினைத்திறன் மிக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையினை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட மற்றைய வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கும் வங்கித் தொழில் திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைக் கணக்கு வசதிகளை வழங்கியது. மத்திய வங்கியில் அரச படுகடன் பிணையங்களின் முதனிலை வழங்கலை தன்னியக்கப்படுத்தவும் அவற்றிற்காக மத்திய வங்கியில் மத்திய வைப்பக முறையினை ஏற்படுத்தல் ஆகியன தொடர்பான முன் முயற்சிகளுடன் அரச பிணையங்களுக்கான முதனிலை ஏலங்களிலுள்ள பங்கேற்பாளர்களிடையேயான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கும் அதேபோன்று வர்த்தக வங்கிகள் மற்றும் அரசின் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கும் வசதியளிப்பதற்காக மின்னியல் நிதிய மாற்றல் முறை ஒன்றினை வங்கித் தொழில் திணைக்களம் அறிமுகப்படுத்த

வேண்டியிருந்தது. இத் திசையை நோக்கிய ஆரம்ப நடவடிக்கையாக, நடைமுறைக் கணக்குப் பிரிவு முழுமையாகத் தன்னியக்கப்படுத்தப்பட்டதுடன் மின்னியல் நிதிய மாற்றல் முறையினை பரீட்சார்த்த முறையில் தொழிற்படுத்துதல் தொடங்கியது. மேலும் ஒரு முழுமையான "அந்த நேரத்திலேயே முழுமையாகத் தீர்ப்பனவு செய்யும் முறை" யொன்றை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகளிலும் வங்கித் தொழில் திணைக்களம் சம்பந்தப்பட்டிருந்தது.

**(ii) அரச கணக்குகள்**

அரசின் வங்கியாளர் என்ற முறையில், இலங்கை மத்திய வங்கியானது அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் தேவைப்பட்ட வங்கித் தொழில் வசதிகளையும் வழங்கியது. 2000 ஆம் ஆண்டு இறுதியில் வங்கியினால் பேணப்பட்ட அரச கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 140 ஆக விளங்கியது.

**(iii) ஏற்றுமதியாளருக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி**

ஏற்றுமதியாளருக்கு அவற்றினால் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் வங்கியானது 1999இல் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ.349 மில்லியனுக்கு எதிராக 2000ஆம் ஆண்டில் ரூ.241 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மீளளித்தது.

**(iv) இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் மிகைக் கொடுப்பனவும்**

1964இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதற்காக அரசின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த உதவிக் கொடுப்பனவுகள் 1999இன் ரூ. 73,750உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ரூ.187,259 ஆகக் காணப்பட்டது. வெகுமதிக் கொடுப்பனவுகள் 1999இன் ரூ.3,300 உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ரூ.18,975 ஆகக் காணப்பட்டன.

**(உ) ஏனைய சிறப்புப் பணிகள்**

**(i) வெளிநாட்டு நிதி**

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பான் வங்கி, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் போன்ற வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்களையும் கொடைகளையும் பகிர்ந்தளிக்கும் மற்றும் மீள் கொடுப்பனவு செய்யும் வேலைகளைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. பன்னாட்டு அமைப்புக்களினாலும், வெளிநாட்டு அரசுகளினாலும் வழங்கப்பட்ட பத்து புதிய செயற்றிட்டக் கடன்களின் கீழான நிதியங்களின் பகிர்ந்தளிப்பு ஆய்விற்குரிய ஆண்டில் தொடங்கியது. வங்கித் தொழில் திணைக்களம் அரசின் சார்பில் பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைக்கிணை நிதியத்தினைத் தொடர்ந்தும் சேகரித்ததுடன் கொடை முகவர்களினால் செய்யப்பட்ட வேண்டுகோள்களின் மீது அத்தகைய நிதியினை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்தது. மேலும் வங்கித் தொழில் திணைக்களம் தொடர்ந்தும் அரசின் சார்பில் பல்வேறு நிறுவனங்களுக்கும் உத்தரவாதங்களை வழங்கியது.

**(ii) வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கீழான மீள் நிதியிடல் வசதிகள்**

பெருந்தோட்டத்துறை சீரமைப்புச் செயற்றிட்டம் மற்றும் 1999இன் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு புகலிட நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு வங்கித் தொழில் திணைக்களம் தொடர்ந்தும் மீள் நிதியிடலை வழங்கியது. தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் வடமேல் மாகாண நீர்மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றின் கீழான நிதியிடல் பகிர்ந்தளிப்புக்கள் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் நிறைவடைந்தன.

**(iii) கட்டாய சேமிப்பு நிதியம்**

1971ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க கட்டாய சேமிப்புக்கள் சட்டம் மற்றும் 1972ஆம்

ஆண்டின் 15ஆம் இலக்க வருமானம் மீதான உச்சவரம்பு மற்றும் கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனாக மத்திய வங்கி தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின்சார்பில் கட்டாய சேமிப்புக்கள் நிதியத்தினை நிருவகிப்பவராகவும் இருந்தது. 2000ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளன்று வங்கியினால் பேணப்பட்ட இந்நிதியத்தில் ரூ.72 மில்லியன் கொண்ட மீதி காணப்பட்டது.

### (iv) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

#### 1. 2000ஆம் ஆண்டில் ஆ.தீ. ஒன்றிய நாடுகளுடனான வர்த்தகம்

ஆ.தீ. ஒன்றிய பொறிமுறையினூடாக வழிப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி 1999இன் ரூ.42,724 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.66,111 மில்லியனுக்கு அதிகரித்தது. இத் திட்டததின் கீழ் இது இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளுக்கும் ஏற்றுமதிகளிலிருந்தான பெறுகைகளுக்கு மிடையிலான இடைவெளியை 1999இன் ரூ.36,685 மில்லியனிலிருந்து 2000 ஆம் ஆண்டில் ரூ.53,732 மில்லியனுக்கு விரிவாக்கியது. வர்த்தகத் தரவுகளிலிருந்து இந்தியா மற்றும் ஈரான் என்பனவற்றிலிருந்தான இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு மார்ச்சில் நடைமுறைக்கு வந்த இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவே இலங்கை மற்றும் ஈரான் என்பனவற்றிலிருந்தான இறக்குமதிகள் அதிகரித்தமைக்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

#### 2. பணிப்பாளர் சபையின் கூட்டமும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும்

ஆசியத் தீர்பபனவு ஒன்றிய பணிப்பாளர் சபையின் 29ஆவது கூட்டம் 2000ஆம் ஆண்டு மேயில் வங்காளதேசம் டாக்காவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பூட்டான் அரச நாணய அதிகாரசபை ஆ.தீ. ஒன்றியத்தின் புதிய உறுப்பினராக இணைந்து கொண்டது. ஒன்றியத்தின் தற்போதைய உறுப்பினர் எண்ணிக்கை எட்டாக விளங்குகிறது. பூட்டானுடனான வர்த்தகத் தீர்ப்பனவுகளை 2000ஆம் ஆண்டு ஒத்தோபரிலிருந்து ஆ.தீ. ஒற்றியத்தினூடாகத் தொடங்குமாறு உள்ளூர் வர்த்தக வங்கிகளுக்கு 2000ஆம் ஆண்டு செத்தெம்பரில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

2000 மேயில் நடைபெற்ற ஆ.தீ. ஒன்றிய பணிப்பாளர் சபையின் கூட்டம், ஒன்றியத்தின் உறுப்புரிமையை விரிவாக்குவதற்கான சாத்தியத்தினைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பக் குழுவின் விதந்துரைப்புக்களின் மீது ஒன்றிணைந்த கவனத்தினைச் செலுத்தியது. பணிப்பாளர் சபையானது குழுவின் அறிக்கையினை நுணுக்கமாக ஆராய்ந்ததன் பின்னர் குழுவினால் செய்யப்பட்ட யோசனைகளில் பெரும்பாலானவற்றை குறிப்பாக, தெரிந்தெடுக்கப்பட்ட சில நாடுகளை இணங்கவைத்து ஒன்றியத்தில் இணையுமாறு கேட்டுக் கொள்ளுவதன் மூலம் ஒன்றியத்தினை விரிவாக்குதல், ஒன்றியத்தில் புதிதாகச் சேருபவர்களை இணங்க வைக்கும் விதத்தில் ஆ.தீ. ஒன்றிய செயலக வேலைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் உறுப்புரிமை நாடுகளின் உதவு தொகைகளுடன் நிதியத்தினை உருவாக்குதல், என்பனவற்றை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது. கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றைய விடயங்களிடையே தற்போதுள்ள "உடன்" அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களுக்குப் புறம்பாக "நாளைய "அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களை அறிமுகப்படுத்துவதும் தீர்ப்பனவில் காணப்படும் தாமதங்களைக் குறைப்பதற்காக நிதியியல் தொடர் பூட்டல்களைத் தரமுயர்த்துவதும் காணப்பட்டன.

## நாணய வெளியீடு

தனியொரு நாணய வெளியீட்டு மேலாண்மையாளராக விளங்கும் மத்திய வங்கி 2000ஆம் ஆண்டிலும் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்துவதற்காகச் சட்டமுறையான நாணய வழங்கல் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2000ஆம் ஆண்டு இறுதியில் சுற்றோட்டத்தில் காணப்பட்ட நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளின் அளவு 1999 இறுதியில் காணப்பட்ட ரூ.70,210 மில்லியனுக்கெதிராக ரூ.73,316 மில்லியனாகக் காணப்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள மொத்த

நாணயத்தில், சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயம் 96.1 சதவீதத்தினை உள்ளடக்கியுள்ளது.

மத்திய வங்கியின் அதன் 50ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக 2000ஆம் ஆண்டு ஒகத்தில் ரூ.1,000 பெறுமதியினைக் கொண்ட பிரிட்டனின் பழைய நாணய அளவிலான வெள்ளி ஞாபகார்த்த முதல் வார்ப்பு நாணயக் குத்தியினை வங்கி வெளியிட்டது. நாணயத்தின் முன்பக்கத்தில் மத்திய வங்கிக் கட்டடம் பொறிக்கப்பட்டுள்ளதுடன் பின்பக்கத்தில் அட்ட லட்சுமிகளைக் குறிக்கும் விதத்தில் எட்டு மங்கள சின்னங்களினால் சூழப்பட்ட சூரியனும் பொறிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு திசெம்பரில் கொண்டாடப்பட்ட இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் வங்கியானது ஒருரூபா இனத்திலமைந்த ஞாபகார்த்த நாணயக் குத்தியினை வெளியிட்டது. செம்பும் நிக்கலும் கலந்த நாணயக் குத்தி துருப்பிடிக்காத தன்மையுடன் வார்க்கப்பட்டவிடத்து நிக்கல் முலாமிடப்பட்ட உருக்கு நாணயக் குத்திகள் பளபளப்பான சுற்றோட்டத்திற்கு விடப்படாத தன்மைகளுடன் காணப்பட்டன.

2001 மாச்சில் கொண்டாடப்படவுள்ள இலங்கை விமானப் படையின் 50ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் ஒருரூபா இன ஞாபகார்த்த நாணயக் குத்தியினை வார்ப்பதற்காக ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியில் விற்பனைக்குக் கிடைக்கத் தக்கதாக இருக்கும் அனைத்து ஞாபகார்த்தக் குத்திகளினதும் விபரங்கள் அவற்றின் விற்பனை விலைகளுடன் சேர்த்து இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

தற்பொழுது சுற்றோட்டத்திலுள்ள ஒரு சதத்திலிருந்து 10 ரூபா வரையான அனைத்து நாணயக் குத்திகளையும் கொண்ட புதிய நாணயக் குத்தி மடிப்பொன்றினை வெளியிடுவதற்கு வங்கி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. பிரமிட் வடிவிலமைந்த மடிப்பானது மேசைமேல் வைப்பதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சேகரித்துப் பேணவேண்டிய பொருளாக விற்கப்படுகின்றது.

திரு. ஜி.பி.எஸ்.எச். த சில்வாவினால் எழுதப்பட்ட "இலங்கையில் நாணயக் குத்தி, நாணயம் என்பனவற்றின் வரலாறு "என்ற தலைப்பினைக்கொண்ட நூலொன்றின் வரையறுக்கப்பட்டளவு பதிப்பு இலங்கை மத்திய வங்கியினால் அதன் 50ஆவது ஆண்டு நிறைவடைவதனை முன்னிட்டு வெளியிடப்பட்டது. மாணவர்கள், நாணய ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பெறுமதிமிக்க இந்நூலானது அனைத்துக் காலப் பகுதிகளையும் அதாவது கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து புதிய புத்தாயிரமாம் ஆண்டின் தொடக்கம் வரையான நாட்டின் நாணயக் குத்திகளின் வரலாற்றினைக் கொண்ட முழுமையானதொரு விளக்கங்களுடன் கூடியதொரு மூலமாகவுள்ளது. பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக மேலும் சில மேம்பாடுகளுடன் இந்நூல் 2001ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் வெளியிடப்படும்.

நாணயத் திணைக்களமானது, 1992இல் முதன் முதலாக தொடங்கப்பட்ட தன்னியக்க நாணய செய்முறைப்படுத்தல் முறையினைத் தரமுயர்த்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கிறது. இம்முறையினை தரமுயர்த்துகையில் இது புதிய கரன்சி சிஸ்டம்ஸ் இன்ரனசனலின் நாணய செய்முறைப்படுத்தல் பொறியின் அதே இயலளவைக் கொண்டிருப்பதோடு திணைக்களத்தின் நாணயச் செயல்முறைப்படுத்தல் வேலைகளுக்கு வசதியளிக்கும்.

போலி நாணயங்களை இனங்காண்பது தொடர்பாக திணைக்களமானது பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்காக தொடர்ந்தும் ஆய்வரங்குகளை நடத்தியது.

2000ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் நாணயத் திணைக்களமானது நாணயக் குத்திகள் பெருமளவில் தொகையாகக் காணப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட சமய வழிபாட்டு இடங்களில் நாணயங்களை சேகரிக்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் திணைக்களம் 6.4 மில்லியன் நாணயக் குத்திகளைச் சேகரிக்கக்கூடியதாயிருந்தது. இவை வார்க்கப் பட்டிருப்பின் இது ஏறத்தாழ ரூ.15.5 மில்லியன் செலவினை ஏற்படுத்தியிருக்கும். செயற்றிட்டத்தின் செலவினைக் கழித்தபின்னர் வங்கிக்கான தேறிய சேமிப்பு ஏறத்தாழ ரூ.15.3 மில்லியனாக இருந்தது.

-திறைசேரிக் கட்டடத்தில் அமைந்திருந்த நாணய தொழிற்பாட்டுப் பிரிவுகள் 2000ஆம் ஆண்டு மாச்சில் மத்திய வங்கியின் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டன. காசு மாற்றல் பீடங்கள் அவற்றின் கருமங்களை சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டன. அநுராதபுரம் மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகங்களின் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவுகள், தொடர்பான பிரதேசங்களில் அவற்றின் நாணய வழங்கல் மற்றும் நாணயங்களை ஏற்றுக்கொள்ளல் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன.

அட்டவணை II.5

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

| விடய எண். | விபரணம் | வழங்கப் பட்ட ஆண்டு | உலோகம் | விட்டம் மி.மீற். | நிறை கிறாம் | முகப்புப் பெறுமதி (ரூபா) | விற்பனை விலை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1990 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 500 |
| 2. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | வெள்ளி | 22 | 10.2 | 100 | 200 |
| 3. | சனாதிபதி ஆர். பிரேமதாசா (உறை) | 1992 | செப்பும் நிக்கலும் | 25.4 | 7.13 | 1 | 250 |
| 4. | 2300 மிகுந்து ஜெயந்தி (பாதுகாப்புப் பெட்டி) | 1993 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 700 |
| 5. | 2300 மிகுந்து ஜெயந்தி (உறை) | 1993 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 500 |
| 6. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | நிக்கல் செம்பு | 23.5 | 9.5 | 5 | 200 |
| 7. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 22 கரட் தங்கம் | 22.05 | 7.98 | 5000 | 8000 |
| 8. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | வெள்ளி | 38.61 | 28.28 | 1000 | 1200 |
| 9. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | பொலிமர் | | | 200 | 400 |
| 10. | 1996 கிரிக்கெட் உலக கிண்ணம் (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | வெள்ளி | 38.61 | 28.28 | 1000 | 1200 |
| 11. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | உருக்கு | 25.4 | 7.13 | 1 | 400 |
| 12. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | உருக்கு | 25.4 | 7.13 | 1 | 150 |
| 13. | இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | வெள்ளி | 38.61 | 28.28 | 1000 | 1200 |
| 14. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | செம்பும் நிக்கலும் | 25.4 | 7.13 | 1 | 500 |
| 15. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | உருக்கு | 25.4 | 7.13 | 1 | 200 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வங்கி மேற்பார்வை

வங்கித் தொழில் நிறுவனங்களுடன் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இந்நடவடிக்கைகளை வங்கித் தொழிற்சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் என்பனவற்றின் கீழ் மேற்கொண்டு வருகின்றது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் தற்போதுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளும் காணப்படுகின்றன. வங்கித் தொழில் முறையின் பாதுகாப்பினையும் ஆற்றலையும் உறுதிப்படுத்தும் பொருட்டு வங்கிகள் முன்மதியுடைய முறையில் தொழிற்பட்டு வருவதனையும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதுமே ஒழுங்கு விதி மற்றும் மேற்பார்வையின் குறிக்கோள்களாக இருந்தன. முன்னைய ஆண்டைப் போன்றே, வங்கிகளின் தலப் பரீட்சிப்புக்களையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களையும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளுவதன் மூலம் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வங்கித் தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் முன் மதியுடைய பணிப்புரைகளையும் வழிகாட்டல்களினையும் வழங்கியிருக்கிறது. மேற்பார்வைத் திணைக்களம் தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டத்தினையும் நிருவகிப்பவராகவுள்ளது. வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தினதும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினதும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது என்ற நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் விளைவாக 2000ஆம் ஆண்டு யூலையில் வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் நடவடிக்கைகளும் இதனிடம் ஒப்படைக்கப்பட்டதன் மூலம் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் விரிவடைந்தன. இதன்படி வங்கிகளின் உரிமம் வழங்கல் மற்றும் மூடிவிடுதல், வங்கிக்கிளைகள் மற்றும் வங்கிகளின் ஏனைய வாடிக்கையாளர் பணி அலுவலகங்களின் மீள் அமைவிடம் என்பன தொடர்பாக விதந்துரைப்புகள் 2000ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் நடவடிக்கைகளினது ஒருபகுதியாக மாறியது.

### புதிய வங்கிகள் மற்றும் வங்கிக்கிளைகளுக்கான ஒப்புதல்கள்

2000ஆம் ஆண்டுப் பகுதியில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக தொழிற்படுவதற்கு, உள்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வங்கித் தொழில் நிறுவனமொன்றான வரையறுக்கப்பட்ட சிலிங்கோ சேமிப்பு வங்கிக்கு, வங்கித் தொழிற்சட்டத்தின் பிரிவு 76 (இ) இன் கீழ் உரிமம்

வழங்கப்பட்டுள்ளது. மேலும் கொள்கை ரீதியாக வீடமைப்பு நிதியிடலில் ஈடுபடுவதற்காக மற்றொரு உள்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக வரையறுக்கப்படட தேசிய அபிவிருத்தி வங்கியின் வீடமைப்பு வங்கிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. வெளிநாட்டில் இசுடான்டட் சார்ட்டட் வங்கியினால் ஏஎன்இசட் கிறீன்லேஸ் வங்கி கையேற்கப்பட்டமையினால் 1881 இலிருந்து இலங்கையில் தொழிற்பட்டு வருகின்ற வெளிநாட்டு வங்கிக்கிளையொன்றான வரையறுக்கப்பட்ட ஏஎன்இசட் கிறீன்லேஸ் வங்கியானது வரையறுக்கப்பட்ட இசுடான்டட் சார்டட் கிறீன்லேஸ் வங்கி என மீளப்பெயரிடப்பட்டது. முன்னைய ஆண்டில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாக உரிமம் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட தேசிய மொர்கன்டைல் வங்கி 2000 மேயில் வங்கித் தொழில் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. ஆண்டின் இறுதியில் 26 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 12 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொழிற்பட்டதுடன் அவை வங்கிமேற்பார்வைத் திணைக்களத்தின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் வந்தன.

இவ்வாண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளுக்கு உள்நாட்டில் மொத்தமாக 24 கிளைகளையும், 22 விரிவாக்க அலுவலகங்களையும், 49 மாணவர் சேமிப்புப் பிரிவுகளையும, வெளிநாட்டில் பிரதிநிதித்துவ அலுவலகமொன்றினையும் திறப்பதற்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் ஆகிய இரண்டினதும் 53 கிளைகளின் அமைவிடங்களை மாற்றுவதற்கும் இவ்வாண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

துணை நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் புதிய நிதியியல் உற்பத்திகளை மேற் கொள்வதற்கும், அவற்றின் விஞ்ஞாபனம் மற்றும் சங்க உறுப்புரையின் மாற்றங்களைச் செய்வதற்கும் ஒப்புதல் வேண்டி வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரிக்கைகளும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

### முன்மதியுடைய ஒழுங்கு விதிகளும் பணிப்புரைகளும்

1995 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்சட்டத்தினால்) திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதித் தேவைப்பாடுகளுடன் வங்கித் தொழில் நிறுவனங்கள் இணங்கி ஒழுகுகின்றமைபற்றி வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. இத் தேவைப்பாடுகள் பின்வருவனவற்றுடன் தொடர்புடையனவாக இருந்தன.

i. ஆகக் குறைந்த மூலதன விகிதங்களைப் பேணுதல
ii. ஆகக் குறைந்த திரவச் சொத்து விகிதங்களைப் பேணுதல்.
iii. தனிக் கடன்பாட்டாளர் வரையறைகளைப் பேணுதல்.
iv. வங்கிகளில் பங்குடைமைகளின் மீது வரையறை
v. பொது விலைக் குறிப்பீட்டு கம்பனிகளிலும், தனியார் கம்பனிகளிலும் உள்ள பங்குடைமைகளில் வங்கிகள் செய்யும் முதலீடுகளின் மீது வரையறை.
vi. செயற்படா முற்பணங்களைப் பாகுபடுத்தல், செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியினை இடை நிறுத்தல் மற்றும் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கம்.
vii. வங்கிகளில் கணிசமான நலவுரித்துக்களைக் கொண்ட வங்கிகளின் பணிப்பாளர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக வழங்கப்பட்ட கடன்கள் மீது வரையறைகள்.
viii. வங்கிகளினால் அசையாச் சொத்துக்களின் கையேற்பு மற்றும் கொள்வனவு
ix. செய்தித் தாள்களில் கணக்காய்வு செய்யப்படாத அரையாண்டுக் கணக்குகளையும் வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் வெளியிடுதல், அத்துடன்
x. வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றினை உரிய நேரத்தில் மத்தியவங்கிக்குச் சமர்ப்பித்தல்.

### 2000ஆம் ஆண்டில் வங்கித் தொழிற் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நாணயச்சபையின் பின்வரும் பணிப்புரைகள் / தீர்மானங்கள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

i. உரிமம் பெற்ற வங்கிகளின் பங்கு மூலதனத்தில் வெளிநாட்டவர்களின் பங்கேற்பு மீதான ஆகக்கூடிய வரையறை தொடர்பாக 1998ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் நாணயச் சபையினால் மேற் கொள்ளப்பட்ட தீர்மானம் ; இதன்படி 2000ஆம் ஆண்டு 14 பெப்புருவரி தொடக்கம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கியின் பங்கு மூலதனத்தில் மொத்தமாக வெளிநாட்டவர்களின் பங்கேற்பு அதன் மொத்த

பங்கு மூலதனத்தின் ஆகக் கூடியது 49 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்துக்கு அதிகரிக்கப் பட்டது.

ii. மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பான திருத்தம் தொடர்பான பணிப்புரையொன்று 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29 அன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் வழங்கப்பட்டது. இதன்படி, .2001ஆம் ஆண்டு சனவரி 1 இலிருந்து, வங்கிகள், 4 1/2 சதவீதத்திற்கு குறையாத மைய மூலதனத்தினை உள்ளடக்கி, நேர்வு இடர் நிறையேற்றப்பட்ட சொத்தில் 9% சமமான தொகையை ஆகக்குறைந்த நியதி மூலதன விகிதமாகப் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. 2002ஆம் ஆண்டு சனவரி 1 தொடக்கம் ஆகக் குறைந்த மூலதன விகிதம் 5 சதவீதத்திற்கு குறையாத மைய மூலதனத்தை உள்ளடக்கி மொத்த மூலதனத்தில் 10 சதவீதமாக இருக்க வேண்டும்.

iii. வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 23, 25 மற்றும் 26 இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாண்புமிகு நிதியமைச்சரின் ஒப்புதலுடன், நாணயச்சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற் கொள்ளப்பட்ட கரைகடந்த வங்கித் தொழில் வாணிபம் தொடர்பாக 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7 அன்று கட்டளையொன்றை மேற்கொண்டது. இக் கட்டளையின் மூலம் இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கு வதிவோருடனான வாணிபம் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவு ஒன்றில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்து மீளப்பெறல் மற்றும் கணக்கில் வைப்புச் செய்தல் என்பனவற்றை உள்ளடக்கிய அங்கீகார மளிக்கப்பட்ட வாணிபங்கள் தொடர்பாகவும் ஏடுகள் மற்றும் பதிவேடுகள் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளின் நிறைவேற்று அலுவலர்களின் வங்கித் தொழில் அனுபவமும் தகைமைகளும் என்பன தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## தலத்திற்கு வெளியேயான கன்காணிப்பு முறை

தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின் கீழ், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகளினாலும் அவர்களின் தொழிற்பாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவ்வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்ட முக்கிய கூற்றுக்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் திரவச் சொத்துக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், மூலதனப் போதுமையின் காலாண்டுக் கூற்றுக்கள், வருமானமும் செலவும், செயற்படா முற்பணங்கள், பணிப்பாளர்களுக்கான கடன் வழங்கல், முதலீடுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

போக்குகளையும், வேறுபாடுகளையும் இனங்கண்டு கொள்வதற்காக திரட்டப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு வங்கியினதும் நிலைமையும் அதற்கு சமமான குழுவுடனும் அதேபோன்று முழுமையான வங்கித் தொழில் கைத்தொழிலுடனும் ஒப்பிடப்படுகின்றது. தகவல்கள் நுணுக்கமாகப் பரீட்சிக்கப்படுகின்றமையானது கணிசமானதும் வழமைக்கு மாறானதுமான மாற்றங்களை இனங்காணுவதற்கு உதவுவதுடன் குறிப்பிட்ட வங்கிகளின் நலிவுகளையும் மேலதிக புலனாய்வுகள் மற்றும் பரீட்சிப்புக்களையும் குறித்துக்காட்டும் நேரத்துடனேயான எச்சரிக்கை முறையாகவும் விளங்குகின்றது. அத்தகைய அவதானிப்புக்களின் அடிப்படையில் வங்கிகளின் தொழிற்பாடுகளின் மீது மோசமான தாக்கமொன்று ஏற்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு குறைபாடுகள் காணப்படுமிடத்து பொருத்தமான மீட்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கண்காணிப்பு அவர்களின் சொத்துக்கள் வைப்புக்கள், சொத்துக்களின் முதிர்ச்சித் தோற்றப்பாடு மற்றும் வருமானமும் செலவும் என்பன தொடர்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நடத்தப்படுகின்றது.

மேலும் அரசிற்கும் இரு வங்கிகளுக்குமிடையில் கையெழுத்தான ஒப்பந்தக் குறிப்புக்களின் கீழ் அவர்களின் இலக்குகளின் சாதனையினை அறிந்து கொள்வதற்காக காலாண்டு அடிப்படையில் இரு அரச வர்த்தக வங்கிகளினதும் செயலாற்றம் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பல வழிகளினூடாக அதன் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினைத் தரமுயர்த்தும் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. இவை, அலுவலர் எண்ணிக்கையினை

உயர்த்துதல், அலுவலர்களின் மேற்பார்வைத் தேர்ச்சியை தர முயர்த்துவதற்கு தீவிரமான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் தலத்திற்கு வெளியேயான பகுப்பாய்வுகளின் தரத்தினை மேம்படுத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தவேளையில் திரட்டப்பட்ட தகவல்கள் விரைவான முறையில் செய்முறைப்படுத்தப்பட்டன. சுவீடன் அரசினால் நிதியிடப்பட்ட தொழில்நுட்ப செயற்றிட்டத்தின் கட்டம் IIஇன் பயிற்சி மூலகம் 2000ஆம் ஆண்டில் நடுப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டது. செயற்றிட்டத்தின் முக்கிய கவனமானது தற்பொழுது பயன்படுத்தப்பட்டுவரும் , மூலதனம், சொத்துக்களின் தரம், முகாமைத்துவம், திரவத் தன்மை, என்பனவற்றின் துணையுடனான எதிர்பாரா இடரை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை அணுகுமுறையினூடாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின மேற்பார்வைத் தொழில் நுட்பத்தினையும் தேர்ச்சியையும் மேம்படுத்துவதிலேயே குவிந்திருந்தது. இம் மேற்பார்வை முறையானது, குறிப்பிட்ட வங்கியின் தொழிற்பாடுகளுடன் இணைந்துள்ள எதிர்பாரா இடர்களையும் அத்தகைய இடர்களை ஈடுசெய்வதற்கு வங்கிக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களையும் கண்டறிந்து கொள்ள உதவும். சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் செயற்றிட்டத்தின் கீழ் தலத்திற்கு வெளியேயான செயற்பாடுகளிலும் அதே போன்று தலத்திலேயான மேற்பார்வை முறையிலுமுள்ள வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களது மேற்பார்வையின் தேர்ச்சியைத் தரமுயர்த்துவதற்கு பல்வேறு தொழில்நுட்ப முறைகள் முன் மொழியப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் இவ்வுத்தேச தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களை ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கியின் ஆளுநரும் அலுவலர்களும் மாதாந்தம் தொடர்ந்தும் சந்தித்தனர். இக் கூட்டங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வங்கித் தொழில் தொழிற்பாட்டுடன் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடுவதற்குமான கூட்ட வசதியொன்றை உருவாக்கியதுடன், வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்கும் இடையே நெருங்கிய உறவு முறையைக் கட்டியெழுப்புவதற்கும் உதவியது.

## தல பரீட்சிப்புக்கள்

நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், அனைத்து வங்கித் தொழில் நிறுவனங்களும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் நடத்தப்படுகின்ற பரீட்சிப்புக்களுக்கு அதாவது தலப்பரீட்சிப்புக்களுக்கு உட்பட வேண்டியனவாகும். தற்பொழுது ஒவ்வொரு வங்கியும் இரண்டாண்டுக்கு ஒருமுறை பரீட்சிக்கப்படுகின்றது. வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பரீட்சிப்போர் செயற் பரப்பு மற்றும் வாணிபத்தின் அளவு என்பனவற்றின் அடிப்படையில் தலைமை அலுவலகத்துக்கும் ஒவ்வொரு வங்கியினதும் தெரிந்தெடுக்கப்பட்ட கிளைகளுக்கும் சமூகமளிப்பர்.

தலப்பரீட்சிப்புக்களின் தன்மையும் செயற்பரப்பும் முக்கியமாக, கணக்கேடுகள் மற்றும் பதிவுகளிலிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வங்கிகளின் சொத்துக்களின் தரத்தினை மதிப்பிடுவதற்கும் அவற்றின் நிதியியல் நிலைமைகள் பற்றி பொதுவான மதிப்பீடொன்றிற்கு வருவதற்குமே பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. கடன் செலுத்தத் தவறுகின்ற இடர்நேர்வு (கடன் இடர் நேர்வு) சந்தை இடர்நேர்வு , திரவத் தன்மை இடர்நேர்வு, மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு போன்ற பல்வேறுபட்ட வங்கித் தொழில் இடர்நேர்வுகளுக்கு வங்கியானது உட்படுகின்ற அளவும் அத்தகைய இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடிய வங்கியின் இயலாற்றலும், அவ்வாறு இருப்பின் அதன் ஆகக் குறைந்த மட்டமும் வங்கியின் பொதுவான மதிப்பீட்டில், மதிப்பிடப்படுகின்றன. தலப் பரீட்சிப்புக்களினது செயற்பரப்பின் ஒரு பகுதியாக மூலதனப் போதுமை, தர முகாமைத்துவம், வருவாய் மற்றும் திரவத் தன்மை என்பனவும் மதிப்பிடப்படுகின்றன. மேலும், நிதியத் தேவைப்பாடுகள், பொருந்தத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு வங்கிகள் இணங்கி ஒழுகும் தன்மை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள், முறைகள் மற்றும் வழிமுறைகள் என்பனவும் பரீட்சிக்கப்படுகின்றன.

ஆய்விற்குரிய ஆண்டில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 14 தலப்பரீட்சிப்புக்களைத் தொடங்கியுள்ளது. இது 10 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் 4 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட 7 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் தலப் பரீட்சிப்புக்கள் 2000ஆம் ஆண்டில் முடிவடைந்தன.

## வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிருவாகம்

1987இல் தொடங்கப்பட்ட வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. வைப்புக்களை ஏற்கின்ற எந்த ஒரு நிறுவனமும் சேர்ந்து கொள்ளக்கூடிய தன்னிச்சையான வைப்புக் காப்புறுதித் திட்டமாக இது உள்ளது. தற்பொழுது இத் திட்டத்தின் கீழ் நான்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே அவற்றின் கிராமிய வங்கிகளினது வைப்புக்கள் தொடர்பான

வைப்புக்களை உள்ளடக்கத்தக்க காப்புறுதியினைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு ரூ.100 இற்கும் காலாண்டொன்றிற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணம் 3.75 சதமாக இருந்ததுடன் 2000ஆம் ஆண்டில் கட்டணம் மூலமாக வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட தொகை ரூ.1.1 மில்லியனாக இருந்தது. 1997இல் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் சேர்த்து, 2000ஆம் ஆண்டு திசெம்பர் 31 அன்று நிதியம் ரூ.102.9 மில்லியனாகக் காணப்பட்டது. இந் நிதியங்கள் ரூ.120.5 மில்லியன் முகப்புப் பெறுமதியைக் கொண்ட திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

தற்போதுள்ள தன்னிச்சையான திட்டத்திற்குப் பதிலாக பணிப்புடைய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்துவது தொடர்பான சாத்தியம் பற்றி ஆராய்வதற்கும், விதந்துரைப்புக்களைச் செய்வதற்குமாக செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. செயலணிக் குழுவின் விதந்துரைப்புக்கள் 2001ஆம் ஆண்டு தொடக்கத்தில் மேற்கொள்ளப்படும்.

## வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முன்மதித் தேவைப்பாடுகளுக்கு நிதிக் கம்பனிகள் இசைவாக நடந்து கொள்ளுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பான அதன் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. திணைக்களம் மேற்குறிப்பிட்ட குறிகோள்களை அடைவதற்கு முக்கியமாக தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்களூடாகவும் தலப்பரீட்சிப்புக்களூடாகவும் கடுமையாக முயன்றுவருகின்றது.

பதிவு செய்யப்பட்ட 25 நிதிக் கம்பனிகளினதும் ஒன்று திரட்டப்பட்ட ஐந்தொகை 1999ஆம் ஆண்டு மார்ச்சு 31 இலும் 2000ஆம் ஆண்டு மார்ச்சு 31 இலும் உள்ளவாறு அட்டவணை II.6 இல் தரப்பட்டுள்ளது 2000ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் ரூ.3,633 மில்லியனால் அதிகரித்தன. சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக ரூ.3,221 மில்லியனால் அதிகரித்த முற்பணங்களின் வளர்ச்சியிலும் ரூ.444 மில்லியனால் அதிகரித்த திரவச் சொத்துக்களின் வளர்ச்சிலும் பிரதிபலித்தது. முக்கிய சொத்து வகைகளின் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை. எனினும், கடந்த மூன்றாண்டுகளில் போன்றே குத்தகை நிதியிடல் தொடர்ந்தும், விரிவடைந்தது. மொத்த வைப்புக்களும் மூலதன நிதியங்களும் முறையே ரூ.3,065 மில்லியனாலும் ரூ.391 மில்லியனாலும் அதிகரித்தன.

### தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 25 நிதிக் கம்பனிகளினாலும் காலத்திற்குக் காலம் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களை பகுப்பாய்வு செய்தமையின் மூலம் அக் கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் திரவச் சொத்துக்களின் வாராந்தக் கூற்றுக்கள், வழங்கப்பட்ட பாரிய முற்பணங்களின் மாதாந்தக் கூற்றுக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், செயற்படா முற்பணங்களின் காலாண்டுக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு ஐந்தொகை மற்றும் நிதியியல் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்ளும் நோக்குடனும் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கும் சட்டத்தின் கீழான பணிப்புரைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் அவர்கள் இணங்கி ஒழுகுவதனை கண்காணிக்கும் பொருட்டும் கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள், திரவத்தன்மை விகிதம், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை, அறவிடமுடியா மற்றும் ஐயப்பாட்டுக் கடன்கள் போன்றவற்றிற்கான ஒதுக்கங்கள் என்பனவற்றை பணிப்புரைகள் உள்ளடக்கியிருந்தன. எந்தவொரு மோசமான நிகழ்வுகளையும் அடையாளங் காணவும் அவற்றைக் கட்டுபடுத்துவதற்குமாக நேரகாலத்துடன் எச்சரிக்கும் முறை தொடர்ந்துமிருந்தது.

### தலப்பரீட்சிப்புக்கள்

இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் மூன்று நிதிக் கம்பனிகளின் பரீட்சிப்புக்களை நடாத்தியது. மூலதனப் போதுமை, சொத்துக்களின் தரம் முகாமைத்துவ வினைத்திறன், வருவாய் மற்றும் திரவத் தன்மை என்பனவற்றை மதிப்பிடும் பொருட்டு கம்பனிகளின் கணக்கேடுகளும் ஏனைய பதிவுகளும் நுணுக்கமாக ஆராயப்பட்டதுடன் கம்பனிகளின் அலுவலர்களுடன் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாடுகள், முறைகள் மற்றும் நியதித் தேவைப்பாடுகளுடன் கம்பனி இணங்கி ஒழுகும் தன்மை என்பனவும் பரீட்சிக்கப்பட்டன.

# அட்டவணை 11.6
## தொழிற்படும் நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகை

| வகை | 1999 மாச்சு இறுதியில் | | 2000 மாச்சு இறுதியில் | |
|---|---|---|---|---|
| | ரூ.'000. | % | ரூ.'000. | % |
| **பொறுப்புக்கள்** | | | | |
| மூலதன நிதியங்கள் | | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 658,587 | | 660,920 | |
| பங்குக் கட்டணம் | 190,546 | | 212,546 | |
| மூலதன ஒதுக்கு | 892,553 | | 882,450 | |
| பொது ஒதுக்கு | 1,317,166 | | 1,552,157 | |
| ஒதுக்கு நிதியம் | 543,740 | | 623,108 | |
| ஏனைய ஒதுக்குகள் | 47,469 | | 74,147 | |
| இலாப நட்டக் கணக்கு | 67,736 | | 101,643 | |
| மொத்த மூலதன நிதியங்கள் | 3,717,797 | | 4,106,971 | |
| கழிக்க: பிற்போடப்பட்ட செலவுகள் | 6,775 | | 5,038 | |
| **தேறிய மூலதன நிதியங்கள்** | 3,711,022 | 13.47% | 4,101,933 | 13.15% |
| அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கு | 1,072,820 | 3.89% | 1,211,151 | 3.88% |
| பொது மக்களின் வைப்புக்கள் | 16,970,850 | 61.58% | 20,035,593 | 64.23% |
| கடன்பாடுகள் | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | 882,742 | | 529,243 | |
| ஏனையவை | 1,485,925 | | 1,610,897 | |
| மொத்தக் கடன்பாடுகள் | 2,368,667 | 8.59% | 2,140,140 | 6.86% |
| ஏனைய பொறுப்புக்கள் | 3,437,024 | 12.47% | 3,704,556 | 11.88% |
| முழு மொத்தம் | 27,560,383 | 100.00% | 31,193,373 | 100 |
| **சொத்துக்கள்** | | | | |
| திரவச் சொத்துக்கள் | | | | |
| காசும் வங்கிகளிலிருந்து வரவேண்டியவையும் | 408,663 | | 392,538 | |
| நிலையான வைப்புக்கள் | 575,544 | | 617,718 | |
| திறைசேரி உண்டியல்கள் | 2,095,626 | | 2,513,731 | |
| மொத்த திரவச் சொத்துக்கள் | 3,079,833 | 11.17% | 3,523,987 | 11.30% |
| முதலீடுகள் | | | | |
| துணை மற்றும் கூட்டிலுள்ள கம்பனிகளின் பங்குகள் | 724,817 | | 709,474 | |
| தொடர்புடைய கம்பனிகளின் பங்குகள் | 281,291 | | 273,846 | |
| ஏனைய கம்பனிகளிலுள்ள பங்குகள் | 627,878 | | 611,975 | |
| பங்குகளில் வர்த்தக முதலீடுகள் | 251,362 | | 241,612 | |
| மொத்த முதலீடுகள் | 1,885,348 | 6.84% | 1,836,907 | 5.89% |
| முற்பணங்கள் | | | | |
| கடன்கள் | 1,240,181 | | 1,900,054 | |
| வாடகைக் கொள்வனவுகள் | 2,232,039 | | 2,489,631 | |
| குத்தகை | 11,117,742 | | 13,201,154 | |
| உண்மைச் சொத்துக்கள் | 1,648,635 | | 1,907,683 | |
| ஏனைய முற்பணங்கள் | 1,730,795 | | 1,691,997 | |
| மொத்த முற்பணங்கள் | 17,969,392 | 65.20% | 21,190,519 | 67.93% |
| நிலையான சொத்துக்கள் | | | | |
| இறையில் காணியும் கட்டடங்களும் | 1,725,353 | | 1,732,633 | |
| தளபாடங்கள், பொருத்துக்கள், அலுவலக உபகரணங்கள் | 242,163 | | 294,325 | |
| உந்து ஊர்திகள் | 188,677 | | 184,015 | |
| பொறிகள் பொறித்தொகுதிகள் | 1,998 | | 1,320 | |
| குத்தகைச் சொத்துக்கள் | 57,811 | | 55,150 | |
| ஏனையவை | 60,014 | | 59,106 | |
| மொத்த நிலையான சொத்துக்கள் | 2,276,016 | 8.26% | 2,326,549 | 7.46% |
| ஏனைய சொத்துக்கள் | 2,349,794 | 8.53% | 2,315,411 | 7.42% |
| முழு மொத்தம் | 27,560,383 | 100.00% | 31,193,373 | 100.00% |
| அறிவித்த கூட்டு நிலையங்கள் | 25 | | 25 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மேலும், 2001 ஆம் ஆண்டிற்கான ஆண்டு உரிமங்களை வழங்க முன்னர் நிதிக்கம்பனிகளின் உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இப் பரீட்சிப்புக்களின் போது தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்களிலிருந்து கண்டறியப்பட்ட நுண்ணாய்வுக்குரிய விடயங்கள் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

### முறிவடைந்த நிதிக்கம்பனிகள்

நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நாணயச்சபைக்கு நிருவாகமும் முகாமைத்துவமும் முன்னர் கையளிக்கப்பட்ட முறிவடைந்த ஒன்பது நிதிக் கம்பனிகளில் முறிவடைந்த நான்கு நிதிக் கம்பனிகள் 2000ஆம் ஆண்டு இறுதியில் ஒடுக்கப்பட்டன. எஞ்சிய ஐந்து கம்பனிகளினதும் நிருவாகமும் முகாமைத்துவமும் தொடர்ந்தும் நாணயச் சபையிடமே கையளிக்கப்பட்டிருக்கும். அத்தகைய கம்பனி ஒன்று தொடர்பான ஒடுக்கிவிடுவதற்கான விண்ணப்பம் நீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளது. இவ்வாண்டில் நாணயச்சபைக்குக் கையளிக்கப்படாத ஆனால் மத்திய வங்கியினால் மீள் நிதியிடல் கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்த முறிவடைந்த மற்றொரு கம்பனியினை ஒடுக்கிவிடுவதற்காக "ஒடுக்கி விடுவோன்" ஒருவர் நியமிக்கப்பட்டார்.

நாணயச் சபையிடம் தொடர்ந்தும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஐந்து கம்பனிகளில், மூன்று கம்பனிகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து அவற்றின் வைப்பாளர்களுக்கு நிவாரணங்களை வழங்கின. அத்தகைய கம்பனியொன்று வெளிநின்ற மீதி மூலதனத்தில் 15 சதவீதம் கொண்ட உயர்ந்த நிவாரணக் கொடுப்பனவு ஒன்றைச் செய்தவேளையில் இன்னுமொரு கம்பனி மூலதனக் கொடுப்பனவை முழுமையாகச் செய்து மூன்றாவது கம்பனி திருத்தப்பட்ட வட்டி வீதங்களுடன் அனைத்து வைப்பாளர்களுக்கும் தொடர்ந்தும் முழுக் கொடுப்பனவுகளையும் செய்தது. இந் நிவாரணக் கொடுப்பனவுகள், முன்னைய ஆண்டுகளின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களையும் கம்பனிகளின் சொத்துக்களை விற்றமையின் மூலமும் கடன் மீளப் பெறுகைகளின் மூலமும் பெறப்பட்ட பெறுகைகளையும் பயன்படுத்திச் செய்யப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் மற்றைய இரண்டு கம்பனிகளும் வைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகள் எதையும் செய்யவில்லை. ஒரு கம்பனியின் நிதி தீர்ந்துவிட்ட வேளையில் மற்றயதை ஒடுக்கி விடுவதற்கான வேலைகள் தொடங்கியமையானது வைப்பாளர்களுக்கு மேலும் மீள் கொடுப்பனவுகளைச் செய்வதிலிருந்தும் தடைப்படுத்தியமையே இதற்கான காரணமாகும்.

ஒன்று சேர்ந்த வட்டியுடன் வெளிநின்ற மீள் நிதியிடல் கடன்கள் தொடர்பாக வரவேண்டிய மொத்தத் தொகை மற்றும் மத்திய வங்கிக்குச் சேரவேண்டிய ஏனைய தொகைகள் மற்றும் நிருவாகச் செலவு என்பன தொடர்பாக முறிவடைந்த நான்கு நிதிக் கம்பனிகளுக்கு இவ்வாண்டில் நியமிக்கப்பட்ட ஒடுக்குவோர்களுடன் மத்திய வங்கி கோரல்களை சமர்ப்பித்தது. மீள் நிதியிடல் வழங்கப்பட்ட மற்றைய கம்பனிகளில் ஒரு கம்பனி இவ்வாண்டில் ரூ.0.3 மில்லியனை மீளச் செலுத்தியது. மத்திய வங்கியுடன் முன்னர் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் முறிவடைந்த நிதிக் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பாக அரச வங்கியொன்று ரூ.50 மில்லியன் கொண்ட மீள் நிதியிடலைப் பெற்றது.

### கொள்கை நடவடிக்கைகள்

கடன் வழங்கல், திரவச் சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் நிதிக் கம்பனிகளின் பங்கு முதலீடுகள் என்பன தொடர்பாக நாணயச் சபையினால் வழங்கப்பட்ட முன்மதியுடைய பணிப்புரைகளின் திருத்தங்களுக்கான முன் மொழிவுகள் பற்றி திணைக்களம் நிதிக் கம்பனிகளின் சங்கத்துடன் பல கலந்துரையாடல்களை நடத்தியது. அதேவேளை 2000ஆம் ஆண்டு ஓகத்தில் இயற்றப்பட்ட 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக குத்தகைக்குவிடல் சங்கத்தினதும் நிதிக் கம்பனிகள் சங்கத்தினதும் உறுப்பினர்களுடன் ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட்டன.

## அபிவிருத்தி நிதி

அபிவிருத்தி நிதித் திணைக்களம் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

i. வெளிநாட்டு தொடர்க் கொடுகடன்களின் மூலம் கிடைத்த கடன் பெறுகைககளை சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்காகப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் கடனாக வழங்கல்.

ii. அத்தகைய செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் மீது கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கல், உத்தரவாதக் கட்டணங்களைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியினை நிருவகித்தல். அத்துடன்,

iii. கடன் மீளச் செலுத்தத் தவறுவதனை தவிர்க்கும் பொருட்டு, கடன் நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கடனளிப்பிற்குப் பின்னான பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல்.

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத் துறைச் செயற்றிட்டம், பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம் என்பனவற்றின்கீழ் கடன் பகிர்ந்தளிப்புக்கள் விரைவடைந்தமையின் காரணமாக அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நடவடிக்கைகள் 2000ஆம் ஆண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தன. நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத் துறைச் செயற்றிட்டமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட நிதி உதவியுடன் 1999இன் முதலரைப் பகுதியில் தொழிற்படத் தொடங்கியது. 1999 ஆண்டுப் பகுதியில் செயற்றிட்டத்தில் பங்கேற்பதற்கு தகைமை பெற்றிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இருக்காமையினால் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் மெதுவாக இருந்தது. எனினும், 2000ஆம் ஆண்டு யூலையில் மேலும் மூன்று நிதியியல் நிறுவனங்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக உள்ளடக்கப்பட்டமையுடன் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் பெருமளவு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது. பெருந்தோட்ட சீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழான கடன் நிதிகளின் பகிர்ந்தளிப்பு 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் வலுவுடன் காணப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தரகால உதவிச் செயற்றிட்டத்தின்கீழ் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பானது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் கடன் மீதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டமைகளின் காரணமாக ஆய்விற்குரிய ஆண்டில் பொதுவாக நிறைவு பெற்றன. எனினும், பெருந்தோட்ட சீரமைப்பு செயற்றிட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான உத்தரவாதப் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுவந்தன.

திணைக்களம் தற்போது நடைபெற்றுவரும் அதேபோன்று ஏற்கெனவே முடிவடைந்த திட்டங்கள் தொடர்பான செயற்றிட்டப் பரீட்சிப்புக்களையும், பின்தொடர் வேலைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. 2000ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விபரமான நடவடிக்கைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

## நடைமுறையிலுள்ள கொடுகடன் திட்டங்கள்

### பெருந்தோட்ட சீராக்கச் செயற்றிட்டம்

பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழான மீள் நிதியிடலின் மொத்த ஒப்புதல்கள் 1999இன் 1,513 மில்லியனுக்கு எதிராக 2000ஆம் ஆண்டில் ரூ.1,211 மில்லியனாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் ஒப்புதல்கள் மிதமான மட்டத்தில் காணப்பட்டமைக்கு முன்னைய ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி என்பனவற்றிலிருந்தான கடன் நிதியங்கள் உயர்ந்தளவில் (ஏறத்தாழ 90 சதவீதம்) பயன்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், 2000ஆம் ஆண்டு இறுதியில் மொத்த நிதிப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.1,300 மில்லியனாக அமைந்தமைக்கு முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட சில மீள்நிதியிடல் ஒப்புதல்கள் 2000ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டமையே காரணமாகும். 1996இலிருந்து 2000 வரையான காலப்பகுதியில் செயற்றிட்டத்தின் கீழ் மொத்த நிதிப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.4,677 மில்லியனாகக் காணப்பட்டன. மீள் நிதியிடல் ஒப்புதல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புக்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை II.7 இல் தரப்பட்டுள்ளன

**அட்டவணை 11.7**
பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்:
நோக்க அடிப்படையிலான
மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும்

ரூபா மில்லியன்

| நோக்கம் | 1999 | | 2000 | | 1996-2000 | |
|---|---|---|---|---|---|---|
| | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு | ஒப்புதல் | பகிர்ந்தளிப்பு |
| மரப் பயிர் அபிவிருத்தி | 840.6 | 984.8 | 884.9 | 947.0 | 3,177.9 | 2,728.6 |
| பதனிடல், அபிவிருத்தி மற்றும் மாசடைதல் கட்டுப்பாடு | 424.9 | 575.3 | 270.2 | 271.4 | 2,165.5 | 1,302.7 |
| பணி ஊர்திகள் மற்றும் கருவிகள் | 247.0 | 249.4 | 56.0 | 81.7 | 1,042.6 | 646.0 |
| மொத்தம் | 1,512.5 | 1,809.5 | 1,211.1 | 1,300.1 | 6,386.0 | 4,677.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே ரூ.885 மில்லியன் பெறுமதியுடைய கடனில் பெரும்பங்கு மரப்பயிர் அபிவிருத்திக்காக ஒப்புதலளிக்கப்பட்டவிடத்து இவ்வகைக்கான நிதிகளின் பகிர்ந்தளிப்பு 1999 காலப்பகுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மீள் நிதிகளின் ஒருபகுதி உட்பட ரூ.947 மில்லியனாகக் காணப்பட்டது. செயற்பாடு, மேம்படுத்தல் மற்றும் மாசடைதல் கட்டுப்பாட்டு வகையின்கீழ் மீள் நிதியிடலாக ரூ.270 மில்லியன் ஒப்புதலளிக்கப்பட்ட வேளையில் ரூ.271 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதேபோன்று பணி ஊர்திகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு வகையின்கீழ் மீள் நிதியிடலுக்காக ரூ.56 மில்லியன் ஒப்புதலளிக்கப்பட்ட வேளையில் ரூ.82 மில்லியன் கொண்டதொரு தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

இத்திட்டத்திலுள்ள பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிடையே, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி 2000ஆம் ஆண்டில் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுக்கான மொத்த பகிர்ந்தளிப்பில் 28.3 சதவீதத்திற்கு வகைகூறி ரூ.368 மில்லியன்களைக் கொண்டிருந்தது. அபிவிருத்தி நிதிக் கூட்டுதாபன வங்கி, இலங்கை வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி, வரையறுக்கப்பட்ட

இலங்கை வர்த்தக வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி என்பன முறையே ரூ.362 மில்லியன் (27.9 சதவீதம்), ரூ.208 மில்லியன் (16 சதவீதம்), ரூ.146 மில்லியன் (11.2 சதவீதம்), ரூ.94 மில்லியன் (7.2 சதவீதம்), ரூ.73 மில்லியன் (5.6 சதவீதம்) மற்றும் ரூ.50 மில்லியன் (3.8 சதவீதம்) கொண்ட பகிர்ந்தளிப்புக்களுக்கு வகைகூறின. பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கடன் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் ஒப்புதலளிக்கப்பட்டதும் பகிர்ந்தளிக்கப்பட்டதுமான கடன் நிதிகளும் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்புக்களும் கீழே அட்டவணை II.8 இல் தரப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட சீரமைப்பு செயற்றிட்டக் கடன் பகிர்ந்தளிப்புக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களின் பேரிலான மொத்தப் பொறுப்பு 2000ஆம் ஆண்டில் ரூ.903 மில்லியனாக இருந்தது. 1996இலிருந்து 2000ஆம் ஆண்டுவரை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் பேரிலான வங்கிகளின் மொத்தபொறுப்புக்கள் ரூ.2,894 மில்லியனாக இருந்தன. 2000ஆம் ஆண்டில் பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாதங்களின்மீது சேகரிக்கப்பட்ட கட்டணம் ரூ.60 மில்லியனாக விளங்கியவிடத்து 1996இலிருந்து 2000 வரையிலான காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ.116 மில்லியனாகக் காணப்பட்டது.

## சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டம்

1997 தொடக்கம் தேசிய அபிவிருத்தி வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டத்திற்கான தொடர் கொடுகடன் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் பெரும்பாலும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. எனினும், கொடுகடன் உத்தரவாதங்களுக்கான பாதுகாப்பினை வழங்குதல் நாளதுவரை தொடர்கிறது. 2000ஆம் ஆண்டில் கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களின் எண்ணிக்கை 1999இல் வழங்கப்பட்ட ரூ.1,187 மில்லியனுக்கான 817 உத்தரவாதப் பாதுகாப்புடன் ஒப்பிடுகையில் ரூ.685 மில்லியன்களுக்கான 369 ஆகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் 16 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டதுடன் ரூ.49 மில்லியன் கொண்ட 37 உத்தரவாதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் மொத்த உத்தரவாதப் பொறுப்பு 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் ரூ.1,459 மில்லியனாகக் காணப்பட்டதுடன் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ.28 மில்லியனாகக் காணப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட அதே போக்கினைப் போன்றே சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பெரும்பாலான கடன்கள் (51.5சதவீதம்) "ஏனைய" வகைகளின்கீழான முதலீடுகளுக்கான நிதியிடல்களாக இருந்ததுடன் இது பயணிகள் மற்றும் வர்த்தகப் போக்குவரத்து, ஊர்திப் பணிகள், உணவகங்கள், ஊர்திகள் சீர்காப்புப் பணிகள், மின்னியலுடன் தொடர்பான கைத்தொழில்கள் மற்றும் பணிகள் போன்ற பணிக் கைத்தொழில்களை உள்ளடக்கியிருந்தவேளையில் ஏறத்தாழ 19 சதவீதமான கடன்கள் உணவு, குடிபானம் மற்றும் புகையிலைக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டன. 2000ஆம் ஆண்டுக்கான மொத்தப பகிர்ந்தளிப்பில் வேளாண்மைக் கைத்தொழில்கள் மற்றும்

அட்டவணை II.8
பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்:

(பெறுமதி ரூபா மில்லியனில்)

| பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் | 1999 | | | | 2000 | | | | 1996 - 2000 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 427.9 | 836.6 | 504.3 | 18.8 | 207.7 | 145.6 | 90.5 | 25.6 | 2,329.4 | 1,745.6 | 1,055.4 | 54.8 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 459.9 | 537.5 | 282.5 | 11.0 | 345.5 | 362.3 | 267.2 | 17.8 | 2,068.4 | 1,412.8 | 862.6 | 32.5 |
| இலங்கை வங்கி | 109.2 | 237.0 | 157.0 | 3.4 | 210.8 | 207.8 | 144.7 | 8.0 | 726.6 | 605.7 | 389.8 | 13.9 |
| இலங்கை வர்த்தக வங்கி | 255.4 | 173.3 | 91.6 | 4.0 | 34.9 | 72.9 | 67.5 | 4.9 | 490.9 | 376.5 | 240.6 | 10.6 |
| சம்பத் வங்கி | 0.0 | 25.1 | 12.5 | 0.2 | 65.7 | 93.7 | 32.9 | 3.0 | 238.4 | 118.8 | 68.8 | 0.8 |
| செலான் வங்கி | 260.0 | - | - | - | 296.7 | 368.1 | 265.2 | 0.8 | 482.4 | 368.1 | 241.8 | 3.2 |
| அட்டன் நசனல் வங்கி | - | - | - | - | 49.9 | 49.9 | 34.9 | - | 49.9 | 49.9 | 34.9 | - |
| மொத்தம் | 1,512.4 | 1,809.5 | 1,048.0 | 37.3 | 1,211.1 | 1,300.2 | 902.7 | 60.2 | 6,385.9 | 3,377.1 | 2,893.7 | 115.9 |

(அ) ஒப்புதல்கள்.
(ஆ) பகிர்வுகள்.
(இ) மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு.
(ஈ) சேகரிக்கப்பட்ட கட்டணங்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இரசாயம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளுக்கான கடன்கள் முறையே 9.3 சதவீதத்திற்கும், 9.8 சதவீதத்திற்கும் வகைகூறின. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 2000ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறு கீழேயுள்ள அட்டவணை II.9இல் காட்டப்பட்டுள்ளது.

உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக கடன் பகிர்ந்தளிப்பு விரைவாக அதிகரித்தது. மீள் நிதியிடல் ஒப்புதல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புக்களின் விபரங்கள் நிதியியல் நிறுவனங்களின்படி அட்டவணை II.11 தரப்படுகின்றன. ஆய்விற்குரிய ஆண்டில் மொத்த மீள் நிதியிடல் ஒப்புதல்கள் ரூ.117 மில்லியனாக

அட்டவணை II.9

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டக் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

கடன்களின் கைத்தொழில் வாரியான பகுப்பாய்வு (அ)

31 திசெம்பர் 2000இல் உள்ளவாறு

பெறுமதி ரூபா மில்லியனில்

| கைத்தொழில் வகை | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | | | கடன் தொகை | | | மத்திய வங்கி உத்தரவாத பொறுப்புக்கள் 1997-2000 |
|---|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 1997-2000 | 1999 | 2000 | 1997-2000 | |
| 1. உணவு குடிபானம் புகையிலை | 97 | 58 | 267 | 164.6 | 130.4 | 481.4 | 229.7 |
| 2. புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 21 | 10 | 94 | 52.4 | 34.9 | 174.3 | 80.3 |
| 3. மர, மர உற்பத்திகள் | 29 | 7 | 59 | 45.4 | 5.9 | 68.9 | 37.6 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 21 | 8 | 42 | 66.7 | 21.4 | 113.5 | 44.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் | 33 | 14 | 63 | 65.1 | 67.2 | 155.6 | 83.0 |
| 6. அடிப்படை உலோக உற்பத்திகள் | 28 | 16 | 52 | 35.5 | 9.0 | 56.9 | 24.7 |
| 7. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 29 | - | 76 | 39.1 | - | 91.0 | 53.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள், போக்குவரத்து கருவிகள் | - | - | 28 | - | - | 21.9 | 17.2 |
| 9. வேளாண்மைக் கைத்தொழில் | 102 | 28 | 200 | 164.0 | 63.4 | 307.1 | 178.4 |
| 10. ஏனையவை (அ) | 457 | 228 | 1,008 | 554.6 | 352.8 | 1,264.5 | 710.0 |
| மொத்தம் | 817 | 369 | 1,889 | 1,187.4 | 685.0 | 2,735.1 | 1,459.0 |

(அ) பயணிகள் மற்றும் வர்த்தக போக்குவரத்து பணிகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், உணவு விடுதிகள், மின்னியல் மற்றும் ஏனைய பணிகளையும் உள்ளடக்குகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத் துறைச் செயற்றிட்டம்

இத் திட்டமானது, ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 20 மில்லியன்கொண்ட இலகு கடனிலிருந்து கிடைத்த நிதி உதவியுடன் 1999இன் முதலரைப் பகுதியில் தொழிற்படத் தொடங்கியது. மீள் நிதியிடல் ஒப்புதல்களும் கடன் நிதிகளின் பகிர்ந்தளிப்புக்களும் 1999இன் குறைந்த பகிர்ந்தளிப்புக்களுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் விரைவாக அதிகரித்தன. இத் திட்டத்தின் தொடக்க நிலையில், இச் செயற்றிட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஏழு நிதியிடல் நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக உட்படுத்தப்பட்டமையால் பகிர்ந்தளிப்பின் முன்னேற்றம் மெதுவாகக் காணப்பட்டது. எனினும், மேலதிகமாக கந்துரட்டை அபிவிருத்தி வங்கி, ரஜரட்டை அபிவிருத்தி வங்கி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வீடமைப்பு நிதி நிறுவனமான வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று நிதியியல் நிறுவனங்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக

விளங்கியவிடத்து, பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.35 மில்லியனாகக் காணப்பட்டது. ஒப்புதலுக்கும் பகிர்ந்தளிப்புக்குமிடையில் காணப்படும் வேறுபாட்டிற்கு, பங்கேற்கும் கொடுகடன் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ரூ.86 மில்லியன் கொண்ட மீள் நிதியிடல் ஒப்புதல்களுக்கும் ரூ.23 மில்லியன் கொண்ட கடன்பகிர்ந்தளிப்புக்களுக்கும் வகைகூறியது.

**அட்டவணை II.10**

நோக்க அடிப்படையில் கடன்கள்

(01.01.200 - 31.12.2000)

| நோக்கம் | கடன்களின் எண்ணிக்கை | கடன்தொகை (ரூபா)* |
|---|---|---|
| நிலங்களின் கொள்வனவு | 246 | 27,788,000.00 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 21 | 2,147,000.00 |
| புதிய வீடுகளின் கட்டுமானமும் விரிவாக்கமும் | 829 | 93,759,561.00 |
| ஏற்கெனவேயுள்ள வீடுகளை மேம்படுத்துதல் | 475 | 23,059,950.00 |
| மொத்தம் | 1,571 | 146,754,511.00 |

* இது மீள்நிதியிடல் தொகையையும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் உதவுதொகைகளையும் உள்ளடக்குகின்றது.

துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் ஏறத்தாழ 64 சதவீதம் புதிய வீடுகளின் நிருமாணம் மற்றும் ஏற்கெனவேயுள்ள வீடுகளை விரிவாக்கம் செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன. கடன் பகிர்ந்தளிப்புக்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வொன்று அட்டவணை II .10தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II .11

### 31.13.2000இல் உள்ளவாறு மீள் நிதியிடலின் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும்

ரூபா

| பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் | ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | | மீள் நிதியிடப்பட்ட தொகை | | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 1999 | 2000 | 1999 | 2000 |
| இலங்கை வங்கி | 18 | 63 | 1,061,250 | 5,088,250 | 86,250 | 4,403,550 |
| அட்டன் நசனல் வங்கி | 33 | 78 | 1,155,000 | 4,923,750 | 615,000 | 2,372,250 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | - | 190 | - | 5,149,140 | - | - |
| சந்துரட்ட அபிவிருத்தி வங்கி | - | 369 | - | 16,533,200 | - | 5,968,400 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | - | 871 | - | 85,526,868 | - | 22,588,955 |
| மொத்தம் | 51 | 1,571 | 2,216,250 | 117,221,868 | 701,250 | 35,332,955 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 11.12

### மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் செயலாற்றத் தொகுப்பு 31 திசெம்பர் 2000இல் உள்ளவாறு

(பெறுமதி ரூபா மில்லியன்)

| | சி.ந.கை.I (அ) | | சி.ந.கை.II (ஆ) | | சி.ந.கை.III (இ) | | சி.ந.கை.IV (ஈ) | | சி.ந.தொ.மு. உ.செ (உ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | 1670 | 286.1 | 2531 | 1392.5 | 3130 | 1955.6 | 9072 | 7666.4 | 1889 | 2735.1 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 1670 | 157.5 | 2531 | 713.6 | 3130 | 1312.6 | 9072 | 4772.1 | 1889 | 1995.0 |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 1235 | 210.0 | 1744 | 1120.4 | 1930 | 1656.3 | 6450 | 4515.5 | 37 | 49.0 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் | 113 | 65.0 | 496 | 241.7 | 872 | 580.5 | 271 | 241.5 | 16 | 21.2 |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 338 | 76.0 | 228 | 119.0 | 171 | 98.0 | 273 | 226.0 | 29 | 50.0 |
| 3.2 பெறப்பட்ட கோரல்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | - | 34.0 | - | 66.0 | - | 67.0 | - | 150.0 | - | 25.0 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | |
| முழுமையாகத் தீர்க்கப்பட்டவை | 232 | 19.0 | 126 | 32.0 | 92 | 24.0 | 87 | 35.5 | 7 | 6.0 |
| பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 27 | 2.0 | 5 | 1.0 | - | - | - | - | - | - |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 32 | 7.0 | 46 | 13.0 | 44 | 16.0 | 56 | 22.0 | 1 | 0.3 |
| திருப்பப்பட்ட கோரல்கள் | - | - | 1 | 0.2 | - | - | 11 | 7.0 | 2 | 0.8 |
| கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் | | | | | | | | | | |
| முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் | 36 | 2.0 | 7 | 2.0 | 10 | 4.0 | 25 | 13.0 | - | - |
| பிற்போடப்பட்ட கோரல்கள் | 8 | 2.0 | 21 | 8.0 | 6 | 5.0 | 11 | 7.0 | - | - |
| முடிவுறாக் கோரல்கள் | - | - | 10 | 3.0 | 12 | 8.0 | 76 | 45.5 | 19 | 17.0 |
| புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் | 3 | 1.0 | 12 | 4.0 | 7 | 4.0 | 7 | 7.0 | - | - |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் (ஊ) • | | | | | | | | | | |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய | 5 | - | 63 | 26.7 | 157 | 53.9 | 2078 | 1221.7 | 1807 | 1860.0 |
| வங்கியின் பொறுப்பு | - | - | 63 | 16.0 | 157 | 36.8 | 2078 | 797.1 | 1807 | 1244.1 |
| 5. கட்டணச் சேகரிப்பு | - | 12.2 | - | 29.9 | - | 46.2 | - | 52.2 | - | 27.8 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் | - | 10.0 | - | 19.0 | - | 18.0 | - | 10.0 | - | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) சிநகை I - 1979-81வரை தொழிற்பட்டவை.
(ஆ) சிநகை II - 1982-89வரை தொழிற்பட்டவை.
(இ) சிநகை III - 1988-91வரை தொழிற்பட்டவை.
(ஈ) சிநகை IV - 1992-97வரை தொழிற்பட்டவை.
(உ) சிநதொமுஉசெ. - 1997 இல் தொடங்கப்பட்டது.
(ஊ) தற்காலிகமானவை. சமர்ப்பிக்கப்பட்ட கோரல்கள் நீங்கலாக.
• சீராக்கப்பட்ட என்தொகைகள்.

## கொடுகடன் உத்தரவாத நிதியத்தின் முதலீடு

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ரூ.1,982 மில்லியனாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் முதலீடுகளிலிருந்தான மொத்த வட்டி வருவாய் ரூ.165 மில்லியனாகக் காணப்பட்டது. இம் முதலீடுகளுக்கான நிதிகள் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் பேருந்துக் கொள்வனவுக் கடன்திட்டம், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம் மற்றும் பெருந்தோட்டச் சீரமைப்புச் செயற்றிட்டம் ஆகிய கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான கட்டுப்பணச் சேகரிப்புக்களிலிருந்தும் மத்திய வங்கியினால் முற்பணமாக வழங்கப்பட்ட நிதிகளிலிருந்தும் பெறப்பட்டது.

## முற்றுப்பெற்ற கொடுகடன் திட்டங்கள்

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் (1979-1997), பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம் (1990-1992), வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV (1992-1998) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம் (1997-2000) என்பன வெற்றிகரமாக முற்றுப்பெற்றுள்ளன. முற்றுப்பெற்ற திட்டங்களின் செயலாற்றத் தொகுப்பொன்று கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டங்கள், பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம் மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம் என்பனவற்றின் மீதான மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்புக்கள் இன்னமும் நடைமுறையிலிருப்பதனால், செயற்படாக் கடன்கள் தொடர்பான செயற்றிட்டப் பரிசோதனைகளும் பின்தொடர் வேலைகளும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொடுகடன் உத்தரவாதங்கள் இன்னமும் நடைமுறையிலிருக்கும் கடன்கள் மீதான கட்டணச் சேகரிப்புக்கள் தொடரப்பட்டு வருகின்றன.

## கிராமியக் கொடுகடன்

கிராமியக் கொடுகடன் திணைக்களமானது கொடையாளர்கள், அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் வங்கிகள் என்பனவற்றினால் நிதியிடப்பட்ட பல கொடுகடன் திட்டங்களின் கொடுகடன் கூறுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. ஆய்விற்குரிய ஆண்டில், கிராமியக் கொடுகடன் திணைக்களம் தென் மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்தி செயற்றிட்டம் ஆகிய இரு கொடுகடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திக்கான செயற்றிட்டத்தின் சுழல் நிதியினைப் பயன்படுத்துகின்ற பின் தொடர் கொடுகடன் திட்டம் ஆகிய இரு புதிய கொடுகடன் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்கு நாணயச்சபை ஒப்புதலளித்தது. செயற்றிட்டங்களுக்கான நிறைவேற்று முகவர் என்ற ரீதியில், மத்திய வங்கி புதிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை அனுமதித்தல், செயற்றிட்டங்களின்கீழ் தகைமைபெற்ற கடன்கள் தொடர்பாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடலைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான செயற்றிட்ட அலுவலகங்கள் மற்றும் ஏனைய உள்ளூர் முகவர்களின் உதவியுடன் கடன் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் இணைத்தல் என்பனவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தது.

வேளாண்மை உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பிரச்சினையினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கிராமியக் கொடுகடன் திணைக்களம் விவசாயிகளுக்கும் கொள்வனவாளர்களுக்கும் நியாயமான விலைகளில் வேளாண்மை உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு முன்னோக்கிய ஒப்பந்தங்களைப் பயன்படுத்துமாறு வேளாண்மையாளர்களையும் கொள்வனவாளர்களையும் ஊக்குவிப்பதில் ஈடுபட்டிருந்தது.

2000ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் தொழிற்பாடுகளின் நிருவாகம் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்பட்டமையும் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்களின் இயலாற்றலின் அளவினை உயர்த்தியது.

2000ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் பின்வரும் செயற்றிட்டங்களின் கொடுகடன் திட்டங்களை மத்திய வங்கி கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினூடாக நடைமுறைப்படுத்தியது.

### (அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்:

i. தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம்.

ii. இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

iii. தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

iv. வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

v. வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

vi. தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம்.

### (ஆ) வே.அ.ப.நிதியம்/க.ப.அ.மு./யப்பானிய அரசு/உ.உ.நி./ ப.அ.ஐ).நாடு/ப.ஒ.ய.வ என்பவற்றினால் நிதிமிடப்பட்ட செயற்றிட்டங்கள்.

vii. வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம். (வே.அ.ப.நிதியம், சு.ப.அ.நி., உ.உ.நி.)

viii. உணவு, ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டம் (யப்பானிய அரசு)

ix. வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம் (ப.ஏ.ஒ.வங்கி)

x. மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் (வே.அ.ப.நி.)

xi. நகரசூழல் உள்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம்

### (இ)அரசினால் நிதிமிடப்பட்ட செயற்றிட்டங்கள்

xii. சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்.

xiii. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழல்முறை நிதிய) செயற்றிட்டம்.

xiv. சுறதுற நிகழ்ச்சித் திட்டம்.

xv. தென்மாகாண கிராமிய அபிவிருத்தி (சுழல்முறை நிதிய) செயற்றிட்டம்.

### தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டத்தினைத் தொடர்ந்து 1999இல் தொழிற்படத் தொடங்கிய தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் 2000ஆம் ஆண்டில் முதலாவது ஆண்டு அதனது தொழிற்பாடுகளை நிறைவுசெய்து கொண்டுள்ளது. இவ்வாண்டின்போது, கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன்களைப் பெற்றுக்கொள்வதில் தேயிலை சிறு உடைமையாளர் மற்றும் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் கூடியளவு ஈடுபாட்டினைக் காட்டினர். இதற்கு, உலக சந்தையில் தேயிலைக்கான விலைகள் அதிகரித்தமையும், தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு சாதகமான வானிலை நிலைமைகள் காணப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும். இதன் விளைவாக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இவ்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட தொகையையும் விஞ்சும் விதத்தில் கடன்களைப் பகிர்ந்தளிக்கக் கூடியளவாக இருந்தன. 2000ஆம் ஆண்டில் வங்கிகள் மொத்தமாக ரூ.337 மில்லியனைப் பகிர்ந்தளித்தன. இது இவ்வாண்டில் பகிர்ந்தளிப்பிற்காக இலக்கிடப்பட்ட தொகையைவிட 117 சதவீதம் உயர்வானதாகும்.

செயற்றிட்டத்தின் கீழ் நிதியிடலுக்குத் தகைமைபெற்ற நடவடிக்கைகளாக தேயிலை மீள் நடுகை, தேயிலை நாற்று மேடைகளை நிறுவுதல், தேயிலைத் தொழிற்சாலைகளை புத்தாக்கம் செய்து நவீனமயப்படுத்தல், ஊர்திகளின் கொள்வனவு மற்றும் தேயிலைக் கொழுந்து சேகரிக்கும் நிலையங்களை நிருமாணித்தல் என்பன விளங்கின. சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திக்கான முன்னைய கொடுகடன் திட்டத்தினைப் போன்று கடன்களில் பெரும்பாலானவை தொழிற்சாலைப் புத்தாக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் இது, இதற்காக இலக்கிடப்பட்டிருந்த தொகையைவிட 50 சதவீதத்திற்கும் கூடுதலானதாக இருந்தது. தேயிலை நாற்று மேடைகளை நிறுவுவதற்கு மிகக் குறைந்த மட்டக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தமைக்கு தேயிலை நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்த தேயிலை சிறு உடைமையாளர்களினால் சொத்துக்களை ஈடுவைத்தல் போன்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணைகளை வழங்குவதில் காணப்பட்ட இடர்பாடுகளே காரணமாக இருந்தன.

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம் 2000ஆம் ஆண்டிற்கான மொத்தக் கடன் பகிர்ந்தளிப்புக்களில் இ.அ.நி.கூ. வங்கி 41.7 சதவீதத்திற்கு வகைகூறியமையைக் காட்டுகின்றது. அட்டன் நசனல் வங்கி (16.4 சதவீதம்), வர்த்தக வங்கி (16 சதவீதம்), தேசிய அபிவிருத்தி வங்கி (10.7 சதவீதம்), சம்பத் வங்கி (8.9 சதவீதம்) மற்றும் இலங்கை வங்கி (6.3 சதவீதம்) என்பன எஞ்சிய கடன் பகிர்ந்தளிப்புக்களுக்கு வகைகூறின. இலங்கை வங்கி மற்றும் கந்துரட்டை அபிவிருத்தி வங்கி ஆகிய இரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக அனுமதிக்கப்படுவதற்கு திருப்திகரமான தகைமைப் பிரமாணங்களைக் கொண்டிருந்தமையினால் இவ்வாண்டுப் பகுதியில் இத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு இறுதிவரை, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ஒன்றுசேர்ந்து ரூ.506 மில்லியன் பெறுமதிகொண்ட 568 கடன்களுக்கு ஒப்புதலளித்ததுடன் ரூ.372 மில்லியன் தொகைகொண்ட 499 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றில் ரூ.217 மில்லியன் தொகை கொண்ட 236 கடன்களுக்கு மீள் நிதியிடப்பட்டது.

### இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

முதலாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் தொடர்ச்சியான இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டமானது 2000ஆம் ஆண்டில் அதன் இரண்டாவது ஆண்டின்

தொழிற்பாடுகளை நிறைவுசெய்தது. இச் செயற்றிட்டமானது வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த முழுத் தீவையும் உள்ளடக்கியுள்ளதுடன் 2004ஆம் ஆண்டளவில் இதனைப் பூர்த்தி செய்வதற்கும் அட்டவணையிடப்பட்டுள்ளது. கொடுகடன் வசதிகளையும் ஆதரவுப் பணிகளையும் வழங்குவதன்மூலம் நிரந்தரப் பயிர்கள் துறையின் அபிவிருத்திக்கும் வர்த்தக மயமாக்கலுக்கும் உதவுவதே செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். செயற்றிட்டமானது 5 முக்கிய கூறுகளை அதாவது (அ) கொடுகடன் (ஆ)பண்ணை மதியுரை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பப் பணிகள் (இ) ஆராய்ச்சி (ஈ) விதை மற்றும் பயிரிடல் பொருட்கள் அத்துடன் (உ) நிறுவன ரீதியான வலுப்படுத்தல்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியிருந்தன. கொடுகடன் விடயங்களை வங்கி கையாண்ட வேளையில் வேளாண்மை அமைச்சு மற்றைய விடயங்களைக் கையாண்டது.

ஆய்விற்குரிய காலத்தில், இரு புதிய பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களான இலங்கை வங்கியும் கந்துரட்டை அபிவிருத்தி வங்கியும் இக் கொடுகடன் திட்டத்தின்கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக அனுமதி பெறுவதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரமாணங்களை திருப்திசெய்திருந்தன. இதன் காரணமாக கொடுகடன் திட்டத்தின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எண்ணிக்கை ஏழிற்கு அதிகரித்தது. கொடுகடன் கூறிற்கு ஒதுக்கம் செய்யப்பட்ட தொகையில் அதாவது சிஎஉ 11.562 மில்லியனில் (ஏறத்தாழ ரூ.1,115 மில்லியன்) ரூ. 295 மில்லியன் 2000ஆம் ஆண்டு இறுதியில் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் 698 தகைமை பெற்ற துணைச் செயற்றிட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.184 மில்லியனாக விளங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி மீள்நிதியிடல் முலம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ரூ.129 மில்லியனை வழங்கியது.

மத்திய வங்கியினால் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கும் விதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் துணைக் கடன்களுக்கு அனுமதிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த வரையறையற்ற எல்லையை ஐ.அ.டொலர் 50,000 இலிருந்து ஐ.அ.டொலர் 100,000இற்கு அல்லது இதற்குச் சமனான இலங்கை ரூபாவிற்கு அதிகரித்தது. இத் தொகையை விஞ்சிய, ஐ.அ.டொலர்கள் 150,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை பகிர்ந்தளிப்பிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதல் தேவையாக இருந்தது. மேலும் இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கான மதியுரைப் பணிகளில் தனியார்துறை பங்கேற்பதற்கான முன்னோடிச் செயற்றிட்டத்திற்கான தொழில்நுட்ப உதவியுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி சம்பந்தப்பட்டிருந்தது. தற்பொழுது பண்ணை மதியுரை, சந்தைப்படுத்தல் மற்றும் தொழில் நுட்பப் பணிகள் போன்றன வேளாண்மை அமைச்சினால் கையாளப்படுகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட தனியார் தொழில் முயற்சியாளர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுவதற்குத் தேவையான ஒழுங்குகளை அமைச்சு செய்திருக்கிறது. இந்நடவடிக்கையானது வாடிக்கையாளர்கள் தாம் பெற்ற மதியுரைப் பணிகளுக்காக வர்த்தக வீதங்களில் நேரடியாகக் கொடுப்பனவுகளைச் செய்விக்கின்ற "பயன்படுத்துநர் கொடுப்பனவு" முறையொன்றின்மீது விரிவாக்கப் பணிகளை வழங்குவதற்குத் தனியார்துறையின் மீது தங்கியிருப்பதானது இலங்கையின் முதன் முயற்சிகளில் ஒன்றாக இருக்கும் என கருதப்படுகின்றது.

செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களை விரைவுபடுத்துவதற்காக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை முகாமையாளர்களைத் தூண்டும் நோக்குடன் மத்திய வங்கி நிரந்தரப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் செயற்றிட்ட அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் 6 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/ செயலமர்வுகளை நடத்தியது.

### தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 1992இல் தொழிற்படத் தொடங்கிய தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமானது 2000ஆம் ஆண்டு யூன் 30ஆம் நாளன்று அதன் தொழிற்பாடுகளை நிறைவு செய்து கொண்டது. இச் செயற்றிட்டத்தினை 1999இறுதியில் நிறைவு செய்வதற்கு ஆரம்பத்தில் அட்டவணையிடப்பட்டதெனினும், 1999இன் பின்னரைப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கோரப்பட வேண்டியிருந்த எஞ்சிய பணப் பெறுகைகளைக் கோருவதனை இயலச் செய்யும் விதத்தில் மேலும ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

சுயதொழில் மற்றும் வருமான உருவாக்க நடவடிக்கைகள் போன்றவற்றிற்கான வாய்ப்புக்களை உருவாக்குவது மற்றும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது என்பனவற்றின் மூலம் தென் மாகாணத்திலுள்ள மக்களின் வருமான மட்டத்தினையும் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தும் குறிக்கோளுடனேயே தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்டது. செயற்றிட்டத்தின் இலக்கு சிறிய மற்றும் ஊதியம் குறைந்த வேளாண்மையாளர் நிலமற்ற தொழிலாளர், தனியார் துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலதிபர்கள், மகளிர் மற்றும் தொழில்வாய்ப்பற்ற இளைஞர்கள் ஆகிய குழுக்களை உள்ளடக்கியிருந்தது.

கொடுகடனிற்கான மொத்த ஒதுக்கான ரூ.466 மில்லியனில் (சிஎஉ 6.4 மில்லியன்) ரூ.369 மில்லியன் அல்லது 79 சதவீதம் கிராமிய நுண்பாக மற்றும் சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களுக்காக திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சினால் மத்திய வங்கிக்கு ஒதுக்கப்பட்டது. மீதித் தொகை நுண்பாகமட்ட சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளின் நிதியிடலுக்கு வசதியளிக்கும் பொருட்டு சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டது.

செயற்றிட்டக் காலப்பகுதியில், அமைச்சினால் செய்யப்பட்ட முழு ஒதுக்கமும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. 2000ஆம் ஆண்டுப் பகுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கான மீள் நிதியிடலாக மத்திய வங்கி ரூ.16 மில்லியன் கொண்ட தொகையை வழங்கியதன் மூலம் மொத்த மீள்நிதியிடல் தொகை ரூ.369 மில்லியனாகியது. 2000ஆம் ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.18 மில்லியனாகக் காணப்பட்டன. செயற்றிட்டக் காலப்பகுதிக்குரிய மொத்தக் கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.418 மில்லியனாக இருந்ததுடன் இதில் ஏறத்தாழ ரூ.50 மில்லியன் அல்லது 12 சதவீதத்தை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் அவற்றின் சொந்த நிதியிலிருந்து உதவின. வழங்கப்பட்ட கடன்களின் மாவட்ட அடிப்படையிலான செயலாற்றமானது மாத்தறை மாவட்டம் 51 சதவீதமான மிக உயர்ந்த கடன் பகிர்ந்தளிப்பினைக் கொண்டிருந்த வேளையில் காலி மற்றும் அம்பாந்தோட்டை என்பன முறையே 29 சதவீத மற்றும் 20சதவீத கடன் பகிர்ந்தளிப்புக்களைக் கொண்டிருந்தமையைக் காட்டுகின்றது.

செயற்றிட்டக் காலப்பகுதியில் றுகுணு அபிவிருத்தி வங்கியும் இ.அ.நி.கூட்டுத்தாபன வங்கியும் ஏறத்தாழ 7,709 செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டன. மொத்தக் கடன் பகிர்ந்தளிப்பில் ஏறத்தாழ 85 சதவீதம் றுகுணு அபிவிருத்தி வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டதாகும். கடன்களினது எண்ணிக்கை நியதிகளில் றுகுணு அபிவிருத்தி வங்கி 98.5 சதவீதமான கடன்களுக்கு நிதியிட்டதுடன் கடன்கள் முழுவதும் நுண்பாகக் கடன்களாகவே இருந்தன.

செயற்றிட்டத்தின் தாக்க மதிப்பீட்டு ஆய்வானது, கொடுகடன் நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்றிட்டத்தின் வெற்றிகரமான கூறுகளில் ஒன்றாகத் தரமிட்டுள்ளது பெரும் எண்ணிக்கையான சுயவேலைவாய்ப்பு வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கியதன் மூலம் றுகுணு அபிவிருத்தி வங்கி மாகாணங்களிலுள்ள மொத்தத் தொழிலின்மைப் பிரச்சனையைக் கட்டுப்படுத்துவதற்கு சாதகமான முயற்சிகளை மேற் கொண்டமையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டியது. றுகுணு அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் அளவு ரூ.28,000 - ரூ. 45,000 இற்கிடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் வழங்கப்பட்ட கடன்பாடுகளில் ஏறத்தாழ 44 சதவீதம் சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்களுக்கானதாகவும் இருந்தது. கடன்களின் வகைகளில் வர்த்தகம் மற்றும் சுயவேலைவாய்ப்பு போன்ற வருமான உருவாக்க நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களில் பெரும்பங்கிற்கு வகை கூறியவிடத்து மிகக் குறைந்த அளவு மீன் பிடித்துறைக்கு வழங்கப்பட்டது. செயற்றிட்டங்களின் நிதியிடல் ஏறத்தாழ 94 சதவீதம் வெற்றிகரமானவையாகவும் 6 சதவீதம் மட்டுமே தோல்வி கண்டனவாகவும் காணப்பட்டன.

## தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (சுழலும் நிதியக் கொடுகடன்)

2000ஆம் ஆண்டு யூனில் தொழிற்பாடுகளை நிறைவு செய்துகொண்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாதிருக்கும் கடன் தவணைகள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் வழங்கும் பொருட்டு தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டக் (சுழலும் நிதியம்) கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கொடுகடன் திட்டத்தினைத் தொழிற்படுத்தவதற்கான நிதியம் கடன் மீளப் பெறுகைகளிலிருந்தும் தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் வட்டி வருமானத்திலிருந்தும் ரூ.194மில்லியன் கொண்ட தொகையை மாற்றல் செய்தமையின் மூலம் பெறப்பட்டது.

இரண்டாவது தொடர் கொடுகடன் திட்டம் தொழிற்பாட்டுக்கு வரும்வரை மேற்குறிப்பிட்ட கொடுகடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக மத்திய வங்கி அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கையொன்றையும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுடன் துணைக் கடன் உடன்படிக்கைகளையும் செய்து கொண்டது. வட்டி வீதம் கீழ் நோக்கி திருத்தப்பட்ட புதிய கடன்கள் தவிர்ந்த இக் கொடுகடன் திட்டத்தின் கீழான கடன் வழங்கலின் நியதிகளும் நிபந்தனைகளும் தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் நிபந்தனைகளைப்

போன்றே இருந்தன. புதிய கடன்களுக்கான கடன் வழங்கல் வீதமும் மீள் நிதியிடல் வீதமும் ஆண்டிற்கு 2 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டு முறையே 12 சதவீதமாகவும் 4 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு இறுதிவரை இக் கொடுகடன் திட்டத்தின்கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மீள் நிதியிடலாக ரூ.38 மில்லியன் கொண்ட தொகை வழங்கப்பட்டுள்ளது.

**வடமத்திய மாகாணம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும்.**

1996இலும் 1997இலும் தமது தொழிற்பாடுகளைத் தொடங்கியுள்ள வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டமும் 2000ஆம் ஆண்டில் தமது மூன்றாவது மற்றும் நான்காவது ஆண்டுத் தொழிற்பாடுகளை நிறைவு செய்துள்ளன. அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள வேளாண்மையாளர்களின் உற்பத்தியாற்றலை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றினூடாக வறுமையை ஒழிப்பதனையே இவ்விரு திட்டங்களும் நோக்கமாகக் கொண்டிருந்தன.

இவ்விரு செயற்றிட்டங்களினதும் கொடுகடன் கூறுகளுக்கான உச்ச இணைப்பு முகவராக மத்திய வங்கி தொழிற்படுவதுடன் அநுராதபுரத்திலுள்ள அதன் பிரதேச அலுவலகமூடாக அதனைத் தொழிற்படுத்துகின்றது. அனுசரணைப் பணிகளினது நிருவாகச் செலவுகளை ஈடுசெய்வதற்காக கடனொன்றிற்கு செயற்றிட்டத்தினால் செய்யப்படும் 2 சதவீதமான கொடுப்பனவிற்காக துணைக் கடன்களுக்கான நிதியினைப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் தமது சொந்த நிதியிலிருந்து நிதியிட வேண்டியிருந்தபோதும் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டதைவிட கணிசமான அளவு தாழ்வாகவே காணப்பட்டன. இதன் காரணமாக செயற்றிட்டம் தொடங்கிய காலத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ.3 மில்லியனாகவே காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களின் மெதுவான செயலாற்றமானது நிதியிடுகின்ற முகவராண்மைகளின் அலுவலர்களினால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டதுடன் செயற்றிட்டத்தின் கீழான மீள்நிதியிடல் துணைக் கடன்களுக்கான நிதியில் ஒரு பகுதியை ஒதுக்குவதற்கான சாத்தியத்தினைக் கண்டறிவதற்காக தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்துடன் அரசு பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டிருந்தது. எனினும் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திலிருந்து நிதிகளைப் பெற்றுக் கொள்ளுவது வெற்றியளிக்காமையினால் 2000ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்த ஆ.அ.வங்கி மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் என்பனவற்றின் இடைக்கால மீளாய்வுப் பேராளர் குழுக்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கான மீள் நிதியிடல் ஒதுக்காக இச் செயற்றிட்டங்களின் பயன்படுத்தப்படாத நிதியத்திலிருந்து நிதியினை ஒதுக்க உடன்பட்டன. இதன்படி ஆசிய அபிவிருத்தி வங்கி வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்காக ஐ.அ.டொலர் 500,000 (ஏறத்தாழ ரூ.40 மில்லியன்) கொண்ட தொகையையும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் வடமத்திய மாகாண பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்காக ஐ.அ.டொலர் 250,000 (ஏறத்தாழ ரூ.20 மில்லியன்) கொண்ட தொகையையும் ஒதுக்கீடு செய்திருந்தன. கடன் உடன்படிக்கைகளுக்கான திருத்தங்கள் இறுதியாக்கப்பட்டதும் புதிய கொடுகடன் திட்டத்துடன் இக் கொடுகடன் திட்டங்கள் தொடர்ந்தும் தொழிற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்**

1992இல் தொழிற்படத் தொடங்கிய வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 2000ஆம் ஆண்டு யூனில் அதன் நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்டது. இச் செயற்றிட்டமானது வடமேல் மாகாண கிராமியக் குடித்தொகையின் பொருளாதார, சமூக, மற்றும் நிறுவன ரீதியான நல்வாழ்வினை மேம்படுத்துவதன் மீது அதன் மிகுந்த கவனத்தைச் செலுத்தியது. இச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறிற்கான நிறைவேற்று முகவராக மத்திய வங்கி தொழிற்பட்டது. இச் செயற்றிட்டம் கிணறுவெட்டுதல், நீர்ப்பம்புகள், கிராமியப் பெண்களுக்கான வருவாய் உருவாக்க நடவடிக்கைகளை நிறுவுதல் என்பனவற்றுடன் கூடிய வேளாண்மையாளர்களுக்குச் சொந்தமான பண்ணைகளில் நீர்ப்பாசன முறைகளை மேம்படுத்துவதற்கான ஐ.அ.டொலர் 1.8 மில்லியன் (ஏறத்தாழ ரூ. 112 மில்லியன்) கொண்ட கொடுகடன் ஒதுக்குகளைக் கொண்டிருந்தது. செயற்றிட்டத்தின் தொடக்கத்தில், புத்தளம் மற்றும் குருநாகல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் இரண்டும் (பின்னர் இவை வயம்பா அபிவிருத்தி வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன) அட்டன் நசனல் வங்கியும்

இக்கொடுகடன் திட்டத்தில் பங்கேற்றதுடன், கிராமியப் பெண்களுக்கான நுண்பாக கொடுகடன் விரிவாக்கத்தினை மேம்படுத்தும் பொருட்டு 1996இல் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக உள்ளடக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டு யூனில் செயற்றிட்டம் நிறைவு பெறுகையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் 918 வேளாண்மைக் கிணறுகளின் நிருமாணத்திற்காக ரூ.31 மில்லியனையும் 3,430 பெண்களின் சுயவேலைவாயப்பு செயற்றிட்டத்திற்காக ரூ.81.5 மில்லியனையும் பகிர்ந்துள்ளன. 1996இல் தொழிற்படத் தொடங்கிய ஏற்றல் நீர்ப்பாசனக் கூறின் கீழ் ரூ.4 மில்லியன் பெறுமதியான 148 செயற்றிட்டங்களுக்கு நிதியிடப்பட்டது. செயற்றிட்டம் முடிவடையும்வரை செயற்றிட்டம் 4,239 துணைக் கடன்களுக்கு ரூ. 112 மில்லியனை மீள் நிதியிடப்பட்டதுடன் 100 சதவீதமான கடன் பயன்பாடு பதிவு செய்யப்பட்டது.

## நகர சுற்றாடல் உள்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்ட திட்டம்

முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பூஜ்ய பகிர்ந்தளிப்புடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.32 மில்லியன் கொண்ட தொகையை வழங்கியதன் மூலம் நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பதிவு செய்தது. கடன் திட்டத்தில் காணப்பட்ட முன்னேற்றத்திற்கு ஆய்விற்குரிய ஆண்டில் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரபல்யப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களே முக்கிய காரணங்களாக இருந்தன. திணைக்களம் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சனச அபிவிருத்தி வங்கி என்பனவற்றிற்குப் புறம்பாக ஆறு பிரதேச வங்கிகளையும் (வயம்பா, சப்பிரகமுவா, கந்துரட்டை, றுகுணு, இராசரட்டை, மற்றும் ஊவா) பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக ஏற்றுக் கொண்டது.

1999இல் தொடங்கப்பட்ட நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டமானது பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நாடுகள் முகவரினால் உத்தரவாதமளிக்கப்பட்ட எண் 383 எச்ஜி 006 கொண்ட வீடமைப்பு உத்தரவாதக் கடனின் கீழ் ஐக்கிய அமெரிக்க தனியார்துறையிலிருந்து திரட்டப்பட்ட ஐ.அ.டொலர் 4 மில்லியன் கொண்ட கடனினூடாக அரசினால் நிதியிடப்பட்டது. சுற்றாடல் அபிவிருத்தியில் குறிப்பாக நாடு முழுவதிலுமுள்ள நகர மற்றும் நகரம் சார் பகுதிகளில் தனியார் துறையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதனையும் இத் திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது. சமூகத்தினரின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம், குப்பை கூழங்களைச் சேகரித்தல், கழிவு நீரைச் சுத்தப்படுத்தல் ஆகிய சமூகத்திற்கு மேம்பாட்டை விளைவிக்கும் சுற்றாடல் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இச் செயற்றிட்டத்தின் கீழான நிதியிடலுக்கு தகுதியுடையனவாகும். மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் தனியார் அல்லது அரசதுறை அமைப்புக்கள், மேலே குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற துணைச் செயற்றிட்டங்களை மேற்கொள்ளும் தனிப்பட்ட கடன்படுநர்கள் ஆகியோர்க்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினூடாக கடன்கள் வழங்கப்படும். ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், சனச அபிவிருத்தி வங்கி சமூக அபிவிருத்தி நீர்ச் சுகாதாரம் குப்பை கூழங்களைச் சேகரித்தல் என்பனவற்றிற்காக ரூ.30 மில்லியனையும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் (றுகுணு மற்றும் சப்பிரகமுவா) நீர் சுகாதார செயற்றிட்டத்திற்காக ரூ.2 மில்லியனையும் வழங்கின.

செயற்றிட்டத்தின் கீழ் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களை விரிவாக்கும் நோக்குடன் கிராமியக் கொடுகடன் திணைக்களம் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

## சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் கனடாவின் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் ஆகியவற்றிலிருந்தான நிதி உதவியுடன் 1990இல் தொழிற்படத் தொடங்கிய சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் புத்தளம், கண்டி, காலி, மாத்தறை ஆகிய நான்கு மாவட்டங்களில் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் கொடுகடன் வழங்கல் பொறி முறையானது தேவையான பிணைகள் இல்லாமையின் காரணமாக முறைசார்ந்த கொடுகடனைப் பெற முடியாமல்போன வறிய தொகுதியினருக்கு கடன்களை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதியிடல் அட்டவணையிடப்பட்டவாறு 1997இல் முடிவுறுத்தப்பட்டதுடன் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்துடனான கடன் உடன்படிக்கையின் நியதிகளின்படி கடன் மீளப் பெறுகைகளை மீள் சுழற்சிக்கு விட்டமையின் மூலம் 1999 இல் மத்திய வங்கி செயற்றிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்களின் முகாமைப்படுத்தலுக்காக விடுவிக்கப்பட்டிருந்த மத்திய வங்கி ஆளணியினரை அது மீள அழைத்துக் கொண்டதுடன், செயற்றிட்டத்தின் களத் தொழிற்பாடுகளை இணைப்பதற்காக தொடர்பான

மாவட்டங்களிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலிருந்து அலுவலர்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டு இறுதியில் செயற்றிட்டமானது நான்கு மாவட்டங்களிலுள்ள 2,450 கிராமங்களை உள்ளடக்கியிருந்ததுடன் செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கு உதவிகளை வழங்குகின்ற விதத்தில் 10,281 சுய உதவிக் குழுக்களை உருவாக்கியது. இக் குழுக்களினூடாக அடையப்பட்ட நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை 61,752ஆக விளங்கி செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்ட நேரத்தில் இலக்கிடப்பட்ட 32,000த்தினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் முக்கியமானதொரு பண்பாக விளங்கியது யாதெனில் 42,867 பெண்கள் தீவிரமாகவும் மிக உயர்ந்தளவிலும் பங்கேற்று நன்மை பெறுநர்களில் 69 சதவீதத்திற்கு வகை கூறியமையேயாகும். கடன் பெறுநர்கள் வருவாய் உருவாக்க சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இயலச் செய்யும் பொருட்டு ஆண்டின் இறுதியில் நுண்பாகக் கடனாக கடன்பாட்டாளருக்கு ரூ.594 மில்லியன் கொண்ட தொகை முற்பணமாக வழங்கப்பட்டது. கடன்களின் சராசரி அளவு ரூ.10,245 ஆகக் காணப்பட்டது. செயற்றிட்டம் 97.3 சதவீதத்திற்கு மேற்பட்டமீளப் பெறல் வீதத்தினை தொடர்ச்சியாகப் பேணியுள்ளது. மேலும், செயற்றிட்டத்தின் சேமிப்புக்கள் திரட்டும் திட்டத்தின் கீழ் நன்மை பெறுநர்கள் தமது குழுச் சேமிப்புக்கள் மூலம் ரூ.78 மில்லியனைச் சேமித்துள்ளனர்.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2000ஆம் ஆண்டிலும் கடன் மீளப் பெறுகைகள் பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு மீள் நிதியிடலை வழங்குவதற்காக மீள் சுழற்சிக்கு விடப்பட்ட வேளையில் மிகை நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் உழைக்கப்பட்ட வட்டிவருமானம் செயற்றிட்டத்தின் நிருவாக மற்றும் நன்மை பெறுநர்களின் பயிற்சிச் செலவினத்தை ஈடுசெய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

சுய உதவிக் குழுக்களை அவையாகவே முறைசார்ந்த கூட்டுச்சபைகளாக ஒருங்கிணைவதற்கு அனுமதிப்பதன் மூலமாக, 2000ஆம் ஆண்டில் வங்கி இசுறு அபிவிருத்திச் சங்கங்களை தொடர்ந்தும் ஏற்படுத்தி வந்தது. முதிர்ச்சியடைந்த சுய உதவிக் குழுக்கள் அவர்களின் நிதித் தளத்தினை வலுப்படுத்தியும் பேச்சுவார்த்தை இயலளவை மேம்படுத்தவும் இயலாற்றல் விரிவாக்கத்தினை உயர்த்தி பெருமளவு ஆற்றலை-எய்துவதற்குமான வசதிகளை வழங்கும் பொருட்டு 1997இல் இத் திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி கிராமத்தில் தொழிற்படுகின்ற பல குழுக்கள் இசுறு அபிவிருத்திச் சங்கங்களாக உருவாக்கப்பட்டு, சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட சங்கமாக கம்பனிப் பதிவாளருடன் பதிவு செய்யப்பட்டன. ஆய்விற்குரிய ஆண்டின் இறுதியில் 186 அத்தகைய வரையறுக்கப்பட்ட பொறுப்பினைக் கொண்ட சங்கங்கள் உருவாக்கப்பட்டன. தனிப்பட்ட சங்கங்களை மாவட்ட மட்டத்தில் சம்மேளனப்படுத்துவதன் மூலமாக மாத்தறை, காலி, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய செயற்றிட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு மாவட்ட சம்மேளனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டுக் காலத்தில் இசுறு மாவட்ட சம்மேளனங்கள் உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக அவற்றின் நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொண்டுள்ளன. இசுறு சங்கங்களினது உறுப்பினர்களின் பிள்ளைகளில் தேவைப்படுவோருக்கு நிதியியல் உதவிகளை வழங்குவதற்காக கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் புலமைப் பரிசில் நிதியம் நிறுவப்பட்டது. நன்மை பெறுநர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான வழிவகைகளை வழங்கும் நோக்குடன் நான்கு மாவட்டங்களிலும் விற்பனைக் கண்காட்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன.

முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதன் மூலம் வரையறுக்கப்பட்ட லிங்ஸ் நசுரல் புறடக்ஸ் மற்றும் ஆயுர்வேத மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கு பல்வேறுவகை உள்ளூர் மூலிகைகளை வழங்குவதற்கானதொரு நிகழ்ச்சித் திட்டம் இசுறு செயற்றிட்டத்தினால் மேற் கொள்ளப்பட்டது. இசுறு அபிவிருத்தி சங்கங்களினால் நன்மை பெறுநர்களுக்கு வெவ்வேறு மூலிகைகள் பற்றி செயல்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இசுறு அபிவிருத்திச் சங்கங்களினால் பொறுப்பேற்கப்பட்ட நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டமையானது 3 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்ட சங்கங்களின் மேம்பட்ட இயலளவைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அபிவிருத்திச் சங்கங்களின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம், சேமிப்புக்கள் என்பன 2000ஆம் ஆண்டு இறுதியில் முறையே ரூ.5.6 மில்லியனாகவும், ரூ.6.3 மில்லியனாகவும் காணப்பட்டன. சங்கங்களினால் தமது சொந்த நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்கள் ரூ.50 மில்லியனாகவிளங்கின.

### வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம்

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலைத் தொடங்குவதற்கான ஆரம்ப ஒழுங்குகளை மத்திய வங்கி இவ்வாண்டில் மேற்கொண்டது.

"வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம்" எனப் பெயர் கொண்ட நுண்பாக

கொடுகடன் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 1999 ஒகத்து 4ஆம் நாளன்று இலங்கை அரசும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியும் கடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டன. இச் செயற்றிட்டமானது கோட்பாடு, கொடுகடன் கூட்டு அணுகுமுறையை வெற்றிகரமாகப் பின்பற்றி சிறிய வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினை ஒத்ததாகவே இருக்கிறது. இச்செயற்றிட்டமானது முறை சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கொடுகடன்களைப் பெறமுடியாத வறிய கிராம மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு நிறுவன ரீதியான கொடுகடனை வழிப்படுத்துவதற்கான பயன்மிக்க கொடுகடன் வழங்கல்பொறி முறையொன்றினை ஏற்படுத்துவதனையே நோக்கமாகக் கொண்டிருந்தது. இச் செயற்றிட்டமானது நன்மை பெறுநர்களின் பொருளாதார நிலைமைகளையும் பொதுவான நலன்புரிகளையும் மேம்படுத்துமெனவும் இறுதியில் அது இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்திகளுக்கு உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பதுளை, நுவரெலியா, மாத்தளை, களுத்துறை, குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஆறு மாவட்டங்கள் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தவதற்காக இனங்காணப்பட்டுள்ளன.

ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி மத்திய செயற்றிட்ட அலுவலகத்தையும் செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்களையும் ஏற்படுத்தியதுடன் அவற்றிற்கான ஆட்களையும் சேர்த்துக்கொண்டது.

கொடுகடன், பயிற்சி, தொழில்நுட்ப உதவி மற்றும் செயற்றிட்ட நிருவாகம் என்பனவற்றிற்கான மொத்தச் செயற்றிட்டச் செலவு யப்பானிய யென் 1,610 மில்லியன் (ரூ.870 மில்லியன்) என மதிப்பிடப்பட்டிருக்கிறது. பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி யப்பானிய யென் 1,368மில்லியன் (ரூ.739 மில்லியன்) கொண்ட கடனை வழங்கவுள்ள வேளையில் செயற்றிட்டச் செலவுகளின் உள்நாட்டுக் கூறினை ஈடுசெய்வதற்காக எஞ்சிய தொகையினை நிதியிடுமாறு அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## சுறதுற நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக தொழில் முயற்சி கொடுகடனூடாக சுய வேலைவாய்ப்பினை மேம்படுத்தல்

சுறதுற நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன அவற்றின் சொந்த நிதியத்திலிருந்து ஆண்டிற்கு 10 சதவீத வட்டியில் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தினைத் தொடர்ந்தன. அரசாங்கம் 10 சதவீத வட்டி உதவிக்கொடுப்பனவை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் வழங்கியது.

கட்டம் II இன் கீழ், வருமான உருவாக்க சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக தகுதிபெற்ற கடன்பாட்டாளர்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் செய்யப்படும் கடன் பகிர்ந்தளிப்பிற்காக 30,000 கடன்கள் தொடர்பாக ரூ.1,300 மில்லியன் கொண்ட தொகை இலக்கிடப்பட்டிருந்தது. இத்திட்டம் தொழிலற்றவர்கள் குறிப்பாக படித்த இளைஞர்கள் புதிய செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு அவர்களை இயலச் செய்யும் விதத்தில் கடன்களை வழங்கியது.

2000ஆம் ஆண்டு இறுதியில், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ. 907 மில்லியன் பெறுமதியான 23,000 செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டுள்ளன. ஆய்விற்குரிய ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் 3,752 செயற்றிட்டங்களுக்காக ரூ.171 மில்லியனை வழங்கின.

1997இல் அதன் தொழிற்பாடுகளை நிறைவு செய்து கொண்டுள்ள சுறதுற கட்டம் I இன் மீளளிப்புக்களை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்தது. இக் கட்டத்தின் கீழ், 5 ஆண்டுகள் சலுகைக் காலத்தை உள்ளடக்கி 7ஆண்டுக் காலப்பகுதிக்கு ஆண்டொன்றிற்கு 4 சதவீத வட்டி வீதத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் வழங்குவதற்காக அரசு ரூ.350 மில்லியன் கொண்ட தொகையை ஒதுக்கியது. சுறதுற கட்டம் I நிகழ்ச்சித் திட்டம் பொதுவாக 65 சதவீதமான மீளளிப்பு வீதத்தினைப் பேணியது. கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட உண்மையைக் கண்டறியும் அளவீடானது கடன்பாட்டாளர்கள் சிறப்பற்ற முறையில் இனங்காணப்பட்டமையே கொடுகடன் திட்டத்தின் கீழ் தாழ்ந்த மீட்பு வீதங்களுக்குக் காரணமாக இருந்தமையை எடுத்துக்காட்டியது.

## உணவு மற்றும் ஊட்டச் சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம்

உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டமானது வேளாண்மை அமைச்சின் வேண்டுகோளின்படி 1997இல் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசினால் பெறப்பட்ட யப்பானிய உணவு உற்பத்திக் கொடையின் இணைக்கிணை நிதியத்திலிருந்துரூ.284 மில்லியன் கொண்ட தொகையை அரசு வழங்கியது. கொடுகடன் திட்டமானது வேளாண்மையாளர் அமைப்புக்கள்

கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றினூடாக கொடுகடனை வழிப்படுத்தும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு இறுதியில் நிதியிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.25 மில்லியனாகும். கடன் பிணைகளுக்கு வங்கிகளினால் ஏற்றுக் கொள்ளத்தக்க பிணைகளை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களும் வேளாண்மையாளர் அமைப்புக்களும் எதிர்நோக்கிய இடர்ப்பாடுகளே கொடுகடனின் குறைப்பயன்பாட்டிற்கான முக்கிய காரணியாக விளங்கியது. வங்கியானது நெல் பதனிடல், பாற்பண்ணை, வாழைப் பயிர்ச் செய்கை மற்றும் உணவு பதனிடல் என்பனவற்றிற்காக ரூ.129 மில்லியன் கொண்ட கடன்களுக்கு ஒப்புதலளித்தது. எனினும் ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களுக்கு நிதியிடுவதற்கு மட்டுமே இத்திட்டம் தொழிற்பாட்டிலிருக்கக் கூடும்.

## கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம்

1995இல் கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கடன் மீளளிப்புக்களிலிருந்து நிதிகளை மாற்றல் செய்வதன் மூலமாக சுழலும் நிதியம் நிறுவப்பட்டது. 1997இல் தொழிற்பாட்டினைத் தொடங்கிய ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட சுழலும் கொடுகடன் திட்டமானது மாவட்டத்திலுள்ள தொழிலற்ற கல்விகற்ற இளைஞர்கள் புதிய சுய தொழில் வாய்ப்பு செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு அல்லது ஏற்கனவேயுள்ள அவர்களது சுய வேலைவாய்ப்பு செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு தொடர்ந்தும் கடன்களை வழங்கியது. செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக நன்மை பெறுநர்களை அடையாளங்காணவும் வாணிப அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் நன்மை பெறுநர்களை பொருத்தமான வங்கிகளுக்கு வழிப்படுத்துவதற்குமாக கட்டண அடிப்படையொன்றில் வாணிப அபிவிருத்தி அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். செயற்றிட்டமானது 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.142 மில்லியன் பெறுமதியான 3,594 துணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டது. இவ்வாண்டுக் காலத்தில், பங்கேற்கும் மூன்று கொடுகடன் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் சப்பிரகமுவா அபிவிருத்தி வங்கி என்பன முறையே ரூ.2 மில்லியன், ரூ.12 மில்லியன் மற்றும் 29 மில்லியன் கொண்ட கடன்களை வழங்கின.

செயற்றிட்டத்தின் கீழ் பின்பற்றப்பட்ட கொடுகடன் வழங்கல் பொறிமுறையானது, மிக வெற்றிகரமாக அமைந்தமையின் காரணமாக எதிர் காலத்தில் செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் விரிவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

2000ஆம் ஆண்டு திசெம்பரில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை, தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டத்தில் கிராமியக் கொடுகடன் திணைக்களம் பங்கேற்பதற்கு ஒப்புதலளித்தது. 1999ஆம் ஆண்டு நவெம்பர் 15 அன்று இலங்கை அரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கி சிஎஉ 13.7 மில்லியன் கொண்ட கடனை வழங்கும். இச் செயற்றிட்டமானது 2000ஆம் ஆண்டு மாச்சிலிருந்து 2006ஆம் ஆண்டு ஒகத்து வரையான ஆறு ஆண்டுக் காலப்பகுதிக்கு அரசின் சார்பில் தொழிற்பயிற்சி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும்.

போட்டியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றதன் மூலமாக தொழில் பயிற்சி முறையினை மீளவமைத்து ஆற்றுப்படுத்துவதினூடாக உயர்ந்த தரத்திலான தொழிற்படையினைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினையும் நம்பகத் தன்மையினையும் மேம்படுத்துவதனையும், தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் தனியார்துறையினருக்குமிடையிலான நெருங்கிய ஒத்துழைப்பை ஊக்குவிப்பதனையும் செயற்றிட்டம் அதன் குறிக்கோளாகக் கொண்டிருந்தது. செயற்றிட்டமானது பின்வரும் நான்கு கூறுகளான (அ) தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினையும் தொடர்பினையும் மேம்படுத்தல் (ஆ) நிறுவன அபிவிருத்தியும் மனித மூலவள அபிவிருத்தியும் (இ) மூலவளங்களைத் திரட்டி அதனை வலுப்படுத்துவது (ஈ) புதுமைகளைப் புகுத்தல் மற்றும் அரசல்லா அமைப்புக்கள்/ தனியார்துறையின் பங்கேற்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்திருக்கும் மக்களுக்கு வழங்கப்பட்ட தகுதியுடைய துணைக் கடன்களுக்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடலை வழங்குவதன் மூலமாக புதுமைகள் புகுத்தல் மற்றும் அரசல்லா நிறுவனங்கள்/தனியார்துறை பங்கேற்புக்கூறு என்பனவற்றின் நடைமுறைப்படுத்தல்களுக்கு மத்திய வங்கி பொறுப்பாகவுள்ளது. அரசாங்கத்துடன் நிருவாக உடன்படிக்கைகளில் கையெழுத்திடவும், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுடன் துணைக்கடன் உடன்படிக்கையில் கையெழுத்திடவும் வங்கி ஆரம்ப ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தது. தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினைப் பூர்த்தி செய்யும் உதவி

## அட்டவணை II.13
## 2000 இல் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதியிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுநர் களுக்கான வட்டிவீதம் | 2000.12.31வரை கொடு கடன் பகிர்ந்தளிப்பு (ரூ.மில்.) | பொருந்தத் தக்கவிடத்து மீளப் பெறல் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005) | ஆ.அ.வ | சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தல். | ஐ.அ.டொ 20.952 மில். | ச.நி.வை.வீதம் +2 (மீள்நடுகைக்கு) ச.நி.வை.வீதம் +6 (ஏனையநோக்கம்) | 372.3 | 95 |
| 2. | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2004) | ஆ.அ.வ | நிரந்தரப்பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல் பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் | ஐ.அ.டொ 15.685மில். | நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | 294.7 | இன்னமும் சலுகைக் காலத்தில் |
| 3. | தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1992 - 1999) | ஆ.அ.வ | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1மில். | 14 | 417.6 | 85 |
| 4. | தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டக் (சுழலம் நிதி) கொடுகடன் திட்டம் (2000ஆம் ஆண்டிலிருந்து) | இலங்கை அரசு | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1மில். | 12 | 37.8 | 85 |
| 5. | வடமேல் மாகாண நீர் மூல வளங்கள் அபிவிருத்தி செயற்றிட்டம் (1993 - 2000) | ஆ.அ.வ | செயற்றிட்டப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதார சமூக மற்றும் ஊட்டச்சத்தை நல்ல நிலையில் வைத்திருத்தல். | ஐ.அ.டொ 2.7மில். | 14 | 116.7 | 95 |
| 6. | வடமத்திய மாகாணத்தின் பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1996 - 2002) | ஆ.அ.வ, வே.ப.நி க.ச.அ.க, உ.நி.தி | குறைந்த வருமானமுடைய மக்களின் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் | இல.ரூ.153மில். | ஆகக்கூடியது 17 | 3.3 | |
| | வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (1997 - 2003) | | | இல.ரூ.43மில். | | | |
| 7. | நகர சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (1999 - 2001) | ஐ.அ.ப.அ முகவர் | நகர மற்றும் நகரம்சார் பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றாடல் வசதிகள், சுகாதாரம், நலம் என்பனவற்றை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 4 மில். | 16 | 32 | 95 |
| 8. | சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2000) | வே.ப.நி க.ப.அ.க இலங்கை அரசு | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். | சி.எ.உ 4.85மில். | 16 (வேளாண்மை) 20 (ஏனைய நோக்கங்கள்). | 569 | 96.7 |
| 9. | உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் (1997இல் தொடக்கப்பட்டது) | யப்பானிய அரசு | நாட்டில் உணவு உற்பத்தியையும், உணவு செய்முறைப்படுத்தல் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்தல். | இல.ரூபா 284மில். | 10.0 | 115 | வி.கி |
| 10. | புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | அ.வ.உ.தொ.ப. கொ.நி | குறுங்கால உணவுப் பயிர்களை பயிரிடும் கிராமிய வேளாண்மையாளர்களின் வாழ்க்கையை மேமபடுத்தல். | - | 12.0 | 594 | 85 (ஆ) |
| 11. | கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் (1997 - 2007) | இலங்கை அரசு | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். | இல.ரூபா 100மில். | 10.0 | 143.4 (இ) | |
| 12. | சுறதுற நிகழ்ச்சித்திட்டம் கட்டம் 11 (1998 இலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | படித்த வேலையற்ற இளைஞர்களிடையே சுயதொழில் வாய்ப்பினை மேம்படுத்தவதன் மூலம் அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தினையும் அதிகரித்தல். | இல. ரூபா 1300 மில். | 10 | 914.3 | 53 |
| 13. | யப்பான் யூ கோ நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதிச் செயற்றிட்டம்) - தொடங்கப்பட்ட ஆண்டு 2000 | ப.ஒ.அ. யப்பானிய வங்கி | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன்வழங்கல் முறையினை நிறுவுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப்பழக்கத்தை மேம்படுத்தலும். | யப்பானிய யென் 1,368 மில். | சந்தை வீதங்கள் | வி.கி | வி.கி. |
| 14. | மாத்தளை பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித் திட்டம் | ஆ.அ.வங்கி | கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தி வலுவாக்கல் | சிஎஉ 2 மில். | 14 | வி.கி | வி.கி |
| 15. | தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம (2000ஆம் ஆண்டில் தொடங்கியது) | ஆ.அ.வங்கி | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை, கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது. | ஐ.அ.டொ. 0.657 | நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | வி.கி | வி.கி |

(அ) ச.நி.வை. - சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம்.
(ஆ) ஏறத்தாழ மொத்த நிலைமை.
(இ) இலங்கை மத்திய வங்கியினால் மீள் நிதியிடப்பட்ட மொத்தத் தொகை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தேவைப்படும் மக்களுக்கு உதவி வழங்குவதற்கானதொரு முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக சுயவேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சி முயற்சியொன்றினை மேற்கொள்ளுவதற்கு செயற்றிட்டம் எதிர்பார்க்கின்றது. குறைந்தது ரூ.50,000 இலிருந்து கூடியது ரூ.250,000 என்ற நியதிக்குட்பட்டு சிறிய அளவு தொழில் முயற்சி அல்லது சுய தொழில் வாய்ப்பு நடவடிக்கைகளை நிறுவுவதற்கு ஆரம்ப நிதியியல் உதவியினை வழங்குவதற்காக மேற் குறிப்பிட்ட செயற்றிட்டத்திற்கு ஐ.அ.டொலர் 657,000 டொலர் கொண்ட மொத்தத் தொகை ஒதுக்கப்பட்டது.

## மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டம்

1999 இலிருந்து நடைமுறைக்கு வந்த வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் 2000ஆம் ஆண்டில் அதனது தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. இச் செயற்றிட்டமானது பரீட்சார்த்த அடிப்படையில் மாத்தளை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கோட்பாட்டு ரீதியாக இச் செயற்றிட்டமானது அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னைய ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திலிருந்தும் வேறுபட்டதாகும். இப்புதிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தனியார் துறையினர் செயற்றிட்டத்தில் பயனுறும் வகையில் பங்கேற்பினை மேற்கொள்வர். இதுவும் மாவட்டத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழில் முயற்சி ஆற்றல்களும் மாவட்டத்தில் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை எய்துவதற்கு சாதகமாக அமையும். கொடுகடன் கூறிற்கான நிறைவேற்று முகவராக இலங்கை மத்திய வங்கி தொழிற்படுகின்ற வேளையில் மாத்தளைப் பிரதேச அலுவலகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் இந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும். கொடுகடன் கூறின் கீழ் கந்துரட்டை அபிவிருத்தி வங்கி முக்கியமான பங்கேற்புக் கொடுகடன் நிறுவனமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் சிஎஉ 8.35 மில்லியன் கொண்ட கடனை அரசிற்கு வழங்கியது. இது மாத்தளை மாவட்டத்தில் குறிப்பாக கிராமப் பகுதிகளிலுள்ள நுண்பாக மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கு நிதியிடப் பயன்படுத்தப்படவுள்ள சிஎஉ 2 மில்லியன் கொண்ட கொடுகடன் கூறினையும் உள்ளடக்குகிறது. கொடுகடன் கூறின் நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சின் பிரதேச அபிவிருத்திப் பிரிவின்கீழ் செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகமொன்று மாத்தளையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமியக் கொடுகடன் திணைக்களத்தின் வெளிப்படுத்தலின் கீழ் மாத்தளையிலுள்ள வங்கியின் பிரதேச அலுவலகம் கொடுகடன் கூறினை மேற்பார்வை செய்து கண்காணிக்கும்.

ஆய்விற்குரிய ஆண்டில் வங்கி செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக நிதி திட்டமிடல் அமைச்சுடன் நிருவாக உடன்படிக்கைகளையும் கந்துரட்டை அபிவிருத்தி வங்கியுடன் துணைக்கடன் உடன்படிக்கையையும் செய்து கொண்டுள்ளது.

தற்பொழுது மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்தின் தொகுப்பொன்று அட்டவணை 11.13 காட்டப்பட்டுள்ளது.

## பிரதேச அலுவலகங்கள்

மாத்தறை, அநுராதபுரம், மற்றும் மாத்தளை மாவட்டங்களிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொறுப்பினை நாணயச்சபை 2000ஆம் ஆண்டு செத்தெம்பரில் கிராமியக் கொடுகடன் திணைக்களத்திடம் ஒப்படைத்தது. கிராமியக் கொடுகடன் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட கருமங்களாவன பிரதேச அலுவலகங்களின் வேலைகளை இணைத்ததுடன் அவர்களின் நிருவாக மற்றும் தொழிற்பாட்டு பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண உதவுதல். நடவடிக்கைகளைப் பரிசோதித்தல் மற்றும் பிரதேச அலுவலகங்களின் செயலாற்றத்தினைக் கண்காணித்தல் என்பனவாகும்.

2000ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மரபுரீதியான மத்திய வங்கித் தொழில் நடவடிக்கைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டன. அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் மூன்று பிரதேச அலுவலகங்களும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை மேம்படுத்துவதற்கு முன்னுரிமையை வழங்கின. இதன்கீழ் வேளாண்மை உற்பத்திகளை வாங்குபவர்களும் விற்பனை செய்பவர்களும் முன்னரே தீர்மானித்துக் கொண்ட விலையில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான வசதிகளை வழங்குவதனால் வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளுக்கு நியாயமான விலைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்த வேளையில் வாங்குனர்கள் சிறந்த தரமான உற்பத்திகளை உரிய நேரத்தில் பெறக்கூடியவராக இருந்தனர். சம்பந்தப்பட்ட இடங்களிலுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளுடன் இணைப்பினைக் கொண்டுள்ள மூன்று பிரதேச அலுவலகங்களும் இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் தம்மை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டன. மேலும் பிரதேச அலுவலகங்கள் நாணயத் தொழிற்பாடுகள் (மாத்தறை

மற்றும் அநுராதபுரம்) காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள், தரவுச் சேகரிப்பு, நன்மை பெறுநர்கள் பயிற்சி நிகழ்ச்சித்தித் திட்டங்களை நடத்துதல், பிரதேச அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு உதவுதல் மற்றும் இப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கையிலீடுபட்டுள்ள அரச திணைக்களங்கள், முகவர்கள் மற்றும் அமைப்புக்களை ஒருங்கிணைத்தல் ஆகிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தன.

**மாத்தறை**

மாத்தறைப் பிரதேச அலுவலகம் 2000ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கித் தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் புள்ளி விபரங்கள், மரபுரீதியான மத்திய வங்கித் தொழில் தொழிற்பாடுகள் மற்றும் நிதியியல் நடவடிக்கைகளுடன் தொடர்பான மற்றைய விடயங்கள் ஆகிய முக்கிய துறைகளில் அதன் கடமைகளைத் தொடர்ந்தும் ஆற்றியது. அபிவிருத்தி வங்கித் தொழில் நடவடிக்கைகள் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டங்களை ஒருங்கிணைத்தல், காலி, மாத்தறை மாவட்டங்களிலுள்ள சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் செயற்றிட்ட கொடுகடன் திட்டம், பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள், றுகுணு அபிவிருத்தி வங்கி மற்றும் மற்றைய வங்கிகளினூடாக பிரதேசத்திலுள்ள முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை அறிமுகப்படுத்தல், அறுணலு கிராம ஏற்பு நிகழ்ச்சித்திட்டம், மற்றும் கிராமிய கொடுகடன் திட்டங்கள் என்பனவற்றை அபிவிருத்தி வங்கி நடவடிக்கைகள் உள்ளடக்கியுள்ளன.

ஆராய்ச்சி மற்றும் புள்ளி விபரவியல் தொழிற்பாடுகளின் கீழ் மாத்தறையில் வாராந்த தரவு சேகரிப்பு, மற்றும் மாத்தறை மாவட்டத்திலுள்ள ஆறு நிலையங்களின் மாதாந்தத் தரவு சேகரிப்பிற்கு உதவுவதிலும் மாவட்ட அடிப்படையிலான தரவுகளைத் தயாரிப்பதிலும் மாத்தறையில் நகரசபைப் பகுதியிலுள்ள சிறு கைத்தொழில்கள் மீதான அளவீடுகளை மேற்கொள்வதிலும் இவ்வலுவலகம் தொடர்ந்தும் ஈடுபட்டது. மாத்தறைப் பிரதேச அலுவலகத்தினால் ஆற்றப்பட்ட ஏனைய மரபுவழி மத்திய வங்கித் தொழில் தொழிற்பாடுகள் நாணயத் தொழிற்பாடுகள், வர்த்தக வங்கிகளின் நடைமுறைக் கணக்குகளைப் பேணல், பிரதேச தீர்வகங்களைத் தொழிற்படுத்தல், முதனிலை வணிகர்களூடாக மத்திய வங்கிப் பிணையங்களின் விற்பனையை மேம்படுத்தல் இலங்கை மத்திய வங்கி வெளியீடுகளின் விற்பனை, தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பிரதேச அபிவிருத்தி வங்கி அலுவலர்களுக்கான பயிற்சி, மாணவர்களுக்கான கல்விசார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் ஏனைய முகவராண்மைகளுடன் தொடர்பான மற்றைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றை நடாத்துதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பிரதேச அலுவலகம் பிரதேச அபிவிருத்தி வங்கி மற்றும் கிராமிய கொடுகடன் திணைக்களம் என்பனவற்றுடன் இணைந்து இப்பிரதேசத்தில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை அறிமுகப்படுத்துவதற்கு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டது. இப்பணியானது வீரவில, லுணுகம்வெகர, அம்பாந்தோட்டை, அங்குணகொலபெலஸ்ச, ஆகிய இடங்களிலுள்ள நெற் செய்கையாளர் மற்றும் வாங்குனர், சூரியவேவா, லுணுகம்வெகர மற்றும் வீரகெட்டியா ஆகிய இடங்களிலுள்ள எள்ளு உற்பத்தியாளர் என்போருக்கான தொடர்ச்சியான கூட்டங்களை நடத்துவதுடன் தொடர்புபட்டதாக இருந்தது. பிரதேச அலுவலகம் தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட வங்கியாளர் கூட்டத்தினூடாக வர்த்தக வங்கிகளுக்கு முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்தியது. இந்த முயற்சிகளின் பெருமளவு விளைவாக 2000ஆம் ஆண்டின் இறுதியில் நெல் மற்றும் எள்ளின் கொள்வனவிற்காக ரூ.49 மில்லியன் மொத்தப் பெறுமதியை உள்ளடக்கிய 779 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள பறவெகர மற்றும் அன்குலுமாதுவ ஆகிய இடங்களிலுள்ள அறுணலு கிராம ஏற்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக பிரதேச அலுவலகம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு தொடர்ந்தும் உதவியது.

நாணயத் தொழிற்பாட்டினைப் பொறுத்த வரையில், சுற்றோட்டத்திற்கு வெளியேயிருந்த நாணயங்களைச் சேகரிப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட ரூ.3.24 மில்லியன் பெறுமதியான 3,775 நாணயப் பைகளைக் கொண்ட மூன்று சரக்குத் தொகுதி தொடர்பாகவும் பிரதேச அலுவலகத்தினால் சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாத்தறைப் பிரதேச அலுவலகத்தில் தொழிற்பட்ட பிரதேச தீர்வகம் இப் பிரதேசத்திலுள்ள 7 வர்த்தக வங்கிகளுக்கான தீர்வு வசதிகளை வழங்கியதன் மூலம் நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் அவர்களது காசோலை வைப்புக்களின் பெறுதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிப்படுத்தியது. இவ்வாண்டில் ரூ.44.8 பில்லியன் பெறுமதியான 209,065 காசோலைகள் பிரதேச தீர்வகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

## மாத்தளை

ஆய்விற்குரிய ஆண்டில் மாத்தளை பிரதேச அலுவலகத்தினால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாக வேளாண்மை உற்பத்திகளுக்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை மேம்படுத்தியமை, அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டமை, உயர்தொழில் நுட்ப வேளாண்மை தொடர்பான வேளாண்மையாளர் கல்வி, தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி, நுண்பாகத் தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி, கிராம ஏற்பு நிகழ்ச்சித் திட்டங்கள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, வங்கித் தொழில்துறை அபிவிருத்தி மற்றும் கிராமிய கொடுகடன் நடவடிக்கைகள் என்பன காணப்பட்டன. வேளாண்மையாளர்களினால் எதிர்நோக்கப்படும் சந்தைப்படுத்தல் பிரச்சனைகளின் நோக்கில் பிரதேச அலுவலகம் இப் பிரதேசத்தில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையை மேம்படுத்துவதற்கே அதன் முன்னுரிமையை வழங்கியது. முதலாவது நிகழ்ச்சித் திட்டம் மொரயாயவில் மேற் கொள்ளப்பட்டதுடன் ஏற்பாட்டாளர்களாக கடமையாற்றுவதற்காக இலங்கை வங்கி மற்றும் கந்துரட்டை அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் ஏற்பாட்டுடன் 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் 312 ஒப்பந்தங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பிரதேச அலுவலகம் பயிற்சியையும் வழங்கியதோடு வேளாண்மையாளர்களின் தேர்ச்சியினை மேம்படுத்துவதற்காக செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் நடாத்தியது. இவ்வாண்டில், கிராம ஏற்பு, நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்,அபிவிருத்தி செய்யப்படுவதற்கான பிரதேச அலுவலகத்தினால் மாத்தளை மாவட்டத்திலுள்ள தூல்லேவா குடியேற்றப்பகுதி தெரிவு செய்யப்பட்டது.

இப்பிரதேசத்திலுள்ள வங்கியாளர்கள் அவர்களிடையே சிறந்த இணக்கப்பாடொன்றை விருத்தி செய்யும் நோக்குடன் பொதுவான பிரச்சனைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்காக மாத்தளையிலும் கண்டியிலும் இரு அமைப்புக்களை நிறுவுவதற்கு பிரதேச அலுவலகம் முயற்சிகளை மேற்கொண்டது.

2000ஆம் ஆண்டில் பிரதேச அலுவலகம் உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாடு, தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி, இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம், நகர சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (கொடுகடன் கணக்காணிப்புக் குழு நடவடிக்கைகள்) சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் -பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டம், வேளாண்மைக்கான வட்டி உதவிக் கொடுப்பனவு திட்டம் என்பன தொடர்பான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

பிரதேச அலுவலகம் கண்டியிலும் மாத்தளையிலும் இரு தீர்வகங்களை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. கண்டித் தீர்வகம் இரு (02) அரச வங்கிகள் மற்றும் ஒன்பது (09) தனியார் வர்த்தக வங்கிகளின் பங்குபற்றலுடன் ரூ.23.1 பில்லியன் பெறுமதி கொண்ட 811,533 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்த வேளையில் மாத்தளைத் தீர்வகம் ரூ.2.1 பில்லியன் பெறுமதி கொண்ட 113,433 காசோலைகளைக் கையாண்டது.

## அநுராதபுரம்

அநுராதபுரம் பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாக நுண்பாக தொழில் முயற்சி அபிவிருத்தி, பயிர்செய்கை முறைகளை அபிவிருத்தி செய்தல், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புக்கள், வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், கல்வி ஆய்வரங்குகள், தரவுச் சேகரிப்பு, மத்திய வங்கியின் வெளியீடுகளை விற்பனை செய்தல், நாணயத் தொழிற்பாடுகள் மற்றும் பிரதேச தீர்வகம் என்பன காணப்பட்டன.

நுண்பாக தொழில் முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் பிரதேச அலுவலகம் அநுராதபுர மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்காக சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்களை அவர்கள் தொடங்குவதற்கு உதவும் பொருட்டு உணவு பதனிடல், மூலப் பொருட்களின் கொள்வனவு, வங்கித் தொழில் மற்றும் நிதியிடல் உதவி, தரக்கட்டுப்பாடுகளைப் பேணுதல் போன்ற பல்வேறு விடயங்களில் அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக மூன்று தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

வறிய கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும், அவர்களின் தேர்ச்சியை உயர்த்துவதற்குமான பிரதேச அலுவலகத்தினால் இலக்கிடப்பட்ட தொகுதியினருக்காக பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் /செயலமர்வுகள் நடத்தப்பட்டன. பயிர்செய்கை முறைகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இப் பிரதேசத்திலுள்ள வேளாண்மையாளர்/பயிர்ச்செய்கையாளர்களுக்கு பிந்திய பண்ணைத் தொழில்நுட்பங்கள், நீர்ப்பாசன முறைகள், விரயங்களைக் குறைத்தல், மற்றும் உயர்ந்ததர உற்பத்திகளைப் பேணல் போன்றவற்றின் மீதான அறிவு

புகட்டப்பட்டது. பிரதேச கிராமிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதனை நோக்கமாகக் கொண்டு வேளாண்மை நடவடிக்கைகளில் கிராமியத்துறையை ஊக்குவிப்பதற்காக பிரதேச அலுவலகத்தினால் இவ்வனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன.

2000ஆம் ஆண்டுப் பகுதியில், இப் பிரதேசத்தில் தொழிற்படுகின்ற வங்கிகளின் ஒத்துழைப்புடன், இப்பகுதியில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை மேம்படுத்துவதற்கு பிரதேச அலுவலகம் முயற்சிகளை மேற்கொண்டது. இதன்விளைவாக, அநுராதபுரம் பிரதேச அலுவலகம் ரூ.35 மில்லியன் பெறுமதியான 963 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது.

இந் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக, அநுராதபுரம் பிரதேச அலுவலகம் நாணயத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல், பிரதேசத் தீர்வக நடவடிக்கைகள் மற்றும் மத்தியவங்கி வெளியீடுகளை விற்பனை செய்தல் ஆகியவற்றிலும் ஈடுபட்டிருந்தது.

## நிதியியல் சந்தைகள்

படுகடன் பிணையங்கள் சந்தையை முக்கியமாக வலியுறுத்துவதுடன் இலங்கையின் நிதியியல் சந்தையின் அபிவிருத்திக்கு ஏற்ற கொள்கைச் சூழ்நிலைகளைத் தூண்டக்கூடிய தன்மைகளை உருவாக்குவதற்கு நிதியியல் சந்தைத் திணைக்களத்தினூடாக மத்திய வங்கி உதவுகிறது. திணைக்களத்தின் தொழிற்பாடுகள் பொருத்தமான ஊக்குவிப்புக்களை இனங்காணுதல், நிறுவன ரீதியான அனுசரணைத் தேவைப்பாடுகள், நிதியியல் சந்தைகளின் பொருத்தமானதும் வினத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டிற்கான தொழிற் பாடுகளையும, ஒழுங்குமுறைப்படுத்தல் அமைப்புக் களையும் மேம்படுத்துதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாக இருந்தது. திணைக்களம் தற்பொழுது நடைபெற்று வருகின்ற நிதியியல்துறை சீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைப்பதற்கும் கண்காணிப்பதற்கும் பொறுப்பாக இருப்பதுடன் நிதியியல் துறையின் சீரமைப்பிற்கு பொறுப்பாகவுள்ள நிதியியல்துறைச் சீரமைப்புக்குழுவின் நடவடிக்கை களையும் ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக உள்ளது. திணைக்களம் நிதியியல் துறையுடன் தொடர்புபட்டதாக மத்தியவங்கிக்கான தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டம் மீதான வெளிநாட்டு நன்கொடை முகவராண்மைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றது.

ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் பல்வேறு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டிருந்தது. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

## வைப்புக் காப்புறுதித் திட்டம்

வங்கிகளையும் நிதிக் கூட்டுநிலையங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிவதற்காக மத்திய வங்கி செயலணிக் குழுவொன்றினை நியமித்துள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் சிறிய வைப்பாளர்களைப் பாதுகாப்பதும் அரச வங்கிகளுக்கும் தனியார் வங்கிகளுக்குமிடையிலான தொழிற்பாட்டு நிலைமைகளை சமப்படுத்துவதுமேயாகும்.

செயலணிக்குழு பின்வருவன தொடர்பான விதந்துரைப்புக்களைச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) வைப்புக் காப்புறுதிப் பாதுகாப்பின் செயற்பரப்பும் மட்டமும்

(ஆ) நிறுவன ரீதியான அமைப்பும் நிருவாகமும்

(இ) நிதியிடற் செலவும் உடைமையும்

(ஈ) காப்புறுதிக் கட்டுப்பண வீதங்களின் வகையும் வைப்பாளர்களின் கோரல்களை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகளும்.

(உ) வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை ஏற்படுத்தவும் நிருவகிப்பதற்கும் தேவையான உத்தேச சட்டவாக்கத்தின் அமைப்பு.

### சட்டவாக்கங்களும் உத்தேச சட்டமும்

**(அ) பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் முதனிலை வணிகர்கள் சம்பந்தப்பட்ட ஒழுங்கு விதிகள்.**

முதனிலை வணிகர்களின் உரிமம் வழங்கல், தொழிற்பாடு மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு வேலைகளை நிருவகிக்கும் புதிய ஒழுங்கு விதிகள் 2000 ஆம் ஆண்டு மார்ச்சில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. இது திறைசேரி பிணையங்களில் பிரத்தியேக வர்த்தகத்திற்கென ஒதுக்கப்பட்ட தனியான மூலதனத்துடனான வேறுபட்ட பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு வணிகர்களாக அனுமதித்தது. இப்புதிய திட்டத்தின்கீழ் எட்டு (8) முதனிலை வணிகர்கள் பதிவு செய்யப்பட்டனர்.

**(ஆ) காப்புறுதிச் சட்டம்**

2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் கைத்தொழில் ஒழுங்கு விதிகள் சட்டம் 2000ஆம் ஆண்டு யூலையில் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

காப்புறுதித்துறைக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரசபையொன்றை நிறுவுவதற்கான அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகின்றது. காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் சபையானது காப்புறுதிக் கம்பனிகள் காப்புறுதித் தரகர் கம்பனிகள் அதேபோன்று முகவர்களின் தொழிற்பாட்டுச் சூழலை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவிருக்கும். காப்புறுதிக் கம்பனிகளுக்கான ஆகக் குறைந்த பங்கு மூலதனம் மற்றும் கடன் தீர்ப்பனவுத் தகைமை விளிம்புகள் மற்றும் ஒதுக்குகள் போன்ற முன்மதித் தேவைப்பாடுகள் என்பன சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

அரச பிணையங்களில் செய்யக்கூடிய முதலீடுகளின் ஆகக் குறைந்த குறித்துரைக்கப்பட்ட மட்டத்தினை குறைத்தமையின் மூலம் புதிய சட்டமானது காப்புறுதிக் கம்பனிகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பெருமளவு பன்முகப்படுத்தலுக்கான அதிகாரத்தினை வழங்குகின்றது. காப்புறுதி மற்றும் தரகுக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை அலுவலர்களின் தகைமைகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. காப்பீட்டுப் பெறுமதிகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் தொடர்பான தேவைப்பாடுகளும் அதில் காணப்படுகின்றன. 1962ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை இச்சட்டம் மாற்றீடு செய்தது.

(இ) **நிதிக் குத்தகைச் சட்டம்**

புதிய நிதிக் குத்தகைச் சட்டம் 2000ஆம் ஆண்டு ஒகத்தில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொழிற்பாட்டிற்குவரும்.

நிதிக் குத்தகையிடல் சட்டமானது நிதிக் குத்தகையிடல் கொடுக்கல் வாங்கல்களிலீடுபட்டுள்ள கட்சியினரின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் வரையறுப்பதுடன் நிதிக் குத்தகையிடல் கைத்தொழில்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை வரைச்சட்டங்களையும் வழங்குகின்றது. இலங்கை மத்திய வங்கி, நிதிக் குத்தகைக் கம்பனிகளுக்கான உரிமங்களை வழங்கி ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும்.

### வரைவு மசோதாக்களையும் ஒழுங்கு விதிகளையும் தயாரித்தல்

திணைக்களம் இவ்வாண்டுக் காலத்தில் பல வரைவு மசோதாக்களையும் ஒழுங்கு விதிகளையும் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. இம் மசோதாக்கள் இறுதியாக்கப்பட்டு 2001ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வரைவு மசோதாக்களையும் ஒழுங்கு விதிகளையும் தயாரித்தல்

திணைக்களம் இவ்வாண்டுக் காலத்தில் பல வரைவு மசோதாக்களையும் ஒழுங்கு விதிகளையும் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. இம் மசோதாக்கள் இறுதியாக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பின்வருவன வரைவு மசோதாக்களும் ஒழுங்கு விதிகளுமாகும்.

**(அ) ஒய்வூதிய நன்மை நிதிய ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக் குழுவிற்கான வரைவு மசோதா.**

ஒய்வூதிய நன்மை நிதிய ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கான வரைவு மசோதாவிற்கு 2000ஆம் ஆண்டு மேயில் அமைச்சரவையினால் ஒப்புதல் வழங்கப்பட்டது. தனியார் ஒய்வூதியம் மற்றும் சேம நிதியங்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகார சபையொன்றை நிறுவுவதற்கு வசதியளிப்பதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**(ஆ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தினை திருத்துவதற்கான வரைவு மசோதா.**

வங்கித் தொழில் சட்டத்திற்கான திருத்தங்களுக்காக நாணயச்சபை 2000ஆம் ஆண்டு பெப்புருவரியில் ஒப்புதலளித்ததுடன் அமைச்சரவை அதன் ஒப்புதலை 2000ஆம் ஆண்டு ஏப்பிறலில் அளித்தது.

இத்திருத்தங்கள், வங்கிகளுக்கான உரிமை வழங்கும் வழிமுறைகள் உரிமங்களை கைமீட்புச் செய்தல், வங்கிகளை ஒன்று சேர்த்தல், முடக்கிவிடுதல் மற்றும் மூடுதல், தகைமைகள், வங்கிப் பணிப் பாளர்களையும் மூத்த முகாமையாளர்களையும் நியமித்தல் மற்றும் அகற்றல் என்பனவற்றுடன் தொடர்பான மத்திய வங்கியின் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தும். இத் திருத்தங்கள் வைப்புக்களைப் பொறுப்பேற்கின்றமை நீங்கலாக நிதியியல் வாணிபங்களில் ஈடுபட்டுள்ள நிறுவன வகையைச் சார்ந்த "பதிவு செய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்கள்" தொடர்பான ஒழுங்கு முறைப்படுத்தல் வரைச் சட்டமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாட்டையும் வழங்குகின்றன.

**(இ) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தை திருத்துவதற்கான வரைவு மசோதா.**

நாணய விதிச்சட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்கள்.

- சாத்தியமான கொள்கை முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு விலை உறுதிப்பாட்டினை இலங்கை மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளாக இருப்பதனால்
- "விரிந்த பணத்தினை" கணக்கிலெடுக்கக் கூடிய வகையில் பணநிரம்பலுக்கான வரைவிலக்கணத்தினை திருத்துதல்
- நியதி ஒதுக்கு விகிதங்கள் மீதான ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த வரையறைகளை நீக்குதல்.
- தேவையான ஒதுக்குகளைக் கணிப்பதற்கான அடிப்படையை தீர்மானிப்பதற்கு நாணயச்சபைக்கு கூடியளவு நெகிழ்ச்சித் தன்மையை வழங்குதல்.
- ஒதுக்குகளின் மீது வட்டிக்கொடுப்பனவுகள் அத்துடன்
- வைப்புப் பொறுப்புக்கள் நீங்கலாக நிதியியல் பொறுப்புக்களின் மீது ஒதுக்குத் தேவைப்பாடுகளை விதிப்பதனை இயலச் செய்தல்.

## மூலதனச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்கான வரி ஊக்குவிப்புக்கள்

பங்குடைமை மற்றும் படுகடன் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் இலங்கையில் கிடைக்கததக்கதாகவுள்ள நிதியியல் கருவிகளின் அளவினை அதிகரித்துக் கொள்ளுவதற்குமாக கடந்த சில ஆண்டுகளாக தொடர்ச்சியானதொரு வரி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

2000ஆம் ஆண்டில், நிதியியல் கருவிகளை பன்முகப்படுத்துவதனை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் புதுமைகளைத் தூண்டுவதற்குப் பொருத்தமான சூழலை உருவாக்குதல் என்பனவற்றின் பொருட்டு ஈடுவைத்தல் மற்றும் சொத்துக்களில் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் என்பனவற்றிற்கான முத்திரைத் தீர்வை அகற்றப்பட்டது.

## இலங்கை அரசிற்கும் அரசுடைமையாக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்குமிடையிலான உடன்படிக்கைகள்.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கும் இலங்கை அரசிற்குமிடையில் 1998 யூலை 16ஆம் நாள் கையெழுத்தான உடன்படிக்கைகளின் முக்கிய குறிக்கோள்களாக வர்த்தக மயப்படுத்தல் மற்றும் ஒன்றிணைந்த தொழிற்பாடுகள், உற்பத்தியாக்கத்தினை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் அலுவலர்களின் மட்டங்களையும் கிளை அமைப்பினையும் ஒழுங்கு முறைப்படுத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல், கடன் மீளப்பெறுகைகளை அதிகரித்தல் மற்றும் எதிர்பாரா இடர் முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் என்பனவற்றினூடாக வங்கிகளின் இலாபத் தன்மையினையும் வினைத்திறன் மற்றும் நிதியியல் ஆற்றலையும் மேம்படுதத்துவதும் காணப்பட்டன.

தொழிற்பாட்டு சுயநிர்ணயத்தையும் குறித்துரைக்கப்பட்ட ஆண்டு செயலாற்ற இலக்குகளையும் முகாமைத்துவத்திற்கு வழங்குவதன் மூலமாக வங்கியின் உள்ளக நிருவாகத்தையும் நிதியியல் செயலாற்றத்தையும் மேம்படுத்தலாம் என இக்குறிக்கோள்கள் எதிர்பார்க்கின்றன.

இலாபத் தன்மை இலக்குகள், சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் மூலதனம் மீதான வருவாய், கடன் மீளப் பெறல் மற்றும் செயற்படாக் கடன்களுக்கான வினைத்திறன் இலக்குகள் கடன் மற்றும் நிதியியல் ஆற்றல் இலக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட இந்த இலக்குகளை அடைவதற்காக மத்திய வங்கியானது வங்கிகளின் செயலாற்றத்தினைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

## தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டங்கள்

பின்வரும் தொழில்நுட்ப உதவிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு கொடை முகவராண்மைகளையும் இணைக்கும் நடவடிக்கைகளில் இவ்வாண்டில் நிதியியல் சந்தைகள் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

**(அ) மத்திய வங்கியின் கொடுப்பனவு முறைகளையும் அரசபடுகடன் பிணையங்கள் சந்தையையும் தன்னியக்கப்படுத்தல்**

பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான உள்ளக மத்திய வைப்பக முறையொன்று இவ்வாண்டுக் காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது. முன்மொழியப்பட்டுள்ள உலக வங்கி தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதே நேரத்தில் செய்யப்படும் மொத்தத் தீர்ப்பனவு அமைப்பினை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்பான ஆரம்ப வேலைகள் 2001இல் தொடங்கவுள்ளன.

(ஆ) முதனிலை வணிகர்களின் கண்காணிப்பு

முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்வதற்காக மத்திய வங்கி புதிய சட்டவரைவொன்றை தயாரித்துள்ளது. உலக வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் முதனிலை வணிகர் முறையினை பயனுள்ள முறையில் கண்காணிப்பதற்குத் தேவையான கையேடுகளும் வழிகாட்டல்களும் இவ்வாண்டில் தயாரிக்கப்பட்டதுடன் அலுவலர்களுக்குப் பயிற்சியும் வழங்கப்பட்டது. தலப்பரீட்சிப்புக்கள் மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் ஆகிய இரண்டும் இவ்வாண்டில் தொடங்கின.

(இ) வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் மேற்பார்வை இயலளவைத் தரமுயர்த்தல்

இச் செயற்றிட்டம் இடரினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை மற்றும் கணனிக் கணக்காய்வுகளில் தல மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை இயலளவினைத் தரமுயர்த்துவதில் ஈடுபட்டிருந்தது.

சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் கீழான தொழில்நுட்ப உதவியின் இரண்டாவது கட்டம் நடைபெற்று வருகின்றது.

(ஈ) ஓய்வூதிய சீரமைப்புச் செயற்றிட்டம்

ஓய்வூதிய சீரமைப்பினை அறிமுகப்படுத்துவதற்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள ஆலோசனையாளர்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் பெறப்பட்டுள்ளன. இவ்வுதவிகள்,

- காப்புறுதி மற்றும் தனியார் ஓய்வூதிய நிதியங்களுக்கான ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரசபையினை ஏற்படுத்துதல்.
- ஓய்வூதிய மற்றும் சேமநிதி முறையினைச் சீரமைப்பதற்காகச் செய்யப்படும் முன்மொழிவுகளுக்கும் அனைத்தையும் உள்ளடக்கியதும் உறுதிவாய்ந்ததுமான சமூகப் பாதுகாப்பு முறையினை அபிவிருத்தி செய்தல்.

ஆகிய துறைகளில் பெறப்பட்டன.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

நாணயக் கொள்கையினைக் கொண்டு நடத்துதல் மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார மதியுரையாளர் என்ற வகையில் மத்திய வங்கியின் செயலாற்றும் என்பன தொடர்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆளுநருக்கும் நாணயச்சபைக்கும் உதவி புரிந்தது. இலங்கையின் பொருளாதாரம் அதேபோன்று உலகப் பொருளாதாரத்தின் அண்மைக்கால நிகழ்வுகள் என்பன தொடர்பாக புள்ளி விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்களைத் திணைக்களம் சேகரித்து பகுப்பாய்வு செய்ததுடன் தொடர்பான விடயங்களில் மேலும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டது. அது மத்திய வங்கியின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக இருந்துவரும் பொதுமக்களுக்கு பொருளாதாரத் தகவல்களை வழங்குவதை மேம்படுத்தி விரிவாக்கியது.

பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் பன்னாட்டு நாணய அலுவல்கள் தொடர்பாக 24 நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையேயான குழு என்பன வற்றுடனான இலங்கையின் உறவுகளைத் திணைக்களம் ஒருங்கிணைத்ததோடு உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை உதவிவழங்குநர்கள் என்பனவற்றுடனான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதற்கு நிதி திட்டமிடல் அமைச்சிற்கும் உதவியது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் வர்த்தக அமைச்சு என்பனவற்றின் பன்னாட்டு உறவுகள் தொடர்பாக தொழில்நுட்ப ஆதரவினை வழங்குவதிலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. இதற்குப் புறம்பாக வங்கியின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிதியமைச்சு என்பனவற்றினால் குறிப்புக்காக அனுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக திணைக்களம் ஆலோசனையும் அவதானிப்புக்களையும் வழங்கியது.

பட்டப் பின்படிப்பினை நாடும் வங்கி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் அவர்களின் ஆராய்ச்சிக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்கும் திணைக்களத்தின் ஆராய்ச்சி அலுவலர்களின் பணி கிடைக்கச் செய்யப்பட்டது. இதன் அலுவலர்கள் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினாலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அமைப்புக்களினாலும் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மூலவள ஆளணியினராகப் பணியாற்றினார்கள்.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகளைத் திரட்டி இணையம் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக பொது மக்களுக்கு கிடைக்கச் செய்தது. மாறுபட்ட முதிர்ச்சிகளுக்காக வர்த்தக வங்கிகளுக்கிடையே ரூபாக் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பிரயோகிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தினை குறித்துக் காட்டக்கூடிய இலங்கை வங்கிகளுக்கிடையேயான வழங்கல் வீதத்தினை திணைக்களம் தொகுத்தது. இலங்கை வங்கிகளுக் கிடையிலான வழங்கல் வீதத்தினைக் கணிக்க ஓரிரவு, ஏழுநாள், மற்றும் ஒரு மாதம் ஆகிய முதிர்ச்சிகள் முன்னர் உள்ளடக்கப்பட்டமைக்கு மாறாக ஓராண்டு வரையான கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் இலங்கை ப.நா.நிதியத்தினால் தொழிற்படுத்தப்படும் பொதுத்தரவு பரப்பும் முறையின் உறுப்பினராக

மாறியது. திணைக்களம் பொதுத்தரவு பரப்பும் முறைக்கு உதவுவதற்காக தரவுகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தது.

திணைக்களம் 1999ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு தனது பங்களிப்பினை வழங்கியதுடன் வங்கியின் ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து இவ்வறிக்கையின் வெளியீட்டினை ஒருங்கிணைத்தது. மேலும் நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 116இன் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கை நிறைவு செய்யப்பட்டு மாண்புமிகு நிதியமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதேபோன்று திணைக்களம் "1999இல் இலங்கையின் பொருளாதாரமும் நடுத்தரகால வாய்ப்புக்களும்" மற்றும் "2000ஆம் ஆண்டின் பொருளாதார நிலை" ஆகியவற்றினை வெளியிட்டது. நாணய விதிச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பல சிறப்புக் கொள்கை அறிக்கைகளையும் திணைக்களம் தயாரித்தது.

100 முக்கிய கைத்தொழில்' நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மாதிரி அளவீட்டின் அடிப்படையிலான மாதாந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் வெளியீடு தொடர்ந்தது. விபரமான அரையாண்டு மற்றும் முழு ஆண்டிற்குமான தனியார்துறை உற்பத்தி அளவீடுகளும் தொடர்ந்தன. "கொழும்புப் பெரும்பாக வீடமைப்பு ஒப்புதல்கள்" பற்றிய காலாண்டுச் சுட்டெண் தயாரிக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டில் வெளியீடு தொடங்கப்பட்டது. பொது அரசிறை நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்கினை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு அவற்றின் வரவுசெலவுத் திட்டத்தில் சிறப்பு அளவீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் ஆராய்ச்சி ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்டனர். இவை கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளையும் அதேபோன்று பேரண்ட மற்றும் நுண்பாக பொருளாதார விடயங்களை உள்ளடக்குகின்ற பெருமளவிற்கு கல்வித்துறைசார்ந்த ஈடுபாடுகளைக் கொண்ட ஆய்வுகளையும் உள்ளடக்கியிருந்தன. இவற்றில் சில மத்திய வங்கியின் "உயர் அலுவலர் ஆய்வுகளில்" வெளியிடப்பட்டன.

இலங்கை அரசாங்கத்திற்கும் உதவி வழங்குனர்களுக்குமிடையில் மேற் கொள்ளப்படவுள்ள பல்வேறு வெளிநாட்டுக் கடன் ஒப்பந்தங்களின் நாணயச் சிக்கல்கள் தொடர்பாக நாணயச்சபைக்கு மதியுரை வழங்குவதற்காக பல சபைக் குறிப்புக்கள் நாணயச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

வங்கியினுள்ளும் வங்கிக்கு வெளியேயுமான பல முக்கிய குழுக்களில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் சிலர் பணியாற்றினர். இவை பணிகளிலுள்ள வர்த்தகம் மீதான பொது உடன்படிக்கைப் பற்றிய அமைச்சுக் களுக்கிடையிலான துணைக்குழு, பொருட்குவித்தலுக்கு எதிரானதும் விடயங்களை மூடிமறைத்தலுக்குமான தீர்வைகளுக்கான துணைக்குழு, கைத்தொழில் மயமாக்கல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான முதன்மைத் திட்டத்தின் மீதான குழு, சென்மதி நிலுவைக்குழு, செலாவணி வீதக்குழு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான விலைக் குறிப்பீட்டுக்குழு, திரவத்தன்மை மதிப்பீட்டுக்குழு, திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் குழு மற்றும் உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக் குழு என்பனவற்றை உள்ளடக்குகிறது. திணைக்கள அலுவலர்கள் தற்போதைய வரி அமைப்பு முறைகளையும் அரசின் நடுத்தரகால வரி உபாயங்களுக்கான முன்மொழிவுகளையும் ஆராய்கின்ற நிதி திட்டமிடல் அமைச்சின் வரிவிதிப்பின் மீதான மையக்குழுவில் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

நாணயக் கொள்கையின் நடைமுறைப் படுத்தலுக்காக பயனுறும் வகையில் பயன்படுத்தப்படக்கூடிய பேரண்டப் பொருளாதார மாதிரியொன்றை அபிவிருத்தி செய்வதற்காக சுவீடன் நாட்டு ரிக்ஸ்பேங்க் வங்கியுடன் திணைக்களம் கலந்துரையாடல்களைக் தொடக்கிவைத்தது.

இலங்கை மத்திய வங்கி 2000ஆம் ஆண்டில் தென்கிழக்காசிய நியூசிலாந்து மற்றும் அவுத்திரேலியா (சியென்சா) மதியுரையாளர் கூட்டத்தினையும் 23 ஆவது தென்கிழக்காசிய நியூசிலாந்து மற்றும் அவுத்திரேலியா மத்திய வங்கித் தொழில் பயிற்சி நெறியினையும் தென்கிழக்காசிய நியூசிலாந்து அவுத்திரேலிய ஆளுநர்களின் கருத்தரங்குகளையும் நடத்தியது. தெற்காசியா, நியூசிலாந்து மற்றும் அவுத்திரேலிய மத்திய வங்கிகளின் குழு 1950 நிறுவப்பட்ட இப் பிராந்தியத்தின் மிகப் பழமையானதொன்றாகும். தற்பொழுது அபிவிருத்தியடைந்த பொருளாதாரங் களினதும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங் களினதும் 20 நாடுகளை அது உள்ளடக்கியுள்ளது. இலங்பை ஆரம்ப உறுப்பினராகும். தெற்காசிய நியூசிலாந்து அவுத்திரேலிய மத்திய வங்கி அமைப்பு 1957 இலிருந்து ஈராண்டுக்கொருமுறை மத்திய வங்கி பயிற்சி நெறியை நடாத்தி வருகின்றது. இலங்கை 1968இல் இப்பயிற்சி நெறியை நடாத்தியது. 2000ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறியில் 18 நாடுகளிலிருந்து (13 சியென்சா நாடுகள் 5 சியென்சா அல்லா நாடுகள்) 19 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பொதுவாக மத்திய வங்கிப் பயிற்சி நெறியின் முடிவில் நடாத்தப்படும் கருத்தரங்களில் சியென்சா ஆளுநர்கள் கலந்து கொள்வர். 2000ஆம் ஆண்டின்

கருததரங்கு ஒகத்தில் நடாத்தப்பட்டதோடு இது மத்திய வங்கியின் பொன்விழா நிகழ்ச்சியின் ஒரு பாகமாக இருந்தது. கருத்தரங்கின் கருப்பொருள் "மத்திய வங்கி சுயாதீனம்" என்பதாகும். இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் அதிமேதகு ஸ்ரீமான் எட்வட் ஜோர்ஜ் ஜீபீ அவர்கள் முதன்மை உரையை ஆற்றினார். 15 சியென்சா உறுப்பினர் மத்திய வங்கிகளினதும் நாணய மேலாண்மையாளர்களினதும் தூதுக் குழுக்கள் கருத்தரங்கில் பங்கு பற்றினர். கருத்தரங்கின் விஷேட அதிதியாக உலகின் மிகப் பழைய மத்திய வங்கியாகிய சுவீடன் நாட்டு ஸ்வெரிஜஸ் ரிக்ஸ் வங்கியின் துணை ஆளுநர் கலந்து கொண்டார்.

நாணயக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்குப் பயனுள்ள முறையில் பயன்படுத்தக் கூடிய பேரண்டப் பொருளாதார மாதிரியினை அபிவிருத்தி செய்வதற்கு சுவீடனில் றிக்ஸ் வங்கியுடன் ஆலோசனைகளைத் தொடங்கியுள்ளது. திணைக்களத்தின் அலுவலர்கள் மத்திய வங்கியின் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

திணைக்களத்தல் நிறுவப்பட்டுள்ள சார்க் நிதிப்பிரிவு சார்க் மத்திய வங்கி ஆளுநர்களினதும் நிதிச் செயலாளர்களினதும் நடவடிக்கைகளினது வலையமைப்பினை ஒருங்கிணைத்தது.

## புள்ளி விபரங்கள் மற்றும் கள அளவீடுகள்

புள்ளி விபரத் திணைக்களமானது, (அ) தேசிய கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை, தொழில் வாய்ப்பு மற்றும் ஏனைய சமூகப் பொருளாதாரக் குறிகாட்டிகள் ஆகியன தொடர்பான தரவுகள், (ஆ) குடும்ப அலகுகள் மற்றும் கூட்டுத்துறை தொடர்பான நுண்பாக மட்டத்திலான தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல், ஆய்வு செய்தல் மற்றும் வெளியீடு செய்தல் ஆகியவற்றில் தனது கடப்பாடுகளைத் தொடர்ந்தும் நிறைவேற்றியது.

புள்ளிவிபரத் திணைக்களம் தொடர்ந்தும் தேசிய கணக்கு மதிப்பீடுகளை காலாண்டு மற்றும் ஆண்டு அடிப்படையில் தொகுத்தல் மற்றும் வெளியிடல் ஆகிய வேலைகளை தொடர்ந்து மேற்கொண்டிருந்தது. 2000ஆம் ஆண்டில் தேசிய கணக்குகளைத் தொகுப்பதற்குக் கிடைக்கக் கூடிய தகவல்களின் தரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன் இத் திணைக்களம் புள்ளி விபர அடிப்படையில் பொருளாதார நடவடிக்கைகள் குறைவாகக் காணப்படும் பகுதிகளில் தனது கவனத்தைச் செலுத்தியது. விலைத் தரவுகள் மற்றும் விலையசைவுகளுடன் தொடர்பான சந்தைத் தகவல்களைப் பெறுவதில், திணைக்களம் முக்கியமான சந்தை மையங்களில் உணவுப் பண்டங்களின் மொத்த விற்பனை விலை மற்றும் சில்லறை விலைகளைச் சேகரிப்பதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. சில சந்தைகளில் சில்லறை விலைகளைச் சேகரிப்பதிலான அவகாசம் வாராந்த அடிப்படையிலிருந்து நாளாந்த அடிப்படைக்கு அதிகரிக்கப்பட்டது. விலைகள் பற்றிய நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த தகவல்கள் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களுக்கும் தொடர்பான நிறுவனங்களுக்கும் தொடர்ந்தும் விடுவிக்கப்பட்டன. அதே நேரத்தில், விலைகள் தொடர்பிலான சந்தைத் தகவல்களை வெளியிடுதல் விரிவாக்கப்பட்டது.

குடும்ப அலகு அளவீடுகளைப் பொறுத்தவரையில் இத் திணைக்களம் 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இரண்டு பரிசோதனை அளவீடுகளைக் கையேற்றிருந்தது. இதில் ஒன்று அநுராதபுர மாவட்டத்தில் "ஏனைய" வேளாண்மைப் பயிர்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி ஆகியன தொடர்பிலான உற்பத்தித் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காகும். மற்றையது, கொழும்பு மாவட்டத்தில் சிறிய வாணிப நடவடிக்கைகள் தொடர்பிலானதாகும். இவ்விரு அளவீடுகளும் குறிப்பிட்ட இவ்விரு துறைகளிலுமான உற்பத்தி மதிப்பீடுகளின் தரத்தை முன்னேற்றி தேசிய வருமானக் கணக்குகள் மீது தற்போதுள்ள தரவுத் தளத்தை வலுப்படுத்துவதற்காகவுமே நடத்தப்பட்டனவாகும்.

அதே வேளையில், 2001/02 ஆம் ஆண்டில் எட்டாவது நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டினை நடத்துவதற்காக 2000ஆம் ஆண்டில் ஆரம்பத் திட்டமிடல் வேலைகளை இத் திணைக்களம் ஆரம்பித்தது. ஏழாவது நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து நுண்பாகத் தரவுகளை, ஆராய்ச்சி நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தக் கூடியவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையையும் திணைக்களம் ஆரம்பித்தது.

### அளவீடுகள்

### அநுராதபுர மாவட்டத்தில் துணை உணவுப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு பற்றிய அளவீடு - சிறுபோகம் 2000

தேசிய வருமானக் கணக்குகள் மீதான தரவுத் தளத்தை வலுப்படுத்துவதற்காக, இத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முதலாவது பரிசோதனை அளவீடு, 2000ஆம் ஆண்டுச் சிறுபோகத்தில் துணையுணவுப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு தொடர்பில் அநுராதபுர மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்த அளவீட்டை நடத்துவதற்கான இரண்டாவது நோக்கம், குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

கிடைக்கக் கூடிய தகவலை அதிகரிப்பதேயாகும். இத் திணைக்களம், வேளாண்மை உணவுப் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கான தேசியத் தகவல்களை வழங்கும் அலுவல்சார் மூலமாகக் காணப்படுகிறது. இந்த இரு நோக்கங்கள் தொடர்பில் அவசர நடவடிக்கையெடுக்கப்பட வேண்டிய தேவையைக் கவனத்திற் கொண்டு, பரிசோதனை அடிப்படையில் அநுராதபுர மாவட்டத்தில் இந்த அளவீட்டை நடாத்தும் பொறுப்பு மத்திய வங்கியின் புள்ளி விபரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அளவீட்டினூடாகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள், துணையுணவுப் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு, உற்பத்தியின் அளவு மற்றும் பெறுமதி ஆகியவற்றோடு விலங்குகளின் தொகை மற்றும் குடும்ப மட்டத்திலான விலங்குணவு உற்பத்திகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன. இந்த அளவீட்டின் களவேலைகள் 2000ஆம் ஆண்டு ஒத்தோபர் இறுதியிலிருந்து 2000ஆம் ஆண்டு நவெம்பர் இறுதிவரைக்கும் நடத்தப்பட்டன. அளவீட்டுக்கான தரவுச் சேகரிப்பு இத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் அநுராதபுர பிரதேச அலுவலகத்தினூடாக அந்தப் பிரதேசத்தில் கூலிக்கு அமர்த்தப்பட்ட தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகளினால் மேற்கொள்ளப்பட்டது. கள மேற்பார்வை மத்திய வங்கி அலுவலர்களினால் கையேற்கப்பட்டது. தரவுப் பதிவு மற்றும் தொகுப்பு வேலைகள் 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் நிறைவு செய்யப்பட்டதுடன் அளவீட்டினால் பெறப்பட்ட முடிவுகள் 2001ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறு வாணிபங்களின் முன்னோடி அளவீடு

இது, இத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இரண்டாவது பரிசோதனை அளவீடாகும். இதன் நோக்கம், தேசிய வருமானக் கணக்குகளின் மதிப்பீட்டில் இத்துறைக்கான தரவுத் தளத்தை மீண்டுமொருமுறை வலுப்படுத்துவதாகும். தேசியப் பொருளாதாரத்துக்கு இத்துறையின் பங்களிப்பினை அடையாளங் காண்பதற்காக, ஒழுங்கு முறையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு நியம அறிவித்தல் முறையொன்றை விருத்திசெய்யும் நோக்குடன் இவ்வளவீட்டினைத் திணைக்களம் கையேற்றது. சூழவுள்ள சமூகத்தினர் உணவகங்கள், உணவுச் சாலைகள் மற்றும் சிறிய அளவுத் தயாரிப்புப் பிரிவுகள் ஆகியவற்றுக்கு வாணிப, சமூக, தனியார், குடும்ப மற்றும் பல்வகைப் பணிகளை வழங்கும் நிறுவனங்களை சிறு வாணிபத்துறை முக்கியமாக உள்ளடக்குகிறது.

ஆரம்பத்தில் கொழும்பு மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவொன்றில் பரிசோதனை அடிப்படையில் இத் திணைக்களம் முன்னோடி அளவீட்டை நடத்தியது. முன்னோடி அளவீடு நடத்தப்பட முன்னர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அனைத்து சிறு வாணிபப் பிரிவுகளையும் அடையாளங் காண்பதற்காக பட்டியல்படுத்தும் நடைமுறையொன்று கையேற்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காக திணைக்களத்தினால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தரவுச் சேகரிப்பு வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. 2000ஆம் ஆண்டில் அளவீட்டினது ஆரம்பத் தரவுச் செய்முறை வேலைகளைத் திணைக்களம் நிறைவு செய்தது. பாடசாலைகளிலிருந்து பெறப்படும் மாணவர்கள் மற்றும் அலுவலர்களை இவ்வகையான எதிர்கால அளவீடுகளுக்குப் புலனாய்வாளர்களாக தொழிலில் ஈடுபடுத்தக் கூடிய சாத்தியத்தை மதிப்பீடு செய்வதற்காக, திரட்டப்பட்ட தரவுகளின் தரம் மற்றும் நம்பகத் தன்மை ஆகியன ஆய்வு செய்யப்படும்.

## நாடளாவிய தரவு சேகரிப்புமுறை

1978இல் ஆரம்பித்த, புள்ளி விபரத் திணைக்களத்தின் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை 2000ஆம் ஆண்டில் 22 ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவு செய்தது. நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்தியாளர் விலைகள், முறைசாராத் துறையோடு தொடர்புடைய கூலி வீதங்கள் ஆகியவை தொடர்பான தகவல்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டன. இத்திட்டமானது நுகர்வு விடயங்களின் நிருவகிக்கப்பட்ட விலைகளிலான மாற்றங்களின் தாக்கத்தை அடையாளங் காண்பதற்கும், முக்கியமான உற்பத்திப் பகுதிகளில் வேளாண்மைச் செயலாற்றத்தைக் கண்காணிப்பதற்கும், பயன்படுத்தப்பட்டன. இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைத்துறைகள், நெல், தேயிலை, இறப்பர், தெங்குச் செய்கை மற்றும் சிறிய அளவிலான கட்டடவாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. புள்ளிவிபரப் புலனாய்வாளர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களின் நாடளாவிய வலையமைப்பினூடாக தரவுச் சேகரிப்பு நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்கள் ஒழுங்கான முறையில் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்களினூடாக வெளியிடப்பட்டன. தரவுச் சேகரிப்பாளர்களுக்கு, அவர்களின் தரவுச் சேகரிப்பினது தரம் மற்றும் செயற்றிறனை அதிகரிப்பதற்கும், பிரதேச நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் கணிப்பீட்டில் அவர்களது உள்ளீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கும் மேலும் பயிற்சியை வழங்குவதற்காக கொழும்பு, கண்டி மற்றும் அனுராதபுரத்தில் ஆய்வரங்குகள் 2000ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

புறக்கோட்டைச் சந்தை மற்றும் மரதககமுல்ல அரிசிச் சந்தை மற்றும் தம்புல்ல பொருளாதார

நிலையம் போன்ற ஏனைய நிலையங்களிலிருந்து முக்கிய உணவு விடயங்களின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகளின் நாளாந்தச் சேகரிப்பும் இத் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டது. இத் தகவல் கமக்காரர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு செய்தித் தாள்கள் மற்றும் மின்னியல் ஊடகங்கள் வாயிலாக நாளாந்தம் பரப்பப்படுகின்றது. இத் தகவல், அரச முகவர் நிலையங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களினால் ஆராய்ச்சி மற்றும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் போன்றவற்றில் வாணிபத் தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டது.

## விலைச் சுட்டெண்களின் கணிப்பீடு

### நுகர்வோர் விலைச் சுட்டெண்

1998இல் அறிமுகஞ்செய்யப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண், தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிப்பீடு செய்யப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கான குறை நிரப்புச் சுட்டெண்ணாக இத் திணைக்களத்தினால் தொடர்ந்தும் கணிப்பீடு செய்யப்பட்டது. இச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்ட குடித்தொகை இலக்கு, வருமான அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட மாவட்டக் குடித்தொகையில் ஆகக் குறைந்தது 40சதவீதமாகும். விடயங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையிலும், புவியியல் ரீதியிலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட பரந்த உள்ளடக்கத்தை இது கொண்டதாகும். சுட்டெண் கணிப்பீட்டிற்கான தகவல்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ள 11 நிலையங்களிலிருந்து பெறப்பட்டன. இப்பதினொரு நிலையங்களில் புறக்கோட்டைச் சந்தை, ஹன்வெல்ல, ஹோமகம, மொறட்டுவ மற்றும் அவிசாவளை ஆகிய 5 நிலையங்கள் நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறைகளின் கீழ் நிறுவப்பட்டதுடன் கொலன்னாவ, நுகேகொடை, தெகிவளை, பிலியந்தலை, மகரகம மற்றும் பாதுக்க ஆகிய ஏனைய நிலையங்கள் 1999 சனவரியில் புதிதாக அறிமுகஞ்செய்யப்பட்டன. புள்ளி விபரத் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட ஆசிரியப் புலனாய்வாளர்கள் இந் நிலையங்களிலிருந்து ஒழுங்கான முறையில் தகவல்களைச் சேகரித்தனர்.

1998 இலிருந்து அநுராதபுரம், மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கான மூன்று பிரதேச நுகர்வோர் விலைச் சுட்டெண்களை பரிசோதனை அடிப்படையில் தொடர்ந்தும் இத் திணைக்களம் கணிப்பீடு செய்தது. சுட்டெண்களுக்கான பண்டங்களின் அளவுகள் மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட 1996/97 இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்டதும் அந்தந்த மாவட்டங்களுக்குரியதுமான செலவு மாதிரிகளின் அடிப்படையிலேயே அமைந்தனவாகும். சுட்டெண்களின் கணிப்பீட்டுக்கான இதே போன்ற அளவுகள், வருமான அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்போது மாவட்டத்திலுள்ள, குடும்பங்களில் மிகத் தாழ்ந்த 40 சதவீதமான குடித்தொகை இலக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. பிரதேச விலையசைவுகளை ஆய்வு செய்வதற்கு இச்சுட்டெண்கள் பயனுடையனவாகும். இவை வேளாண்மைப் பண்டங்களின் முன்னோக்கிய வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான கலந்துரையாடலில் சந்தைத் தொழிற்பாட்டாளர்களினாலும் பயன்படுத்தப்பட்டன.

மேல் மாகாணத்தை உள்ளடக்கி, புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்றினை திணைக்களம் தொடர்ந்தும் விருத்தி செய்துவருவதுடன் இது இன்னமும் பரிசோதனை நிலையிலேயேயுள்ளது. இது புவியியல் ரீதியாகவும், வருமான நியதிகளிலும் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைவிட பரந்த உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. இச் சுட்டெண்ணிலிருந்து எதிர்பார்க்கப்படும் முக்கியமான மேம்பாடு யாதெனில் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் உள்ளடக்கத்தை கூடிய வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் விரிவாக்குவதாகும். இச் சுட்டெண் 1996/97 இன் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமான அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த 80 சதவீதத்துக்கான நாடளாவிய சராசரி மாதாந்த வருமான மட்டத்துக்குக் கீழ், மேல் மாகாணத்தில் வசிக்கும் குடும்பங்களைப் பிரதிபலிக்கிறது. பிரதிநிதித்துவப்படுத்தும், குடும்பங்களின் செலவு மாதிரியின் அடிப்படையில் நிறையேற்றல்கள் அமைந்துள்ளன. தரவு சேகரிப்பு நிலையங்கள் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கியமான வர்த்தக நிலையங்களுக்கு அப்பால் விரிவாக்கப்பட்டன. இவை கூடிய வருமானம் பெறும் குடும்பங்களின் நுகர்வு மாதிரியிலான மாற்றங்களை அறிவதற்கு சிறப்பு அங்காடிகளையும் உள்ளடக்கும்.

### மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

முதனிலைச் சந்தை மட்டத்தில் விலையசைவுகளைப் பிரதிபலிக்கும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணை இத் திணைக்களம் தொடர்ந்தும் கணிப்பீடு செய்தது. சில்லறைச் சந்தைகளில் எதிர்கால விலையசைவுகளின் குறிகாட்டியாக இது பயன்படும்.

## தேசியக் கணக்குகள்

இத் திணைக்களம், தேசிய கணக்குகளின் மதிப்பீடு தொடர்பான தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. இது முதனிலை மற்றும் இரண்டாம்

நிலை தரவுகளின் சேகரிப்பு மற்றும் தொகுப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. 2000ஆம் ஆண்டில், தேசிய கணக்குகளின் மதிப்பீட்டுச் செய்முறைகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை, பொதுவாக முறைசாரா மற்றும் தோற்றம் பெறும் பொருளாதார நடவடிக்கைகளைப் பரந்த அளவில் உள்ளடக்கும் வகையில் மேற்கொண்டது. முன்பு குறிப்பிடப்பட்டது போல, திணைக்களமானது உள்நாட்டு வேளாண்மை மற்றும் சிறு வாணிபம் ஆகியன தொடர்பில் இந் நடவடிக்கைகளுக்கான தற்போதைய தரவுத்தளத்தை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு பரிசோதனை அளவீடுகளை மேற்கொண்டது.

அதே வேளையில், தேசிய கணக்குகளின் தற்போதைய போக்குகள் தொடர்பில் மக்களுக்குள்ள அறிவினை அதிகரிக்கச் செய்வதற்காக பத்திரிகை வெளியீடுகளை வெளியிடுவதன் மூலமும், பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்கு செய்வதன் மூலமும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அத்துடன் கிடைக்கக் கூடிய தகவல்கள் மத்திய வங்கியின் வெப் தளத்துக்கூடாகப் பரப்பப்பட்டன. தேசிய கணக்குகளின் காலாண்டுத் தரவுகள் சரியான நேரத்தில் பரப்பப்பட்டமையும் இவ்விடயத்தில் பொதுமக்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்தது.

### மாகாண தேசியக் கணக்குகள்

1996 இலிருந்து 1998 வரையான காலப்பகுதிக்கான மாகாண ரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பரிசோதனை அடிப்படையிலான மதிப்பீடுகளின் தொகுப்பினை திணைக்களம் நிறைவு செய்தது. மாகாண, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வடிப்படை, மதிப்பீடுகள் மாகாண பொருளாதார நடவடிக்கைகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய தரவுத் தளத்தை வழங்கி, தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு வேறுபட்ட மாகாணங்களிலிருந்தான பங்களிப்பின் அளவீட்டினை இயலச் செய்தன.

### தொழில்வாய்ப்புப் புள்ளி விபரங்கள்

அரசதுறைத் தொழில் வாய்ப்பினது ஆண்டு அளவீடு 2000ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்டது. அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச சபைகள் ஆகியவற்றின் தொழில்வாய்ப்பினது போக்குகளைக் கண்டறியும் நோக்கத்துடனேயே இது நடத்தப்பட்டது.

### வலையமைப்பு மற்றும் வெப்தள அபிவிருத்தி

2000ஆம் ஆண்டில், புள்ளி விபரத் திணைக்களம் வலையமைப்பு புதிய வசதியொன்றினை நிறுவி, வங்கியின் வலையமைப்பு முறைக்குள் தனது கணனிகளில் பெரும்பாலானவற்றை ஒன்றிணைத்தது. இவ்வொருங்கிணைக்கப்பட்ட முறையானது, வங்கியின் பிரிவுகள் மற்றும் ஏனைய திணைக்களங்கள், தரவுத் தளங்களின் வசதியைப் பெற்றுக்கொள்ளவும், பங்கீடு செய்யவுமான வசதிகளை வழங்கி, தரவுகள் மற்றும் தகவல்களின் விரைவானதும், பயன்தரத்தக்கதுமான மாற்றல்களை உறுதிப்படுத்தியது. புள்ளி விபரத் திணைக்களத்தின் வெப் தளமான "ஸ்டாநெற்" இத் திணைக்களத்தின் தரவுகள் மற்றும் பத்திரிகை வெளியீடுகள் மற்றும் மத்திய வங்கியின் உள்ளக வலையமைப்புடன் தொடர்புடைய அனைத்துத் திணைக்களங்களுக்கும் இத் திணைக்களத்தின் வேலை பற்றிய பொதுவான தகவல்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை வழங்கும்வகையில் விருத்தியடைந்துள்ளது. இத் திணைக்களத்தின் உயர் பதவி அலுவலர்களுக்கு மின்னஞ்சல் வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

## வெளியீடுகள்

### நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/ 97

1996/97இல் நடத்தப்பட்ட ஏழாவது நுகர்வோர் நிதி மற்றும், சமூகப் பொருளாதார அளவீட்டின் 11 பகுதி அறிக்கை 2000ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 1999இல் வெளியிடப்பட்ட அறிக்கையின் 1 ஆம் பகுதியானது தரவுகளின் விரிவான பகுப்பாய்வு ஒன்றினைக் கொண்டிருக்கும் வேளையில், 11ஆம் பகுதி, 514 புள்ளிவிபர அட்டவணைகள் பற்றிய விபரத்தைக் கூறுகிறது. இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ள தரவுகள் மாதிரித் தரவுகளாகக் காணப்படுகின்றனவேயன்றி குடித்தொகை மொத்தங்களுக்கான மதிப்பீடுகளாகக் காணப்படவில்லை.

அறிக்கையின் 11 ஆம் பகுதி 6 அத்தியாயங்களைக் கொண்டதாகும். அவை (1) குடிப்பரம்பல் மற்றும் சமூக பொருளாதார நிலைமைகள், (2) தொழிற்படை, தொழில் நிலை மற்றும் தொழில் வாய்ப்பு இன்மை (3) வருமானம் (4) செலவு மற்றும் நுகர்வு (5) கடன்கள் மற்றும் முதலீடுகள் மற்றும் (6) மாகாணத் தரவுகள் என்பனவாகும். இநுண்பாக குடும்பத் தரவுகள் குறிப்பாக தீர்மானம் மேற்கொள்வோர், கொள்கைத் திட்டமிடுவோர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன்படத் தக்கனவாகும். அளவீட்டுத் தகவல்களை இவ்வாண்டில் பயன்பாட்டாளர்களின் அனைத்துப் பிரிவினருக்கும் பரப்புவதைப் பொறுத்தவரையில் சிறப்பாகப் பட்டியலிடப்பட்ட தரவுகளை வழங்குவதற்கு அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களைத் திணைக்களம்

ஏற்றுக்கொண்டது. முதலாம் பகுதியையும் இரண்டாம் பகுதி அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபர அட்டைகளையும் இணைத்து தனியொரு "கணனித்தட்டினை" தயாரிப்பதற்கான நடவடிக்கையைத் திணைக்களம் ஆரம்பித்தது.

### ஏனைய வெளியீடுகள்

ஆய்வின் கீழான காலப் பகுதியில், இத்திணைக்களம் ஆண்டு வெளியீடுகள் இரண்டு தொடர்பான தனது நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற் கொண்டது. இலங்கை சமூகப் பொருளாதார தரவு 2000 -xxiii ஆம் தொகுதியினை திணைக்களம் வெளியிட்ட வேளையில் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகப் புள்ளி விபரங்கள் 2000 என்ற வெளியீட்டின் வேலைகள் 2000ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவடைந்தன.

இவ்விரு வெளியீடுகளும், குடிப்பரம்பல், தொழிற்படை மற்றும் தொழில் வாய்ப்பு , தேசிய வருமானம் மற்றும் செலவு, வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் நிதி, விலைகளும் கூலிகளும், பணமும் வங்கித் தொழிலும், மூலதனச் சந்தைகள், அரச நிதி மற்றும் சமூகப் பொருளாதாரப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கி சமூக - பொருளாதார மாறிலிகள் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய நேரத் தொடர் மற்றும் அனைத்துத் தரவுகளையும் கொண்டிருக்கும். இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளி விபரங்கள் 2000 என்ற வெளியீட்டில் தகவல் பரப்பலானது மாகாண ரீதியான தகவல்களின் பரந்த உள்ளடக்கத்துடன் மேலும் முன்னேற்றமடைந்தது. மேலும் இவ்வாண்டில் மத்திய வங்கியின் ஏனைய பல வெளியீடுகளுக்கும் இத் திணைக்களம் பங்களிப்புச் செய்தது.

## ஊழியர் சேம நிதியம்

2000ஆம் ஆண்டின் நாணயச் சபையானது, தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவினது நெருங்கிய ஒத்துழைப்புடன், ஊழியர் சேம நிதியத்தின் பாதுகாவலனாக தனது தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் நியதிகளில், நிதியம் தொடர்பிலான நாணயச் சபையின் தொழிற்பாடுகள், உதவுதொகைகள், மிகை விதிப்புக்கள் மற்றும் முதலீடுகளிலிருந்தான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளுதல், பதிவு செய்யப்பட்ட தொழில்களினதும், நிதியத்தின் உறுப்பினர்களினதும் கணக்குகளைப் பேணுதல், மேலதிகமான பணத்தைப் பொருத்தமான முதலீடுகளில் முதலீடுசெய்தல் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

முதலீட்டுச் செயல்முறை மற்றும் ஊழியர் சேமநிதிய ஏனைய தொழிற்பாடுகள் ஆகியவற்றை நவீனமயமாக்குதல் இவ்வாண்டில் மேலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் ஊழியர் சேம நிதிய முறையினைத் தொடர்ந்தும் முன்னேற்றகரமான முறையில் தன்னியக்கப்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் கையேற்கப்பட்டன. மீளளிப்புக் கொடுப்பனவு, உறுப்பினர் கணக்குகளை இணைத்தல் மற்றும் வீடமைப்புக் கடன் விண்ணப்பங்களைச் செயல்முறைப்படுத்தல் ஆகிய விடயங்களைத் தன்னியக்கப்படுத்துதலானது, சரியானதன்மை, செயற்றிறன் மற்றும் வாடிக்கையாளர் பணியின் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டது.

### முதலீட்டுச் செயல் முறையை ஒழுங்கமைத்தல்

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஊழியர் சேம நிதியத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், 2000ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ஊழியர் சேம நிதியத்தினால் 8 நிதிய முகாமையாளர்கள் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். திருந்திய உள்ளக நிதிய முகாமைத்துவ இயலளவானது, சந்தை அடிப்படையிலான கருவிகளுக்குள் பெருமளவு முதலீடுகளை மேற்கொள்வதன்மூலம் முதலீட்டுச் சொத்துப் பட்டியலை முன்னேற்றகரமான முறையில் பன்முகப்படுத்துவது தொடர்பில் நிதியத்துக்கு ஊக்குவிப்பை வழங்கியது.

### முதலீட்டு நடவடிக்கைகள்

சந்தை அடிப்படையிலான பிணையங்களுள் சொத்துப் பட்டியலைப் பன்முகப்படுத்தல் ஆய்வின் கீழான ஆண்டில் தொடர்ந்து காணப்பட்டது. அரசாங்க மொத்த ரூபாக் கடன் முதலீடுகள், 2000ஆம் ஆண்டின் இறுதியளவில், 1999இன் இறுதியளவில்

அட்டவணை II.14
ஊ.சே.நி: 1999 மற்றும் 2000 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூபா மில்லியன்

| விடயம் | 1999 | 2000 |
|---|---|---|
| சராசரி சொத்துப் பட்டியல் | 466 | 1,007 |
| மொத்த பங்கிலாபங்கள் | 28 | 55 |
| மொத்த மூலதன நன்மைகள் | 15 | 25 |
| மிகை இலாபப் பங்குகள் (கால முடிவில் பெறுமதி) | 91 | 294 |
| மொத்த பங்கிலாபங்கள், மூலதன நன்மைகள், மிகை இலாபப் பங்குகள் | 134 | 374 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

காணப்பட்ட மொத்த முதலீட்டுச் சொத்துப் பட்டியலின் 81%இற்கு எதிராக 2000ஆம் ஆண்டின் இறுதியின் 73%ஆக விளங்கின. எனினும், திறைசேரி முறிகளிலான மொத்த முதலீடுகள் முன்னைய ஆண்டின் மட்டமான 15%உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டின் 22%இற்கு அதிகரித்தமையின் காரணமாக இந்த வீழ்ச்சி எதிரீடு செய்யப்பட்டது.

பன்முகப்படுத்தல் உபாயத்தின் ஒரு பகுதியாக ஊழியர் சேம நிதியமானது பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தையில் தனது முதலீடுகளை விரிவடையச் செய்ததுடன் ஆய்வின் கீழான காலப்பகுதியில் பங்குச்சொத்துப் பட்டியலில் 115 வீதமான புள்ளிக்குப்புள்ளி அதிகரிப்பையும் பதிவுசெய்தது. அத்துடன் மொத்தச் சொத்துப் பட்டியலின் சதவீதமாக பங்குச் சொத்துப் பட்டியல் ஆண்டின் இறுதியில் 0.5%இற்கு அதிகரித்தது. ஒப்பிடுகையில் இது முன்னைய ஆண்டின் இறுதியில் 0.3 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. இவ்வனைத்து முதலீடுகளும் நுணுக்கமானதும் விரிவானதுமான பகுப்பாய்வுகள் நடத்தப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட்டதுடன், இது ஊழியர் சேம நிதியத்துக்கான இடரின் ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டமொன்றில் உயர் வருவாய்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பொன்றுடனான பங்குச் சொத்துப் பட்டியலொன்றைக் கொண்டிருப்பதனை ஊழியர் சேம நிதியத்துக்கு இயலச் செய்தது. இப் பங்குச் சொத்துப் பட்டியலானது, 2000ஆம் ஆண்டில் 37 சதவீதம் கொண்ட வருமான வீதமொன்றை விளைவித்திருந்தது.

## இரண்டாம் நிலைச் சந்தை வர்த்தகம்

ஊழியர் சேம நிதியம் 2000ஆம் ஆண்டிலும் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் தொடர்பில் இரண்டாம் நிலைச் சந்தை நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தனது பங்களிப்பை வழங்கியிருந்தது. ஊழியர் சேம நிதியம் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான பெற்றுக்கொள்ளக்கூடிய வருமான வீதத்தை உயர்த்துவதனை இரண்டாம் நிலைச் சந்தை நடவடிக்கைகள் இயலச் செய்தன. ஆய்வின் கீழான காலப்பகுதியில் இரண்டாம் நிலைச் சந்தைத் தொழிற்பாடுகளின் விபரங்களை கீழேயுள்ள அட்டவணை II.15 தருகின்றது.

அட்டவணை II.15
ஊ.சே.நி: 2000இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

(ரூ.மில்லியன்)

| விடயம் | கொள்வனவு அளவு | விற்பனவு அளவு | மூலதன நன்மைகள் |
|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 1,459.0 | 4,090.0 | 103.8 |
| திறைசேரி உண்டியல்கள் | 95.7 | 380.0 | 0.8 |
| பங்குகள் | 755.6 | 133.4 | 25.2 |
| மொத்தம் | 2,310.3 | 4,603.4 | 129.8 |

மூலம்: ஊழியர் சேம நிதியம்

அட்டவணை II.16
ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 1999 | 2000(அ) |
|---|---|---|
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | | |
| செயற்படுபவை | 1,783,777 | 1,855,900 |
| செயற்படாதவை | 6,325,168 | 6,520,500 |
| ஆண்டு உதவு தொகைகள் (ரூ.மில்.) | 13,679 | 16,853 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 7,691 | 10,802 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 99,386 | 95,157 |
| மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூபில்) | 186 | 215 |
| சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான வருமான வீதம் | 13.12 | 12.95 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்) | 194 | 223 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 22,847 | 26,313 |
| வருமான வரி (ரூ.மில்.) | 2,271 | 2,616 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 186 | 241 |
| முதலீட்டு வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%) | 0.8 | 0.9 |
| வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டவை | 12,339 | 14,648 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட சாதாரண வட்டிவீதம் | 11.50 | 11.50 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட உண்மையான கடன்வீதம் | 11.72 | 11.69 |

(அ) தற்காலிகமானவை. மூலம் : ஊழியர் சேம நிதியம்

# செலாவணிக் கட்டுப்பாடு

2000ஆம் ஆண்டில், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், மூலதனக் கணக்கினது தொடர்ச்சியான தாராளமயமாக்கல் செயல்முறையினைத் தொடரச் செய்யும் குறிக்கோளுக்கு இசைந்து செல்லும் வகையில் கொள்கை வழிமுறைகளை மேற்கொண்டது. அதே நேரத்தில் செலாவணி ஒழுங்கீனங்கள் மற்றும் மோசடிகளைத் தவிர்க்கும் நோக்குடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய கண்காணிப்பு நடவடிக்கைகளையும் திணைக்களம் தீவிரப்படுத்தியது. இத் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை மீறுவோர் பற்றிய விசாரணை, சரக்கு அனுப்புவோரைப் பதிவுசெய்தல், பயண முகவர்கள் மற்றும் நாணய மாற்றுநர்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் போன்ற அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

வங்கித் தொழில் மற்றும் காப்புறுதி மற்றும் பங்குத் தரகுத் துறைகள் மற்றும் கூறு நம்பிக்கை ஆகியவற்றில் வதிவற்றோரின் முதலீட்டுக்கு விதிக்கப்பட்ட வரையறைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே, மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல் தாராளமயமாக்கல் தொடர்பில் இவ்வாண்டிலேற்பட்ட முக்கிய மேம்பாடாகும்.

இவ்வாண்டில் காணப்பட்ட இன்னுமொரு குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் அத்தகைய கம்பனிகளுக்கான நிருவாக வரையறைகளுக்கு உட்பட்டு முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட கம்பனிகளையும் உள்ளடக்கும் வகையில்

1999இல் வதிவற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கு கடன் வழங்கலுக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் நீடிக்கப்பட்டமையாகும். வெளிநாட்டு நாணயக்கடன் வழிகளுடன் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மூலவளங்கள் காணப்படுமிடத்து ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை வழங்குவதற்கு தேசிய அபிவிருத்தி வங்கிக்கும் அபிவிருத்தி நிதி கொடுகடன் கூட்டுத்தாபனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக வங்கிகளினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறுமிடத்து ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் ரூபா விற்பனைப் பெறுதிகளை வெளிநாட்டு நாணயத்துக்கு மாற்றுவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக வங்கிகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு விண்ணப்பிக்கலாம் என வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு விண்ணப்பமும்அவற்றினது தகைமையினது அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பொறுத்தவரையில் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், இலங்கையர் அல்லாத வதிவுடையோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் என்பனவற்றில் கணக்குகளில் வைத்திருப்போருக்கு விண்ணப்பதாரி வதிவுடையவரா, வதிவு அற்றவரா என்பதைக் கருத்திற் கொள்ளாமல் 1999ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டபோதும் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட வங்கிகள் தமது கணனி முறையினை சீராக்க வேண்டியிருந்ததனால் மின்னியல் நிதிய அட்டைகளுக்கு எதிராக வெளிநாட்டு நாணய எடுப்பனவுகளை கண்காணிக்கும் முறையின் நடைமுறைப்படுத்தல் 2000ஆம் ஆண்டு யூலையில் தொடங்கியது.

## மூலதனக் கொடுக்கல் வாங்கல்

### (அ) இலங்கையில் வதிவற்றோர் முதலீடு

வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் பங்குத் தரகுக் கைத்தொழில் என்பனவற்றில் வதிவற்றோர் முதலீட்டுக்கு விதிக்கப்பட்ட வரையறைகள் 2000ஆம் ஆண்டு மாச்சிலிருந்து செயற்படும் வகையில் தளர்த்தப்பட்டது. இத்தளர்த்தல்களுடன் வங்கித் தொழில் துறையில் கம்பனிகளில் காணப்பட்ட வதிவற்றோரின் உடைமை எல்லையானது 49 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில், காப்புறுதித் துறைக்கான எல்லை 90 சதவீதம் என குறித்துரைக்கப்பட்டது. பங்குத் தரகுத் துறையில் வதிவற்றோரின் முதலீடு தற்போது 49 சதவீதம் வரைக்கும் அனுமதிக்கப்படுவதுடன் பிணைகள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்படுமிடத்து 100% வரைக்கும் அனுமதிக்கப்படும். ஏனைய நிதியியல் துறை நடவடிக்கைகளுக்கான இந்த வரையறை 49 சதவீதத்தில் தொடர்ந்தது. மேலும் கூறு நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் முகாமைக் கம்பனிக்குமிடையிலான உடன்படிக்கையை உருவாக்கும் நம்பிக்கை உறுதியானது வைப்புச் செய்யப்பட்ட சொத்தின் 20 சதவீதத்திற்குமேல் அரச பிணைகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கக் கூடாதென்ற கட்டுப்பாட்டைக் கொண்டிருக்குமாயின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட கூறு நம்பிக்கைகளில் வதிவற்றோர் முதலீடுகளை மேற்கொள்ளலாம். 2000ஆம் ஆண்டு மாச்சு 07ஆம் நாளிடப்பட்டதும் எண் 1122/ 12 கொண்டதுமான அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றின் மூலம் இந்த மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்களுக்கு உட்பட்டு உள்நாட்டுக் கம்பனிகளில் வதிவற்றோரின் முதலீடுகள் சம்பந்தமான நியதிகளும் நிபந்தனைகளும் முன்னரைப்போன்று மாற்றமின்றியிருந்தன.

### ஆ. வதிவற்றோர் கட்டுப்பாட்டுக் கம்பனிகளுக்கான ரூபாக் கடன் வழங்கல்

முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர பெரும்பான்மையான வதிவற்றோர் பங்குடைமைகளுடனான இலங்கைக் கம்பனிகளுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கி கடன் வசதிகளை வழங்குவதற்கு வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட அனைத்து வங்கிகளுக்கும் 1999இலிருந்து அனுமதி வழங்கப்பட்டது. 2000ஆம் ஆண்டு ஏப்பிறலிலிருந்து ஒவ்வொரு வங்கியும் தனியார் துறைக்கு வழங்கிய மொத்தக் கடனின் சதவீதமாக அவ் வங்கியின் மீது விதிக்கப்பட்ட நிருவாக வரையறைகளுக்குட்பட்டு, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17இன்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட வதிவல்லாதோரின் கட்டுப்பாட்டுக் கம்பனிகளுக்குக் கடன் வழங்குவதற்கும் வங்கிகள் அனுமதிக்கப்பட்டனர். பிரயோகிக்கப்படும் சதவீதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| வெளிநாட்டு வங்கிகள் | வரையறைகள் இல்லை |
| அரச வங்கிகள் | தனியார் துறைக்கான மொத்தக் கடன் வழங்கலின் 2 சதவீதம் |
| உள்நாட்டு தனியார் வங்கிகள் | தனியார் துறைக்கான மொத்தக் கடன் வழங்கலின் 3 சதவீதம் |
| உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகள் | தனியார் துறைக்கான மொத்தக் கடன் வழங்கலின் 5 சதவீதம் |

இவ்வசதிகள், குறிப்பாக ரூபாக்களில் மட்டும் வருமானத்தைப் பெறுகின்றதும் பெருமளவில் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களில் ஈடுபட்டுள்ளதுமான முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கு உதவும் நோக்கிலேயே வழங்கப்பட்டுள்ளன. எனினும், உள்நாட்டுக் கடன்பாட்டின் நெருக்கத்தைத் தவிர்ப்பதற்காகவே நிருவாக வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தன.

## இ. வதிவோரின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடு

2000 ஏப்பிறலிலிருந்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளான தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி ஆகியனவற்றிக்கு வெளிநாட்டு நாணய கடன்களின் மூலம் பெறப்பட்ட மூலவளங்கள் காணப்படுமாயின் ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

உள்நாட்டுச் சொத்துக்களின் ஈட்டினைப் பிணையாகக் கொண்ட வெளிநாட்டு நாணயக் கடன்களைச் செலுத்தத் தவறும் விடயத்தில், அத்தகைய சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளை வெளிநாட்டு செலாவணிக்கு மாற்றுவதற்கான அனுமதியைப் பெறுதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு விண்ணப்பிக்கலாமென அனைத்து அங்கீகாரம் பெற்ற வணிகர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை இவ்விடயத்தில், காணப்பட்ட மேலுமொரு முன்னேற்றமாகும். எனினும், இக் கடனை வெளிநாட்டுச் செலாவணியில் மீளப் பெற்றுக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்றும், அத்தகைய முயற்சிகள் தோல்வியுறும்போது ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் வெளிநாட்டுச் செலாவணியில் விற்பனை செய்தல் கவனத்துக்கெடுக்கப்படுமென்றும் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திருப்தியடையும் பட்சத்தில் மட்டுமே அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கரைகடந்த வங்கித் தொழில் அலுவல்களை உள்ளடக்கிய கட்டளையும், பொருட்கள் மற்றும் பணிகளின் நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளருக்கான வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு கரைகடந்த பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியை ஒருங்கிணைத்துக் கொள்வதற்காகத் திருத்தப்பட்டது.

## ஈ. வதிவுக் கம்பனிகளால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்தான முழுமையான விலக்களிப்புடன், முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த ஏனைய கம்பனிகளின் விண்ணப்பங்களைத் தொடர்ந்தும் கவனத்துக்கெடுத்தது. இவ்வாண்டில் இந்த வகையின் கீழ் ஒரு சில விண்ணப்பங்களுக்கு மட்டுமே ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தக் கடன்களின் மொத்தப் பெறுமதி ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.2 மில்லியனாகும்.

## உ. குடிபெயர்ந்த இலங்கையர் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகளினது தடுத்து வைக்கப்பட்ட நிதியங்கள்

வெளிநாட்டுக்குக் குடிபெயர்ந்த இலங்கையர்களுக்குச் சொந்தமான மூலதனச் சொத்துக்களின் விற்பனையால் பெறப்பட்ட நிதியங்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் அத்தகைய கணக்குகள் மீதான வட்டி, வரிப் பொறுப்புக்கள் ஏதாவது இருப்பின் அவற்றைச் செலுத்தியதன் பின்பு அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டது. கடந்த காலத்தைப் போலவே அத்தகைய நிதியங்கள் தனியொருவருக்கு ரூ.750,000உம், குடும்ப அலகொன்றுக்கு ரூ.1 மில்லியனும் என்ற வரையறைக்குட்பட்டு வர்த்தக வங்கிகளுக்கூடாக விடுவிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இவ்வாண்டில் வெளிநாட்டுக்குக் குடிபெயர்வோர் தொடர்பில் பெறப்பட்ட 126 விண்ணப்பங்கள் சார்பாக ரூ.30 மில்லியன் கொண்ட தொகையொன்று வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தது. வெளிநாட்டில் வதியும், இறந்த ஆட்களின் நன்மை பெறுநர்களுக்கு இவ்வாண்டில் ரூ.753,765 கொண்ட தொகையொன்றும் அனுப்பப்பட்டிருந்தது. இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோருக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் விற்பனையால் பெறப்பட்ட ரூ.4 மில்லியன் கொண்ட நிதியங்களும் இவ்வாண்டில் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டன.

## 2. சரக்கு அனுப்புவோரைப் பதிவு செய்தலும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சரக்கு அனுப்புவோரைப் பதிவுசெய்தல், பயணத்தர் காசோலைகளை வழங்குவதற்கு பயணமுகவர்களை அனுமதித்தல், நாணய மாற்றுனர்கள் மற்றும் உணவகங்கள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் மற்றும் பணிகளை வழங்குவோர் போன்ற ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றினால் சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்கொள்ளப்படும் விற்பனைகள் மற்றும் பணிகள் ஆகியனவற்றுக்காக வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கான உரிமங்களை வழங்குதல்/புதுப்பித்தல் ஆகியவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

### அ. சரக்கு அனுப்புவோரைப் பதிவு செய்தல்

2000ஆம் ஆண்டில் சரக்கு அனுப்புவோராக 5 புதிய கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டு ஆண்டிறுதியில் சரக்கு அனுப்புவோராகப் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையை ஆண்டின் இறுதியில் 93ஆக ஆக்கியது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தம்முடன் பதிவுசெய்யப்பட்ட சரக்கு அனுப்புவோரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

### ஆ. பயண முகவர்கள் பயணத்தர் காசோலைகளை வழங்குவதற்கான அதிகாரம்

வெளிநாட்டுக்குப் பயணஞ்செய்யும் இலங்கை வதிவாளருக்கு பயணத்தர் காசோலைகளை வழங்கும் அதிகாரத்தை வழங்கும் வகையில் பயண முகவர் ஒருவருக்கு இவ்வாண்டில் அதிகாரம் வழங்கப்பட்டது. இதனால் 2000ஆம் ஆண்டில் பயணத்தர் காசோலைகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பயண முகவர்களின் எண்ணிக்கை 7 ஆகியது.

### இ. நாணய மாற்றுனர்களின் நியமனம்

அனுமதி வழங்கப்பட்ட 30 நாணய மாற்றுநர்களின் செயலாற்றமானது இவ்வாண்டில் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டது. குறைவான செயலாற்றம் காரணமாக இத்தகைய 2 நாணய மாற்றுநர்களின் அனுமதிகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2 புதிய அனுமதிகள் வழங்கப்பட்டதுடன் 2000ஆம் ஆண்டு இறுதியில், செல்லுபடியாகக்கூடிய அனுமதிகளைக் கொண்ட நாணய மாற்றுநர்களின் எண்ணிக்கை 30ஆக விளங்கியது.

## 3. கண்காணிப்பு

நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களின் தாராளமயமாக்கலின் விளைவாக நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களுக்கான கட்டுப்பாடுகள் எதுவுமின்றியும், தேவைப்பாடுகளின் நம்பகத் தன்மைபற்றித் தம்மைத் திருப்திசெய்து கொண்டதன் பின்பும் தமது மதிப்பீடு மற்றும் தன் விருப்புரிமை ஆகியவற்றைப் பயன்படுத்தி பயண முகவர்கள் வெளிநாட்டுச் செலாவணியை விடுவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அனைத்து அங்கீகாரம்பெற்ற வணிகர்களும் ஒப்புதலளிக்கப்பட்ட பயண முகவர்களும் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் அந் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதனை இயலச் செய்யும் வகையில் அத் திணைக்களத்துக்கு ஒழுங்கான முறையில் அறிவிக்க வேண்டுமென வேண்டப்பட்டுள்ளனர். 1999இலிருந்து மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்களில் வெளிநாட்டுச செலாவணி விடுவித்தல் பற்றிய அறிவிப்புக்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் அங்கீகாரம் பெற்ற வணிகர்கள் வேண்டப்பட்டுள்ளனர். குறிப்பாக மின்னியல் மாற்றல் அட்டைகள் தொடர்பாக மாதாந்த பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 5,000ஐ அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தை விஞ்சுமாயின் அனைத்து மின்னியல் நிதிய அட்டைகள் மீதுமான மாதாந்த அறிக்கையொன்றினைத் தயாரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். எனினும், கணனி முறைகளை சீராக்கம் செய்யவேண்டிய தேவையேற்பட்டமையினால் அறிவிக்கும் தேவைப்பாடுகள் 2000ஆம் ஆண்டு யூலையிலேயே முழுமையாக தொழிற்பட்டு வந்தன. அதுவரையிலும் ஐ.அ.டொலர் 3,000ஐ விஞ்சும் தனிக் கொடுக்கல் வாங்கல்களிலான கொடுப்பனவுகள் எடுப்பனவுகளை மட்டும் அறிவிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். 2000ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது வர்த்தக அளவுகளிலான பொருட் கொள்வனவுடன் தொடர்பற்றவையென்பதை அல்லது மின்னியல் நிதிய மாற்றல் அட்டைகளூடாக அனுமதிக்கப்படாத மூலதன மாற்றல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தீர்மானிப்பதற்கே அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தது.

அத்தகைய கொடுப்பனவுகளுக்கு எதிராக, நாட்டில் பொருட்கள் மற்றும் பணிகளின் வரவுகளை உறுதிப்படுத்துவதற்காக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் இறக்குமதிகளுக்கான முற்பணக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது. வெளிநாட்டுக் கொள்கைகள் சார்பில், கப்பல் மற்றும் வானூர்தி முகவர்களினாலும், சரக்கு அனுப்புவோரினாலும் பேணப்பட்ட ரூபாக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டன. பங்கு மூலதன வெளிநாட்டு ரூபாக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட்ட மூலதன மாற்றல்களும் கண்காணிக்கப்பட்டன.

## 4. புலனாய்வு

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மீறல்கள் தொடர்பில் புலனாய்வுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டது. இப்புலனாய்வுகளில் சில 2000ஆம் ஆண்டில் முடிவுற்றதுடன் குற்றங்களுக்காக சட்டத்தின் கீழ் தண்டங்களும் விதிக்கப்பட்டன. 1999இலும் 2000ஆம் ஆண்டிலும் செலுத்தப்பட்ட தண்டப் பணம் தொடர்பிலான ரூ.25 மில்லியன்கொண்ட ஒன்றுசேர்ந்த தொகையானது இவ்வாண்டில் திறைசேரிக்கான துணைச் செயலாளரின் கணக்குக்கு மாற்றப்பட்டது.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க இலங்கை அரசின் உள்நாட்டுப் படுகடன்களை வழங்கல், முகாமைப்படுத்தல், மற்றும் உள்நாட்டுப்படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல் அத்துடன் இலங்கை அரசின் வெளிநாட்டுப் படுகடன்களைத் தீர்ப்பனவு செய்தல் என்பன இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் கையாளப்படுகின்றன. இப் பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு 2000ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் ஆகிய உள்நாட்டுப்படுகடன் கருவிகளை தொடர்ந்தும் வழங்கியது. இதற்குப் புறம்பாக, அரசின் வெளிநாட்டுப் படுகடன்களின் தீர்ப்பனவையும் பொதுப்படுகடன் திணைக்களமே கையாளுகின்றது. மத்திய வங்கிப் பிணையங்களின் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகளுடன் தொடர்பான நடவடிக்கைகளையும் பொதுப்படுகடன் திணைக்களமே கையாளுகின்றது. எனினும் 2000ஆம் ஆண்டில் மத்திய வங்கிப் பிணையங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. பொதுப்படுகடன் திணைக்களம் வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் அரசஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றின் சார்பில் கடனீட்டுப்பத்திரங்களின் வழங்கல்களையும் கையாண்டது. முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகள் மீதான தளத்துக்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலத்திலேயான பரீட்சிப்பு மற்றும் அரசாங்க படுகடன் பிணையங்களின் சந்தை அபிவிருத்தி என்பனவற்றுக்கும் பொதுப்படுகடன் திணைக்களம் பொறுப்பானதாகும்.

### அபிவிருத்தி நடவடிக்கைகள்

2000ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டுப் பிணையங்கள் சந்தையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. அரசபடுகடன் பிணையங்களுக்கான சந்தையை அபிவிருத்தி செய்து கொள்ளும் நோக்குடன் உத்தேச பத்திரங்களற்ற பிணையங்கள் முறையினை அறிமுகப்படுததுவதற்கான நடவடிக்கைகளையும் பொதுப்படுகடன் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. மேற்கொள்ளப்படவுள்ள இம்முறைக்குத் தேவையான மென்பொருட்களை அபிவிருத்தி செய்வதில் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள பத்திரங்களற்ற பிணையங்கள் முறையானது முதனிலை வணிகர்களிடையே அரச பிணையங்களின் கிரய விற்பனை மற்றும் கொள்வனவுகள், மீள் கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவுகள் என்பனவற்றின் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பத்தில் வசதிப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முதனிலை வணிகர்கள் முறையினை ஒழுங்கு முறைப்படுத்தும் குறிக்கோளுடன், முதனிலை வணிகர்களை நியமிப்பதற்காக, ரூ.150 மில்லியன் மூலதனத்தைக் கொண்ட 8 வரையறுக்கப்பட்ட பொதுப் பொறுப்புக் கம்பனிகள் 2000ஆம் ஆண்டு மார்ச்சு முதலாம் நாளிலிருந்து முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டன. முதனிலை வணிகர்களின் இந் நியமனங்கள், பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் பிரிவு 16 என்பனவற்றின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் கௌரவ நிதிதிட்டமிடல் அமைச்சரினால் செய்யப்பட்டன. இக் கம்பனிகள் பொதுப்படுகடன் நடவடிக்கைகளில் அதாவது அரசபடுகடன் பிணையங்கள் வர்த்தகப்படுத்துவதில் பிரத்தியேகமாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. புதிய வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுடன் இதுவரை கருமமாற்றிய முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படும். முதனிலை வணிகர்களின் தொழிற்பாடுகள் வினைத்திறனுடனும் பாதுகாப்புடனும் சிறந்த முறையிலும் செயற்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து பரீட்சிப்பதற்காக மற்றைய விடயங்களுடன் இலங்கை மத்திய வங்கிக்கு இந்த ஒழுங்குவிதிகள் அதிகாரத்தினை வழங்குகின்றன.

பொதுப்படுகடன் திணைக்களத்தின் கீழ் பொதுப்படுகடன் கண்காணிப்பிற்காக வரைச்சட்டமொன்றினையும் மற்றும் முறையொன்றினையும் வடிவமைத்துக் கொள்ளும் பொருட்டு ஆலோசகர் ஒருவரின் பணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. பொதுப்படுகடன் தொழிற்பாடுகள் தொடர்பாக ஏற்கனவேயுள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் வரைச்சட்டங்களையும் இதுவரைகாலமும் பொதுப்படுகடன் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளையும் ஆலோசகர்கள் மீளாய்வு செய்தனர். ஏற்கனவேயுள்ள ஒழுங்கு விதிகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் தேவையான திருத்தங்களையும் சேர்க்க வேண்டிய விடயங்களையும் ஆலோசகர்கள் விதந்துரைத்தனர். தெளிவையும் புலப்பாட்டுத் தன்மையினையும் அதிகரிப்பதற்காக திறைசேரி முறிகளின் ஏலங்களில் மின்னியல் விலைக் குறிப்பீட்டு முறையின் அறிமுகம், உலகளாவிய முதன்மை மீள் கொள்வனவு உடன்படிக்கையினை ஏற்றுக்கொள்ளல் மற்றும் முதனிலை வணிகர்களுக்கான உரிமம்

வழங்கலில் பெருமளவு கடினமான செயல்முறையொன்றினை அறிமுகப்படுத்தல் என்பன அவர்களின் முக்கிய விதந்துரைப்புக்களாகக் காணப்பட்டன.

ஆலோசகர்கள் இரு தொழிற்பாட்டு கையேடுகளைத் தயாரித்தனர். அதாவது பொதுப்படுகடன் திணைக்களத்திற்கான கையேடு ஒன்றையும், முதனிலை வணிகர்களுக்கான கையேடு ஒன்றையும் தயாரித்தனர். பொதுப்படுகடன் திணைக்களத்திற்கான கையேடு பலதரப்பட்ட இடர்நேர்வு வகைகளின் கீழ் பலதரப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய தலத்திலேயான பரீட்சிப்புக்கான கேள்விக் கொத்துக்களை கொண்டுள்ளது. தலத்திலேயான கண்காணிப்பிற்கான செயல்முறையின் விபரங்களையும் இந்தக் கையேடு வழங்குகின்றது. கண்காணிப்பு தொடர்பாக இடர்நேர்வு அடிப்படையிலான அணுகுமுறையொன்றினை ஆலோசகர்கள் பயன்படுத்தியுள்ளதோடு இது இடர்நேர்வினை சரியான முறையில் இனங்காணல், முகாமைப்படுத்தல் மற்றும் பயனுறும் வகையிலும் செயல்திறனுடனும் நேரத்திற்கேற்பவும் கருமமாற்றுதல் என்பன சம்பந்தமான முதனிலை வணிகரின் இயலுமையை மதிப்பிடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. கண்காணிப்புப் பிரிவின் பொதுவான அணுகுமுறையானது ஒவ்வொரு முதனிலை வணிகரினதும் இடர்நேர்வுத் தன்மையை முறையாக இனங்கண்டு முகாமைத்துவம் ஒழுங்கமைப்பு மற்றும் அதனது தொழிற்பாடுகளின் உள்ளார்ந்த இடர் நேர்வுகளைக் கண்காணித்து கட்டுப்படுத்தும் முறை ஆகியவற்றின் போதுமான தன்மையினை மதிப்பீடு செய்வதாகும்.

அறிக்கைகளின் தயாரிப்பு மற்றும் ஒப்படைப்புக்கான விரிவான அறிவுறுத்தல்களுடன் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பின் பாகமொன்றாகவும் பொதுப்படுகடன் திணைக் களத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் முதனிலை வணிகர் தொழிற்பாட்டுக் கையேடு கொண்டுள்ளது. பாதுகாப்பானதும் சிறந்ததுமான முதனிலை வணிகர் வலையமைப்பு ஒன்றினை நிறுவுவதற்கு உதவும் நோக்குடன் அரச பிணையங்களின் வர்த்தகம் தொடர்பாக சருவதேச ரீதியான சிறந்த பிரயோகங்களின் அறிமுகமும், அபிவிருத்தியும் பொதுவான முதனிலை வணிக முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன தொடர்பாக இந்தக் கையேடு பொதுப்படுகடன் திணைக்களத்துக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றதுடன் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளும் சிறந்த பிரயோகங்களும் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகின்றன என்ற நியதிகளில் ஒவ்வொரு முதனிலை வணிகரும் மதிப்பிடப்படுவர்.

முதிர்ச்சிக்கு முன்னரே மீளச்செலுத்தும் விருப்பத் தேர்வுடன் ஈராண்டு திறைசேரி முறிகள் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதற் தடவையாக 2000ஆம் ஆண்டு நவெம்பரில் வெளியிட்டது. இக்கருவியின் நியதிகளில் முதிர்ச்சியடைவதற்கு முன்னைய நாளொன்றில் வழங்கப்பட்ட முதலாம் ஆண்டின்பின் அவற்றை மீட்பதற்கான விருப்பினை அரசு கொண்டிருந்தமையினால் எதிர்காலத்தில் வட்டி வீதங்களில் ஏற்படும் வீழ்ச்சியிலிருந்து நன்மையடைய அரசுக்கு வசதி வழங்குகின்றது. இக்கருவிகளினது மொத்த வழங்கல்கள் ரூ.650 மில்லியனாகும்.

## தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

2000ஆம் ஆண்டு இறுதியில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பணி வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன் ரூ.1,148,115 மில்லியனாக விளங்கியது. 1999உடன் ஒப்பிடுகையில் இது ரூ.138,894 மில்லியன் அல்லது 13.8 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2000ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற அரசபடுகடன் ரூ.603,026 மில்லியன் (52.5 சதவீதம்) கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ.545,089 மில்லியன் கொண்ட (47.5 சதவீதம்) வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது. பொதுப்படுகடனின் உள்நாட்டுக்கூறு 1999இனைவிட ரூ.111,089 மில்லியனால் (22.6 சதவீதம்) அதிகரித்த வேளையில் வெளிநாட்டுப்படுகடனின் கூறு ரூ.27,805 மில்லியனால் (5.4 சதவீதம்) அதிகரித்தது. அட்டவணை II.17 பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பணி வழங்கப்பட்ட பொதுப்படுகடனின் உள்ளமைப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை II.17
பொதுப்படுகடன் உள்ளடக்கம்

| வகை | 1999 முடிவில் உள்ளவாறு ரூ. மில். | % | 2000 முடிவில் உள்ளவாறு ரூ. மில். | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப் படுகடன் | 491,937 | 48.7 | 603,026 | 52.5 |
| திறைசேரி உண்டியல்கள் | 124,996 | | 134,996 | |
| ரூபாப் பிணைகள் | 262,056 | | 263,888 | |
| திறைசேரி முறிகள் | 104,867 | | 204,124 | |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 11 | | 11 | |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 7 | | 7 | |
| வெளிநாட்டுப் படுகடன் | 517,284 | 51.3 | 545, 089 * | 47.5 |
| மொத்தம் | 1,009,221 | 100.0 | 1,148,115 | 100.0 |

* தற்காலிகமானவை.        மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுப்படுகடன்

### முதனிலைச் சந்தை

### திறைசேரி உண்டியல்கள்

2000 ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற மொத்தத் திறைசேரி உண்டியல்கள் 1999 இறுதியின் ரூ.124,996 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.134,996 மில்லியனாக விளங்கின. இதற்கு 2000ஆம் ஆண்டில் திறைசேரி உண்டியல்களின் தேறிய புதிய வழங்கலில் ஏற்பட்ட ரூ.10,000 மில்லியன் கொண்ட அதிகரிப்பே (அதாவது ரூ.13,000 மில்லியன் புதிய வழங்கல்கள் முதிர்ச்சியடைந்தவை ரூ.3,000 மில்லியன்) காரணமாகும். திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூ.125,000 மில்லியனிலிருந்து இவ்வாண்டுக் காலத்தில் ரூ. 135,000 மில்லியனுக்கு உயர்த்தப்பட்டது

இவ்வாண்டுக் காலத்தில் ரூ.182,044 மில்லியன் கொண்ட மொத் த வழங்கலுக்கு எதிராக பெறப்பட்ட மொத்த விலைக் கோரல்கள் ரூ.248,244 மில்லியனாகக் காணப்பட்டன. இதில் முதனிலை வணிகர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தத் திறைசேரி உண்டியல்கள் ரூ.118,292 மில்லியனாக அல்லது மொத்த வழங்கலில் 65.0 சதவீதமாகக் காணப்பட்டன. 2000ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்பட்ட நிதியங்களும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைச்சல் வீதங்களில் உண்டியல்களாக கொள்வனவு செய்து 5.7 சதவீதத்திற்கு வகைகூறின. இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ.53,429 மில்லியனாக அல்லது 29.3 சதவீதமாக விளங்கியது. அட்டவணை II.18 திறைசேரி உண்டியல்களினது விற்பனையின் முதிர்ச்சி அடிப்படையிலான பகிர்ந்தளிப்பினை மூல அடிப்படையில் காட்டுகின்றது.

**அட்டவணை . II.18**
**முதிர்ச்சியின்படியும் மூலங்களின்படியும் திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் - 2000**

ரூபா மில்லியன்

| மூலம் | முதிர்ச்சிக் காலம் (நாட்கள்) | | | | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| | 91 | 182 | 364 | ஏனைய | | |
| 1.முதன்மை வணிகர்கள் | 31,785 | 13,389 | 73,118 | - | 118,292 | 65.0 |
| 2.இலங்கை மத்திய வங்கி | - | - | - | 53,429 | 53,429 | 29.3 |
| 3.இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத் தப்படும் நிதி | 3,782 | 1,971 | 4,570 | - | 10,323 | 5.7 |
| மொத்தம் | 35,567 | 15,360 | 77,688 | 53,429 | 182,044 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை II.19**
**திறைசேரி உண்டியல்களின் வருடாந்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்**

ஆண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சிக் காலம் (மாதங்கள்) (அ) | | | பொதுவான சராசரி |
|---|---|---|---|---|
| | 3 | 6 | 12 | |
| 1996 | 16.04 | 16.46 | 17.17 | 16.46 |
| 1997 | 11.03 | 11.95 | 12.29 | 11.60 |
| 1998 | 11.77 | 12.13 | 12.20 | 11.98 |
| 1999 | 11.69 | 12.03 | 12.55 | 12.06 |
| 2000 | 12.78 | 12.97 | 14.23 | 13.68 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) முறையே 3, 6, 12 மாத முதிர்ச்சிகளையுடைய திறைசேரி உண்டியல்களுக்குப் பதிலாக 91 நாட்கள், 182 நாட்கள், 364 நாட்கள் முதிர்வுகளையுடைய உண்டியல்கள் 1999 ஒற்றோபரிலிருந்து வழங்கப்பட்டன.

### ரூபாப் பிணையங்கள்

2000ஆம் ஆண்டில் ரூ.42,211 மில்லியன் கொண்ட மொத்தமாக 15 ரூபாப் பிணையங்கள் வழங்கப்பட்டன. 2000ஆம் ஆண்டின் ரூபாப் பிணையங்களின் முக்கிய உதவுநர்களாக தொடர்ந்தும் ஊழியர் சேமநிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் விளங்கியதுடன் இவ்விரு நிறுவனங்களும் ரூ.41,190மில்லியனை வழங்கி மொத்த உதவு தொகையில் 97.6 சதவீதத்திற்கு வகைகூறின.

2000ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் 5/6, 1 மற்றும் 8/10 ஆண்டு முதிர்ச்சிகளுக்கு முறையே ஆண்டிற்கு 11.00 சதவீத, 11.90 சதவீத மற்றும் 12.00 சதவீத வட்டிவீதங்களைக் கொண்டிருந்தன. இவ் ரூபாப் பிணையங்களில் ஒன்று 1 ஆண்டு நிலையான முதிர்ச்சிக்

**அட்டவணை II.20**
**ரூபாக் கடன்களைத் திரட்டலும் தீர்ப்பனவு செய்தலும் -2000**

ரூபா மில்லியன்

| ஆண்டு வட்டி வீதம் | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பிணைகளின் எண்ணிக்கை | திரட்டப்பட்ட தொகை |
|---|---|---|---|
| **திரட்டல்** | | | |
| 11.00 | 5/6 | 4 | 11,000 |
| 11.90 | 1 | 1 | 8,000 |
| 12.00 | 8/10 | 10 | 23,211 |
| மொத்தம் | | **15** | **42,211** |
| **மீளக்கொடுத்தல்** | | | |
| 13.50 | 3 | 1 | 5,000 |
| 14.00 | 5/6 | 4 | 14,878 |
| 14.00 | 6 | 1 | 1,500 |
| 14.50 | 3 | 2 | 10,000 |
| 14.50 | 6 | 1 | 4,000 |
| 14.75 | 6/7 | 2 | 3,000 |
| 15.75 | 6/7 | 1 | 2,000 |
| மொத்தம் | | **12** | **40,378** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

காலத்திலும் மீதி ரூபாய் பிணையங்களில் 4 விருப்பத்திற்குரிய முதிர்ச்சிக்காலமான 5/6 ஆண்டுகளிலும் மற்றைய ரூபாப் பிணையங்கள் 10உம் விருப்பத்திற்குரிய முதிர்ச்சிக் காலமான 8/ 10 ஆண்டுகளிலும் திரட்டப்பட்டன. 2000ஆம் ஆண்டில் ரூபாக்கடன்களின் திரட்டல் மற்றும் மீள் கொடுப்பனவு என்பன தொடர்பான தகவல்கள் அட்டவணை II.20 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.40,378 மில்லியன் தொகை கொண்ட மொத்தமாக 12 கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன்படி, ரூபாப் பிணையங்களுக்கான தேறிய உதவு தொகைகள் ரூ.1,832 மில்லியனாக விளங்கி ரூபாப் பிணையங்களின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்கள் 1999 இறுதியின் ரூ.262,056 மில்லியனுக்கும் 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.263,888

அட்டவணை II.21
ரூபாப் பிணைகளின் முதிர்ச்சி அமைப்பு
2000 இறுதியில் உள்ளவாறு

| முதிர்ச்சி (ஆண்டுகளில்) | தொகை (ரூ.மில்.) | சதவீதம் |
|---|---|---|
| 1 | 8,000.00 | 3.03 |
| 2 | 7,485.58 | 2.84 |
| 4 | 5,000.00 | 1.89 |
| 5 | 10,000.00 | 3.79 |
| 10 | 5,979.86 | 2.27 |
| 30 | 24,088.00 | 9.13 |
| 4/5 | 5,500.00 | 2.08 |
| 4/6 | 10,316.68 | 3.91 |
| 4/8 | 3,500.00 | 1.33 |
| 5/6 | 17,000.00 | 6.44 |
| 5/7 | 53,715.01 | 20.36 |
| 6/7 | 38,800.00 | 12.81 |
| 6/8 | 1,000.00 | 0.38 |
| 7/8 | 26,400.00 | 10.00 |
| 8/10 | 24,210.59 | 9.17 |
| 9/10 | 8,500.00 | 3.22 |
| 1/10 | 19,392.62 | 7.35 |
| மொத்தம் | 263,888.34 | 100.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மில்லியன்களுக்கும் அதிகரிக்கக் காரணமாயின. வெளிநின்ற ரூபாப் பிணையங்களின் முதிர்ச்சித் தோற்றம் அட்டவணை II.21 இல் காட்டப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் ரூபாப் பிணையங்களின் பேரிலான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.33,902 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் வட்டிக் கொடுப்பனவிட ரூ.1,099 மில்லியன் (3.4 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2000ஆம் ஆண்டின் பொதுப்படுகடன் திணைக்களம் 769 வட்டி ஆணைப் பத்திரங்களின்மீது வட்டிக் கொடுப்பனவுகளை மேற்கொண்டது.

## திறைசேரி முறிகள்

2000ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.125,322 மில்லியன் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. திறைசேரி முறிகளின் முதிர்ச்சிக் காலம் 2 தொடக்கம் 6 ஆண்டுகள் வரை காணப்பட்டன. 2000ஆம் ஆண்டில் முதற் தடவையாக 2 ஆண்டுகள் அழைக்கப்படத்தக்க முறிகள் ரூ.650 மில்லியனுக்கு வழங்கப்பட்டன. இவ்வாண்டில் நடத்தப்பட்ட 74 ஏலங்கள் 2 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 30 ஏலங்களையும் 3 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 19 ஏலங்களையும் 4 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 8 ஏலங்களையும் 5 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 9 ஏலங்களையும் 6 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 8 ஏலங்களையும் உள்ளடக்கியிருந்தன. முதிர்ச்சியின்படியான திறைசேரி முறிகளின் பகிர்ந்தளிப்பு அட்டவணை II.22இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை II.22
திறைசேரி உண்டியல் வழங்கல் - முதிர்ச்சியின் அடிப்படையில்

| முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்) | தொகை (ரூ.மில்) | சதவீதம் |
|---|---|---|
| 2 | 58,321 | 46.54 |
| 3 | 27,951 | 22.30 |
| 4 | 10,000 | 7.98 |
| 5 | 14,550 | 11.61 |
| 6 | 14,500 | 11.57 |
| மொத்தம் | 125,322 | 100.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2 - 6 ஆண்டுகள் முதிர்ச்சிக்கான நறுக்குவீதங்கள் ஆண்டிற்கு 10.75 - 11.75 சதவீத வீச்சில் காணப்பட்டதுடன் முதிர்ச்சியின் ஒவ்வொரு ஆண்டு அதிகரிப்புக்கும் 25 அடிப்படைப்புள்ளி அதிகரிப்பொன்று காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அனைத்து ஏலங்களும் விலைக் கோரலுடன் மேலதிகமாக உதவப்பட்டதுடன் ரூ.275,537 மில்லியன் கொண்ட விலைக் குறிப்பீடுகள் பெறப்பட்டன. 2000ஆம் ஆண்டுப் பகுதியில் திறைசேரி முறிகளின் முதனிலை வழங்கலுடன் தொடர்பான தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்களை அட்டவணை II.23தருகின்றது.

திறைசேரி முறிகளை வைத்திருப்போர் நறுக்குகளை முதனிலை வணிகர்களினூடாகப் பொதுபடுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் அரையாண்டுக்கு ஒருமுறை வட்டிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரி முறிகளின் பேரிலான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் ரூ.7,487 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ரூ. 15,015 மில்லியனாகக் காணப்பட்டன.

2000ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த திறைசேரி முறிகள் ரூ.26,065 மில்லியனாக இருந்தவேளையில் இவ்வாண்டில் மீள் கொடுப்பனவிற்காகப் பெறப்பட்ட திறைசேரி முறிகளின் மொத்த எண்ணிக்கை 3,821ஆகக் காணப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அரையாண்டு நறுக்குவீத வட்டிக் கொடுப்பனவுக்காகப் பெறப்பட்ட நறுக்குகளின் எண்ணிக்கை 24,575ஆகும்.

**அட்டவணை II.23**
**திறைசேரி முறிகள் மீதான தெரிந்தெடுக்கப்பட்ட தகவல்கள் - 2000**

| முறித்தொடர்கள் | | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | ஏற்றுக்கொள்ளப் பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | முதிர்ச்சியில் நி.ஆ.ச.வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) | நறுக்கு வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) |
|---|---|---|---|---|---|---|
| 10.75% 2002 | அ | 2 | 5,926 | 1,000 | 12.49 | 10.75 |
| 10.75% 2002 | ஆ | 2 | 3,985 | 2,000 | 12.34 | 10.75 |
| 10.75% 2002 | இ | 2 | 1,000 | 1,000 | 12.00 | 10.75 |
| 10.75% 2002 | ஈ | 2 | 3,025 | 2,000 | 13.11 | 10.75 |
| 10.75% 2002 | உ | 2 | 12,000 | 12,000 | 13.11 | 10.75 |
| 10.75% 2002 | ஊ | 2 | 14,685 | 4,000 | 13.58-13.69 | 10.75 |
| 10.75% 2002 | எ | 2 | 10,033 | 4,660 | 13.86-15.38 | 10.75 |
| 10.75% 2002 | ஏ | 2 | 2,895 | 2,500 | 15.71 | 10.75 |
| 10.75% 2002 | ஒ | 2 | 5,777 | 4,511 | 16.40-16.89 | 10.75 |
| 10.75% 2002 | ஓ | 2 | 10,593 | 6,300 | 17.52-21.81 | 10.75 |
| 10.75% 2002 | ஔ | 2 | 18,655 | 5,450 | 21.80-22.19 | 10.75 |
| 10.75% 2002 | க | 2 | 4,427 | 650 | 20.62-22.00 | 10.75 |
| 10.75% 2002 | ங | 2 | 30,976 | 9,500 | 20.09-21.30 | 10.75 |
| 10.75% 2002 | ச | 2 | 10,788 | 2,750 | 18.97 | 10.75 |
| 11.00% 2003 | அ | 3 | 3,060 | 955 | 12.51 | 11.00 |
| 11.00% 2003 | ஆ | 3 | 9,842 | 4,000 | 12.27-12.38 | 11.00 |
| 11.00% 2003 | இ | 3 | 2,000 | 2,000 | 12.02 | 11.00 |
| 11.00% 2003 | ஈ | 3 | 6,909 | 4,000 | 13.93-14.81 | 11.00 |
| 11.00% 2003 | உ | 3 | 7,141 | 3,500 | 14.81-15.53 | 11.00 |
| 11.00% 2003 | ஊ | 3 | 12,358 | 3,500 | 15.65-15.92 | 11.00 |
| 11.00% 2003 | எ | 3 | 3,712 | 2,500 | 16.00 | 11.00 |
| 11.00% 2003 | ஏ | 3 | 5,820 | 4,496 | 16.44-16.93 | 11.00 |
| 11.00% 2003 | ஒ | 3 | 4,313 | 3,000 | 17.30-18.71 | 11.00 |
| 11.25% 2004 | அ | 4 | 10,245 | 4,000 | 12.40-12.53 | 11.25 |
| 11.25% 2004 | ஆ | 4 | 8,175 | 3,000 | 12.39-13.01 | 11.25 |
| 11.25% 2004 | இ | 4 | 3,540 | 3,000 | 12.17-13.05 | 11.25 |
| 11.50% 2005 | அ | 5 | 13,495 | 7,000 | 12.87-13.02 | 11.50 |
| 11.50% 2005 | ஆ | 5 | 8,898 | 2,400 | 12.71-12.77 | 11.50 |
| 11.50% 2005 | இ | 5 | 6,318 | 2,150 | 12.71-12.94 | 11.50 |
| 11.50% 2005 | ஈ | 5 | 3,000 | 3,000 | 12.46 | 11.50 |
| 11.75% 2006 | அ | 6 | 17,015 | 7,000 | 12.90-13.21 | 11.75 |
| 11.75% 2006 | ஆ | 6 | 5,616 | 2,000 | 12.73 | 11.75 |
| 11.75% 2006 | இ | 6 | 5,315 | 1,500 | 12.78-12.95 | 11.75 |
| 11.75% 2006 | ஈ | 6 | 4,000 | 4,000 | 12.53 | 11.75 |
| மொத்தம் | | | 275,537 | 125,322 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2000ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் எண்ணிக்கை 12,253 ஆக இருந்தது. இது 2 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 7,764 முறிகளையும் 3 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 2,889 முறிகளையும் 4 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 620 முறிகளையும் 5 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 567 முறிகளையும் 6 ஆண்டு முதிர்ச்சியைக் கொண்ட 413 முறிகளையும் உள்ளடக்கியிருந்தது.

## திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்

2000ஆம் ஆண்டில் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் வழங்கல்களோ அல்லது மூலதன மீள் கொடுப்பனவுகளோ எதுவும் காணப்படவில்லை. 2000ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ரூ.10.6 மில்லியனாக மாற்றமின்றிக் காணப்பட்டன.

## ஏனைய உள்நாட்டுப்படுகடன் கருவிகள்

இவ்வாண்டுக் காலத்தில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் கடனீட்டுப் பத்திரங்கள் தொடர்பாக புதிய வழங்கல்களோ அல்லது மீள் கொடுப்பனவுகளோ காணப்படவில்லை. அரசஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றினது கடனீட்டுப் பத்திரங்களின் வெளிநின்ற தொகை 2000ஆம் ஆண்டு இறுதியில் முறையே ரூ.500 மில்லியனாகவும், ரூ. 109 மில்லியனாகவும், ரூ. 83 மில்லியனாகவும் மாற்றமின்றியிருந்தன.

இவ்வாண்டில் வரி ஒதுக்குச் சான்றிதழ்மீது மூலதன மீள் கொடுப்பனவுகளோ அல்லது வட்டிக் கொடுப்பனவுகளோ காணப்படவில்லை. 2000ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை ரூ.7.2 மில்லியனில் காணப்பட்டது.

## முதனிலை வணிகர்களின் இரண்டாம் நிலைச்சந்தை கொடுக்கல் வாங்கல்கள்

2000ஆம் ஆண்டில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான இரண்டாம் நிலைச்

சந்தை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது. திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் மீதான கிரய, கொள்வனவுகள் விற்பனைகள் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளில் கணிசமான தொகை முதனிலை வணிகர்கள், மற்றும் வர்த்தக வங்கிகளினதும் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் இடையிலேயே இடம் பெற்றது. முதனிலை வணிகர்களினால் அறிவிக்கப்பட்டவாறு, 2000 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைச் சந்தையில் முதனிலை வணிகர்களினால் செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் கிரய விற்பனைகளிலும் கொள்வனவுகளிலும் மொத்தப் பெறுமதி முறையே ரூ.111 பில்லியனாகவும், ரூ.34 பில்லியனாகவும் விளங்கிய வேளையில் முதனிலை வணிகர்களினால் செய்யப்பட்ட திறைசேரி முறிகளின் கிரய விற்பனைகளினதும் கொள்வனவுகளினதும் மொத்தப் பெறுமதி முறையே ரூ.128 பில்லியனாகவும், ரூ.74 பில்லியனாகவும் விளங்கின. திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி முறையே ரூ.134 பில்லியனாகவும், ரூ.104 பில்லியனாகவும் விளங்கிய வேளையில் திறைசேரி முறைகளின் மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி முறையே ரூ.756 பில்லியனாகவும் ரூ.327 பில்லியனாகவும் காணப்பட்டன.

2000ஆம் ஆண்டு இறுதியில் முதனிலை வணிகர்களினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த வெளிநின்ற பொறுப்பு ரூ.3 பில்லியனாக அல்லது வெளிநின்ற மொத்தத்தில் 2.2 சதவீதமாக இருந்தவேளையில் முதனிலை வணிகர்களினால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற மொத்தத் திறைசேரி முறிகள் ரூ.10 பில்லியனாக அல்லது வெளிநின்ற மொத்தத்தில் 4.9 சதவீதமாகக் காணப்பட்டன.

## வெளிநாட்டுப்படுகடன்

2000ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டு அரசபடுகடன் ரூ.544,942 மில்லியனாக விளங்கி 1999இன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ.27,661 மில்லியன் (5.3 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2000ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட வெளிநின்ற மொத்தப் படுகடனில் இருபுடைக் கடன்களும் பல்புடைக் கடன்களும் முறையே ரூ.277,288 மில்லியனாகவும் (51 சதவீதம்) ரூ. 249,777 மில்லியனாகவும் (46 சதவீதம்) விளங்கிய வேளையில் வர்த்தகக் கடன்களும் ஏற்றுமதிக் கொடுகடன்களும் ரூ.17,907 மில்லியனாக (3 சதவீதம்) விளங்கின. இருபுடை வகையில் முக்கிய கொடுகடன் வழங்குனர்களாக யப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சேர்மனி என்பன காணப்பட்டன. இம்மூலங்கள் ரூ.258,124 மில்லியனுக்கு அல்லது மொத்த இருபுடைக் கடன்களில் 93 சதவீதத்திற்கு வகைகூறின. பல்புடை வகையில் மிகப் பெரும் கடன் வழங்குனராகவுள்ள பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு ரூ.129,144 மில்லியனுக்கு அல்லது மொத்தப் பல்புடைக் கடனில் 52 சதவீதத்திற்கு பொறுப்பாக இருந்தது.

நிதியங்களின் பயன்பாட்டின்படி, வகைப்படுத்துகையில் செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்ட மற்றும் பண்டக் கடன்கள் முறையே ரூ.427,415 மில்லியனாகவும் (78 சதவீதம்) ரூ.49,529 மில்லியனாகவும் (9 சதவீதம்) ரூ.30,627 மில்லியனாகவும் (6 சதவீதம்) காணப்பட்டன. அட்டவணை II.24, 2000ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டு அரசபடுகடனின் உள்ளமைப்பினை கொடை வகைகளின்படியும் நிதியின் பயன்பாட்டின் படியும் காட்டுகின்றது.

### அட்டவணை II.24
### வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2000 இறுதியில் உள்ளவாறு

| வகை | தொகை (ரூ.மில்.) | % |
|---|---|---|
| 1.கொடை வகைப்படி | 545,089 | 100 |
| இருபுடை | 277,288 | 51 |
| பல்புடை | 249,894 | 46 |
| வர்த்தக | 11,096 | 2 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 6,811 | 1 |
| 2.நிதிகளின் பயன்பாட்டுப்படி | 545,089 | 100 |
| காசு | 4,750 | 1 |
| பண்டம் | 30,628 | 6 |
| உணவு | 32,446 | 6 |
| நிகழ்ச்சித் திட்டம் | 49,529 | 9 |
| செயற்றிட்டம் | 427,562 | 78 |
| தொழில்நுட்ப உதவி | 174 | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2000ஆம் ஆண்டு இறுதியில் மொத்த முதல் தொகையின் மீள் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டு அரசபடுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கட்டணங்களையும் கூட்டிய தொகை முறையே ரூ.20,353 மில்லியனாகவும், ரூ.10,231 மில்லியனாகவும் காணப்பட்டன. 2000ஆம் ஆண்டுப் பகுதியில் மொத்தப் பகிர்ந்தளிப்புகள் ரூ.26,852 மில்லியனாக விளங்கி இருபுடை மூலங்களிலிருந்தான ரூ.16,804 மில்லியனையும் (62 சதவீதம்) இருபுடை மூலங்களிலிருந்தான ரூ.9,490 மில்லியனையும் (35 சதவீதம்) உள்ளடக்கியிருந்தன. ரூ.672 மில்லியன் (3 சதவீதம்) வர்த்தக வங்கிகள் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன்களின் பேரிலானதாக இருந்தது. இதனை முன்னைய ஆண்டின் ரூ.24,889 மில்லியன் கொண்ட மொத்தப் பகிர்ந்தளிப்புக்களுடன் ஒப்பிடலாம். இது முறையே பல்புடையிலிருந்தான ரூ.12,823 மில்லியனையும்

(51 சதவீதம்) பல்புடையிலிருந்தான ரூ.10,880 மில்லியனையும் (44 சதவீதம்) வர்த்தக மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் மூலங்களிலிருந்தான ரூ.1,186 மில்லியனையும் (5 சதவீதம்) உள்ளடக்கியிருந்தன. 2000ஆம் ஆண்டில் இப் பகிர்ந்தளிப்பில் 99 சதவீதம் செயற்றிட்டக் கடன்களின் கீழ் பெறப்பட்டன. அட்டவணை II.25 கொடையாளரின் வகை மற்றும் நிதிகளின் பயன்பாடு என்பனவற்றின்படி 1999 மற்றும் 2000 ஆண்டுக்கான பகிர்ந்தளிப்பின் பகுப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை II.25
வெளிநாட்டுக்கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| வகை | 1999 | | 2000 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.மில்.) | % | தொகை (ரூ.மில்.) | % |
| 1.கொடை வகைப்படி | 24,889 | 100 | 26,966 | 100 |
| இருபுடை | 12,823 | 51 | 16,804 | 62 |
| பல்புடை | 10,880 | 44 | 9,490 | 35 |
| வர்த்தக | - | - | - | - |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 1,186 | 5 | 672 | 3 |
| 2.நிதிகளின் பயன்பாட்டுப்படி | 24,889 | 100 | 26,966 | 100 |
| காசு | - | - | - | - |
| பண்டம் | 28 | - | 6 | - |
| உணவு | - | - | 385 | 1 |
| நிகழ்ச்சித் திட்டம் | - | - | - | - |
| செயற்றிட்டம் | 24,860 | 100 | 26,575 | 99 |
| தொழில்நுட்ப உதவி | 1 | - | - | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இவ்வாண்டில் 19 புதிய வெளிநாட்டுக் கடன்களுக்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் தொழிற்படு கடன்களின் எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 535 இற்கு அதிகரித்தது. இக்கடன்கள் 1 இலிருந்து 17 ஆண்டுகள்வரை வேறுபடும் சலுகைக் காலத்தையும் 2 இலிருந்து 40 ஆண்டுகள்வரை வேறுபடும் மீள் கொடுப்பனவுக் காலத்தையும் கொண்டிருந்தன. வட்டி வீதங்கள் ஆண்டொன்றிற்கு 0 இலிருந்து 10.85 வரையான வீச்சுகளைக் கொண்டிருந்தன. கடன்களின் கொடைக்கூறு 2 இற்கும் 91 சதவீதத்திற்குமிடையிலான வீழ்ச்சியினைக் கொண்டிருந்தது. அட்டவணை II.26, 2000ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு சலுகைக்காலத்தின் வீச்சுக்கள் முதிர்ச்சிக் காலம் வட்டிவீதம் மற்றும் வெளிநாட்டு அரசபடுகடனின் கொடை மூலகம் என்பனவற்றை நன்கொடை வகைகளின் படி காட்டுகின்றது.

அட்டவணை II.26
வெளிநாட்டுப் படுகடனின் முதிர்ச்சி, வட்டிவீதங்கள், கொடை மூலம்

| கொடை வகை | முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்) | | வட்டிவீதம்/ பணிக் கட்டணம் (ஆண்டிற்கு %) | கொடை மூலம் (%) |
|---|---|---|---|---|
| | சலுகைக் காலம் | மீள்கொடுப் பனவுகாலம் | | |
| இருபுடை | 1 – 17 | 7 - 40 | 0.00 - 7.39 | 5 – 91 |
| பல்புடை | 3 – 11 | 9 – 40 | 0.75 - 8.25 | 5 – 88 |
| வர்த்தகம் | 0 – 10 | 2 – 30 | 4.00 - 10.85 | 2 – 61 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 1 – 10 | 7 – 13 | 3.50 - 9.58 | 4 – 55 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம்

வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, வங்கி ஊழியர்களுக்கும் நிதியியல் துறையிலுள்ள ஆளணியினருக்கும், நிதியியல் துறையில் காணப்படும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் புதுக்கண்டு பிடிப்புக்களிலிருந்து தோன்றும் அறைகூவல்களை எதிர்கொள்ளும் விதத்தில் அதற்குத் தேவையான தேர்ச்சிகளை அவர்களுக்கு வழங்குவதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. 2000ஆம் ஆண்டில், வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையமானது 2,969 பயிற்சி மணித்தியாலங்களை உள்ளடக்கிய 90 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை 2,265 பங்கேற்பாளர்களுக்காக நடத்தியது. ஏறத்தாழ 49 சதவீதமான பங்கேற்பாளர்கள் மத்திய வங்கியிலிருந்து கலந்துகொண்டனர். வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட மொத்த நிகழ்ச்சித் திட்டங்களில் 76 நிகழ்ச்சித் திட்டங்கள் 2000ஆம் கலண்டர் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடங்கியிருந்ததுடன் இதில் 43 சதவீதமான பங்கேற்பாளர்கள் வங்கியிலிருந்தும் 39 சதவீதமானவர்கள் வர்த்தக வங்கிகளிலிருந்தும் கலந்துகொண்டனர். ஏனையோர் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிதியியல் துறை நிறுவனங்களிலிருந்து கலந்துகொண்டனர். நடத்தப்பட்ட 14 சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது, மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட 2 பன்னாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவையான அநுசரணையை வழங்கியது. இந் நிகழ்ச்சித் திட்டங்கள் 2000ஆம் ஆண்டு மே 22-24 ஆம் நாள்வரை நடத்தப்பட்ட "கொடுகடன் எதிர்பாரா இடர் முகாமைத்துவமும் சொத்து தரமும்" என்ற தலைப்பின்மீதான நிதியியல் உறுதிப்பாட்டு நிறுவகம்/ சியென்சா வங்கி மேற்பார்வை கூட்டச் செயலமர்வுகள் மற்றும் 2000ஆம் ஆண்டு ஒகத்து 12-26ஆம் நாள்வரை நடாத்தப்பட்ட சியென்சா மத்திய வங்கி பாடநெறிகள் பற்றியனவாகவும் காணப்பட்டன.

2000ஆம் ஆண்டில் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையமானது தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனித் தொழிற்பாடுகள் என்பன தொடர்பாக 31 நிகழ்ச்சித் திட்டங்களை மொத்தமாக 413 பங்கேற்பாளர்களுக்கு நடத்தியதன் மூலம் வங்கியின்

ஊழியர்களுக்கு பயிற்சிக்கான மிகக் கூடுதலான வாய்ப்புக்களை வழங்கியது. பங்கேற்பாளர்களில் 81 சதவீதத்தினர் வங்கியிலிருந்தே கலந்துகொண்டனர். குறிப்பாக, வங்கிக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்ட உயர்பதவி அலுவலர்களுக்காக ஒவ்வொன்றும் 144 பயிற்சி மணித்தியாலங்களைக் கொண்ட மூன்று நிகழ்ச்சித் திட்டங்கள் கணனிப் பிரயோகங்கள் தொடர்பாக நடாத்தப்பட்டன. பெரும்பாலான கணனி நிகழ்ச்சித் திட்டங்களின் காலம் 60 மணித்தியாலங்களாகக் காணப்பட்டது.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில், வர்த்தக வங்கித் தொழில், வங்கித் தொழில் மேற்பார்வையும் ஒழுங்குவிதிகளும், நிதியியல் மற்றும் மூலதனச் சந்தைகள், மத்திய வங்கித் தொழில், கிராமிய வங்கித் தொழில் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி போன்ற விடயங்களை உள்ளடக்கிய குறுங்கால ஆய்வரங்குகளும் பாடநெறிகளும் நடாத்தப்பட்டன. வர்த்தக வங்கித் தொழிலை உள்ளடக்கிய 14 தலைப்புக்களின் கீழ் 357 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டதுடன் மிகப் பிரபல்யம்பெற்ற பாடநெறிகளாக தவணைக் கொள்வனவு மற்றும் குத்தகை நிதியிடல், பிணையங்கள் மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான சட்டங்கள், பிணை மற்றும் அத்துடன் தொடர்பான சட்ட நடைமுறைகள், பயன்மிக்க கடன் முகாமைத்துவம் நிதிக் கூற்றுப் பகுப்பாய்வு மற்றும் வங்கி ஐந்தொகை பற்றிய விளக்கம் என்பன விளங்கின. வங்கித் தொழில் மேற்பார்வை மற்றும் ஒழுங்கு விதிகள் என்பதன்கீழ் அவ்விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டங்களில் முக்கியமாக வர்த்தக வங்கிகளிலிருந்து கலந்துகொண்ட 199 பங்கேற்பாளர்களில் பெரும்பாலானவர்கள் நிதி மோசடிகளைத் தடுத்தலும் கணனி தொடர்பான குற்றச் செயல்களை ஒழித்தலும், மூலதனப் போதுமை, சட்டபூர்வமற்ற பணத்தினை சட்ட ரீதியான பணமாக மாற்றுவதில் கட்டுப்பாடு, வங்கிகளுக்கான முகாமைத்துவத் தகவல்கள் மற்றும் கொடுகடன் எதிர்பாரா இடர் முகாமைத்துவம் மற்றும் வங்கித் தொழில் முறை தோல்விகாணுதல் என்பன மீதான ஆய்வரங்குகளிலேயே கலந்து கொண்டனர். மேலும், வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்களுக்காக ஒவ்வொன்றிலும் 6பேர் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆலோசனையாளர்களினால் நடத்தப்பட்டன.

சொத்துப் பட்டியல் முகாமைத்துவம், அரச படுகடன் பிணையங்கள் சந்தை, கொழும்பு பங்குச் சந்தை, வட்டிவீதங்களின் போக்குகள் எதிர்கால வாய்ப்புக்கள் அதைத் தீர்மானிக்கும் விடயங்கள் மற்றும் அமைப்பு போன்ற ஆய்வரங்குகள் வர்த்தக வங்கித் தொழில் துறையின் ஆளணியினரிடையே பிரபல்யம் பெற்றிருந்தன.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக வர்த்தக வங்கித் தொழில் மற்றும் மத்திய வங்கித் தொழிலில் டிப்பிளோமா பாடநெறிகளை வழங்கியது. வங்கி அலுவலர்களுக்கு மட்டும் ஆங்கிலத்தில் சான்றிதழ் பாடநெறி நடாத்தப்பட்டது. அறிக்கை எழுதுதல், அலுவலக முகாமைத்துவமும் அலுவலக நடைமுறைகளும் மற்றும் அடிப்படைத்தர பாடநெறிகள் என்பன மீது தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்டதுடன் இவற்றில் சில பாடநெறிகள் முக்கியமாக மத்திய வங்கி அலுவலர்களுக்காகவே நடாத்தப்பட்டன. 50 அலுவலர்கள் கலந்துகொண்ட மூன்று நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் அலுவலர்களுக்காகவே குறிப்பாக வடிவமைக்கப் பட்டிருந்தன.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையமானது முதற்றடவையாக மூலதனக் கணக்கு தாராளமயமாக்கல், நடைமுறை விடயங்கள், அதிகார நடத்தை விளக்கம், இலங்கையில் கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை என்பன மீது தொடர்ச்சியான மூத்த முகாமைத்துவ ஆய்வரங்குகளை வழங்கியதுடன் புதிய பன்னாட்டு வர்த்தகச் சூழலில் ஏற்றுமதிகளுக்கு நிதியிடல் என்பதன்மீது செயலமர்வொன்றும் இடம்பெற்றது. இவை இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள மிகச் சிறந்த அறிஞர்களினாலேயே நடாத்தப்பட்டது.

வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட மற்றைய சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மத்திய வங்கி அலுவலர்கள் 270 பேருக்கு வழங்கப்பட்ட வலையமைப்பு/இணையம், மின் அஞ்சல் பயிற்சிகள் மீதான ஒரு நாள் ஆய்வரங்கையும் வங்கிக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்ட 60 உயர் பதவி அலுவலர்களுக்கான சூழ்நிலைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், 54 உயர் பதவி அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், முதனிலை வணிகர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட அரச பிணையங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களின் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை மற்றும் கொள்வனவு மீதான ஆய்வரங்கொன்று, சட்டம் மற்றும் அலுவலக நடைமுறைகளின் மீதான தகுதிகாண் தடை மற்றும் சூழ்நிலைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

புதிய கருத்துக்களை பரப்புவதற்கும், தொடர்பான துறைகளிலுள்ள தொழில்சார்

## அட்டவணை II.27
## வங்கித் தொழில் கற்கை ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 1999 - 2000

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வகை | 1999 | | | | | 2000 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மத்தியவங்கி பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | ஏனைய பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி மணித்தியாலங்களின எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மத்தியவங்கி பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | ஏனைய பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | பயிற்சி மணித்தியாலங்களின எண்ணிக்கை |
| 1.தகவல் தொழில்நுட்பமும் கணனிப் பயிற்சியும் | 16 | 186 | 39 | 225 | 1164 | 31 | 333 | 80 | 413 | 1524 |
| 2.வர்த்தக வங்கித் தொழில் | 12 | 37 | 279 | 316 | 381 | 14 | 57 | 300 | 357 | 444 |
| 3.வணிக, முதலீட்டு வங்கி | 1 | 5 | 22 | 27 | 18 | - | - | - | - | - |
| 4.நிதியியல், முதலீட்டுச் சந்தை | 3 | 22 | 43 | 65 | 60 | 3 | 19 | 68 | 87 | 48 |
| 5.மத்திய வங்கித் தொழில் | 4 | 18 | 87 | 105 | 105 | 4 | 20 | 61 | 81 | 114 |
| 6.வங்கி மேற்பார்வையும் ஒழுங்கு விதிகளும் | 8 | 105 | 130 | 235 | 138 | 7 | 39 | 160 | 199 | 90 |
| 7.நிதியியல்துறை: தேர்ச்சி அபிவிருத்தி | 15 | 411 | 5 | 416 | 204 | 8 | 115 | 24 | 139 | 270 |
| 7.1 கீழ் மட்டம் | 10 | 307 | 2 | 309 | 126 | 3 | 37 | 7 | 44 | 42 |
| 7.2 மத்திய மட்டம் | 4 | 59 | 3 | 62 | 66 | 5 | 78 | 17 | 95 | 228 |
| 7.3 உயர்மட்டம் | 1 | 45 | - | 45 | 12 | - | - | - | - | - |
| 8.ஏனைய நிகழ்ச்சிகள் | - | - | - | - | - | 9 | 47 | 150 | 197 | 180 |
| 8.1 கிராமிய வங்கித்தொழில் | - | - | - | - | - | 3 | 0 | 50 | 50 | 120 |
| 8.2 முகாமைத்தவம் | - | - | - | - | - | 4 | 22 | 85 | 107 | 36 |
| 8.3 ஏனையவை | - | - | - | - | - | 2 | 25 | 15 | 40 | 24 |
| 9.சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்/ ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் | 16 | 140 | 313 | 453 | 321 | 14 | 474 | 318 | 792 | 298.5 |
| 9.1 உள்ளக வங்கி மேற்பார்வை ஆலோசனையாளர்களினால் வழங்கப்பட்ட திணைக்களப்பயிற்சி | 7 | 68 | - | 68 | 171 | 6 | 73 | 0 | 73 | 138 |
| 9.2 பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 5 | 14 | 19 | 18 | 2 | 16 | 30 | 46 | 42 |
| 9.3 ஏனையவை | 8 | 67 | 299 | 366 | 132 | 6 | 385 | 288 | 673 | 1118.5 |
| மொத்தம் | 75 | 924 | 918 | 1842 | 2391 | 90 | 1104 | 1161 | 2265 | 2968.5 |
| 10.பொதுமக்களுக்கான ஆய்வரங்குகள் / ஞாபகார்த்த விரிவுரைகள் | 9 | | | 1800 | 13.5 | 10 | | | 2000 | 15 |

மூலம்: வ.தொ.க.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி

நிபுணர்களும் கல்விமான்களும் பொருளாதார மற்றும் நிதியியல்துறை அபிவிருத்திகளுடன் தொடர்பான விடயங்களில் தமது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் தமது அலுவலர்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் களமமைத்துக் கொடுக்கும் விதத்தில் 2000ஆம் ஆண்டில் நான்கு ஞாபகார்த்த விரிவுரைகள் நடாத்தப்பட்டன. "2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் இலங்கைக்கான நடுத்தரகால வாய்ப்புக்களும்" என்னும் பொருள்பற்றி மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் திரு. ஆர். ஏ. ஜயதிஸ்ஸவின் சுதந்திர தின ஞாபகார்த்த விரிவுரை, "அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களில் நிதியியல் சந்தைகளின் அபிவிருத்தி" என்னும் பொருள் பற்றி இலங்கையின் பன்னாட்டு நாணய நிதிய மூத்த வதிவிடப் பிரதிநிதி முனைவர் நடீம் உல் ஹக் இன் குடியரசு தின ஞாபகார்த்த விரிவுரை, "நிதியியல் நெருக்கடிகள், தடுப்பும் முகாமைத்துவமும்" என்னும் பொருள்பற்றி வாசிங்டன் டி.சி.யின் பன்னாட்டு பொருளாதார நிறுவகத்தின் மூத்த அங்கத்தவரும் உலக வங்கியின் தென்னாசியாவிற்கான முன்னாள் முதன்மை பொருளியலாளருமான முனைவர் ஜோன் வில்லியம் சன்ஸ்சின் இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா ஞாபகார்த்த விரிவுரை, மற்றும் "சட்டத்திற்கு மாறாகப் பெறப்பட்ட பணத்தினை சட்ட ரீதியாக மாற்றுதலுக்கான ஒழுங்குவிதிகள்: உலகளாவிய பிரச்சினைக்கான புதியதொரு அறைகூவல்" என்னும் பொருள்பற்றி இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் முனைவர் டி.சி. ஜெயசூரியாவினால் ஆற்றப்பட்ட வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விரிவுரை என்பனவே அவையாகும். நடைமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் விடயங்கள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வுகளை அதிகரிக்கும் நோக்குடன் 2000ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கான ஆய்வரங்குகள் ஆறு நடாத்தப்பட்டன. ஆய்வரங்கின் தலைப்புக்களும் பேச்சாளர்களது பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளன.

1. "தென்னாசியாவின் பொருளாதாரப் பிரச்சினைகள்" என்னும் தலைப்பில் உரையாற்றியவர் பேராசிரியர் பிரபு தேசாய், பொருளாதாரப் பேராசிரியர், இலண்டன் பொருளாதார மற்றும் அரசியல் விஞ்ஞானக் கல்லூரி மற்றும் பணிப்பாளர், உலக அரசாட்சி கல்விகளுக்கான நிலையம்.
2. "உலக வர்த்தக அமைப்பும் பன்னாட்டு வர்த்தகத்தில் தோற்றம் பெற்றுவரும் விடயங்களும்" என்னும் தலைப்பில் உரையாற்றியவர் முனைவர் சமன் கலேகம, நிறைவேற்றுப் பணிப்பாளர், கொள்கை ஆய்வுகள் நிறுவனம்.
3. "வறுமைப் பொருளாதாரமும் சுற்றாடலும்" என்னும் தலைப்பில் உரையாற்றியர் முனைவர் அனில் மார்க்கண்டேய. பொருளாதாரப் பேராசிரியர் பாத் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்.
4. "இலங்கையில் செலாவணிவீத அசைவுகள்" என்னும் தலைப்பில் உரையாற்றியவர் முனைவர் எச். என். தேநுவர, மூத்த பொருளியலாளர், இலங்கை மத்திய வங்கி.
5. "வாழ்க்கைச் செலவு இலங்கையில் எவ்வாறு அளவிடப்படுகின்றது" என்னும் தலைப்பில் விரிவுரையாற்றிவர் திரு. ஏ.ஜி.இடபிள்யூ. நாணயக்கார, பணிப்பாளர், தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்.
6. "உங்களுக்குப் பயனுள்ள விதத்தில் உங்கள் சேமிப்புக்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம்: கொடுகடன் தரமிடலின் பங்கு" என்னும் தலைப்பில் விரிவுரையாற்றியவர், திரு. ரவி அபேசூரியா, முகாமைப் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட டப் அன்ட் பெல்ப்ஸ் கிறடிட் ரேடிங்லங்கா.

அட்டவணை II.27, 1999இல் 2000இலும் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பகுப்பாய்வினைத் தருகின்றது.

எழுபத்தியிரண்டு மத்திய வங்கி அலுவலர்கள் தமது மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதற்காக ஆங்கிலத்திற்கான சுயபயில்வு நிலையத்தினைப் பயன்படுத்திக்கொண்டனர். இந் நிலையத்தில் கிடைக்கத்தக்கதாக இருந்த இவ் வசதிகளுக்குத் துணையாக வாய்மொழித் தொடர்புகள் மற்றும் அறிக்கை எழுதுதல் என்பனவற்றிற்காக வகுப்புகளும் நடாத்தப்பட்டன.

## செயலகம்

வங்கியின் வேலைகளுக்கு வசதி செய்துகொடுக்கும் நிதி, வழங்கல்கள், பயணம் உபசரணைப் பணிகள் மற்றும் ஏனைய பல்வகைப் பணிகள் போன்ற கூட்டுப் பணிகளை செயலகம் தொடர்ந்தும் வழங்கியது.

2000ஆம் ஆண்டில், இந்த நோக்கத்துக்காக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை உள்ளடக்கிய வழிகாட்டல்களை வழங்குவதன்மூலம், வங்கியின் திணைக்களங்களினால், திணைக்களத்தின் செலவை சுய கண்காணிப்புச் செய்யும் முறையானது 2000ஆம் ஆண்டில் மேலும் வலுவூட்டப்பட்டது. இது வங்கியின் அனைத்தையும் உள்ளடக்கிய கூட்டுத் திட்டத்தினது வரைச் சட்டத்துக்குள் கடுமையான நிதியியல் கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கான தற்போது நடைமுறையிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய வரவு செலவுத் திட்ட முறைமைக்கு மேலதிகமாகக் காணப்பட்டது.

2000ஆம் ஆண்டில் வங்கியில் தொழில் தருநர் ஊழியர் உறவுகள் குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்தன. வங்கியின் தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடியதுடன் பின்னர் ஊழியர்களது வேதனங்கள் மற்றும் நன்மைகளை குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கக்கூடியதாயிருந்ததுடன் 2000ஆம் ஆண்டு யூலை 1ஆம் நாளிலிருந்து 2002ஆம் ஆண்டின் இறுதி வரைக்குமான காலப்பகுதிக்காக வங்கிக்கும் அனைத்துத் தொழிற்சங்கங்களுக்குமிடையே கூட்டு உடன்படிக்கையொன்று கையெழுத்திடக் கூடியதாயும் இருந்தது.

## சட்டம்

சட்டத் திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்ட வேலைகளை சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரை வழங்குதல், நீதி மன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றுகளிலும் வங்கியைப் பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் வங்கித் தொழில்/ நிதியியல் துறையின் சட்டங்களில் மேலும் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கு உதவுதல் எனப் பரந்த ரீதியில் வகைப்படுத்த முடியும்.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திணைக்களம் வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கு தொடர்ந்தும் மதியுரைப் பணிகளை வழங்கியதுடன் நாணயச் சபையும் மத்திய வங்கியின் அலுவலர்களும் கட்சிக்காரர்களாக உள்ள வழக்குகளில் சட்டவரைஞர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியது. 2000ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட முக்கிய சட்ட சீரமைப்புக்கள் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க

நாணயச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் என்பனவற்றிற்காக திருத்தங்களையும் நிதி நிறுவனங்களின் கடன் மீளப்பெறுகைகளுடன் தொடர்பான சட்டவாக்கம் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தன.

## பணிமனை

2000ஆம் ஆண்டுப்பகுதியில் பணிமனைத் திணைக்களம் வழமையான பேணல் வேலைகளிலும் குத்தைக்குப் பெறப்பட்ட பணிமனைகளையும் மத்திய வங்கியின் சொந்தப் பணிமனைகளையும் சுத்தமாக வைத்திருப்பதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது. மேலும், வங்கியிலுள்ள மற்றைய திணைக்களங்களுக்கு போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் வசதிகள் போன்ற ஆதரவுப் பணிகளைத் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது.

திணைக்களம், தொல் பொருளியல் திணைக்களம் மற்றும் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் என்பனவற்றின் ஆலோசனையுடன் சதாம் வீதி மணிக்கூட்டுக் கோபுரத்தினைப் பாதுகாக்கும் வேலைகளை நிறைவு செய்து கொண்டது. புகழ் பெற்ற பாடலான "தானோ புதுங்கே" இனை தழுவிய மணியோசை நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளாக் நிறுவனத்தினால் தொழில்நுட்ப உதவியுடன் பொருத்தப்பட்டது.

## புதிய கட்டடங்கள்

மத்திய வங்கியின் விரிவாக்கக் கட்டடத்தின் கட்டுமானத்துடன் தொடர்பான வேலைகளையும் சேதமாக்கப்பட்ட தலைமை அலுவலகக் கட்டடத்தின் புத்தாக்க வேலைகளையும் கண்காணிக்க மற்றும் மேற்பார்வை செய்கின்ற இரண்டைப் பணிகளைக் கையாளுவதற்காக 1997 நவெம்பர் 18ஆம் நாளன்று புதிய கட்டடங்கள் திணைக்களம் நிறுவப்பட்டது.

### மத்திய வங்கி கட்டடத்திற்கான விரிவாக்கம்

விரிவாக்கக் கட்டடத்தின் கட்டுமான வேலைகள் 1999 இறுதியில் முற்றுப்பெற்றன. அமைதியாகத் திறக்கப்பட்ட பின்னர் கட்டடத்திற்குத் திணைக்களங்கள் கொண்டுவரப்பட்டன. கட்டடம் மத்திய வங்கியின் பொன்விழா நிகழ்வினை முன்னிட்டு 2000ஆம் ஆண்டு ஓகத்து 27ஆம் நாளன்று அதி மேதகு இலங்கை சனாதிபதியும் நிதி திட்டமிடல் அமைச்சருமாகிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாண்டில் திணைக்களம், மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு மகிழ்ச்சிகரமானதும் பாதுகாப்பானதுமான வேலைக் சூழலொன்றை அமைத்துக் கொடுப்பதில் ஈடுபட்டது. மத்திய வங்கிப் பணிமனையின் வனப்பினை மேம்படுத்தல், பாதுகாப்பு வேலி மற்றும் அலுவலகங்களின் புதுப்பித்தல் என்பனவற்றை இந்த வேலைகள் உள்ளடக்கியிருந்தன.

அலுவலர்களுக்கு வழங்கப்படும் தளபாடங்களை நவீனமயப்படுத்துவதற்காக திணைக்களத் தலைவர்கள், மேலதிக திணைக்களத் தலைவர்கள் மற்றும் வேறு சிலருக்கும் புதிய தளபாடங்கள் வழங்கப்பட்டன. அத்தகைய மாற்றியமைக்கக் கூடிய வடிவங்களைக் கொண்ட தளபாடங்கள் வங்கித் தொழில், பொருளாதார ஆராய்ச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களங்களுக்கு வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஏனைய திணைக்களங்களுக்கும் இதே போன்ற தளபாடங்கள் வழங்கப்படும்.

கட்டடத்தின் வினைத்திறன் மிக்கதும், தடங்கலற்றதுமான பணியினை உறுதிப்படுத்துவதற்காக 2000ஆம் ஆண்டு ஒத்தோபரிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்கு எந்தரவியல் பணிகளைப் பேணுவதற்காக ஜேர்மன் நிறுவனமான சூட் எற்னா வெர்க் ஜீஎம்பிஎச் உடன் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டுள்ளது.

### சேதமடைந்த மத்திய வங்கிக் கட்டடத்தின் புத்தாக்கம்

1997 திசெம்பரில் தொடங்கிய மத்திய வங்கிக் கட்டடத்தின் புத்தாக்கம் இவ்வாண்டில் தொடர்ந்தது. 2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு அட்டவணையிடப்பட்டிருந்த இச் செயற்றிட்டம் எதிர்பாரா காரணங்களினால் பிற்போடப்பட்டதெனினும் 2001ஆம் ஆண்டின் இறுதியில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து உபகரணங்களும் பொருத்தப்பட்ட மாநாட்டு மண்டபம் ஒன்றை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகளும் வடிவமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களும் தாமதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

### ஊர்திகள் தரிப்பிடத்தின் நிருமாணம்

நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து 140 பேர்சஸ் பரப்பளவைக் கொண்ட நிலமொன்று 99 ஆண்டு காலப்பகுதிக்கு ரூ.113.2 மில்லியன் மொத்தச் செலவில் குத்தகைக்குப் பெறப்பட்டது. இந்நிலம் 27.10.2000 அன்று கையேற்றுக் கொள்ளப்பட்டதுடன் இச் செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக மேற்பரப்பில் ஊர்திகளை நிறுத்துவதற்கேதுவாக நிலம் துப்பரவு செய்யப்பட்டது. திணைக்களம் இப்பொழுது பல்மாடி ஊர்திகள் தரிப்பிடத்தினை வடிவமைப்பதிலும் அத்தகைய கட்டுமானத்திற்குத் தேவையான சட்ட ரீதியான மற்றும் ஏனைய அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதிலும் ஈடுபட்டிருக்கிறது.

## பாதுகாப்புப் பணிகள்

2000ஆம் ஆண்டு தொடக்கத்தில் உலக வர்த்தக நிலையத்தில் அமைந்திருந்த அனைத்துத் திணைக்களங்களும் சனாதிபதி மாவத்தையிலுள்ள புதிய விரிவாக்கக் கட்டடத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் இக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள மின்னியல் பாதுகாப்பு முறைகள் பற்றி அதன் அலுவலர்களுக்கு பயிற்சியினை வழங்கியது.

இதற்கு மேலதிகமாக் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் தீயணைப்பிலும், சுடுபடைக் கலங்களைக் கையாளுவதிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டுக் காலத்தில் நேரில் சுடும் பயிற்சியும் நடத்தப்பட்டது.

ஆய்வுக்குரிய காலப்பகுதியில், வங்கி அலுவலகங்கள் அமைந்திருந்த அனைத்துப் பணிமனைகளுக்கும் பிரதேச அலுவலகங்களுக்கும் மற்றைய இடங்களுக்கும் நாணயங்களைக் கொண்டு செல்லவும் எடுத்துவரவும், கட்டுமான வேலைக்கான கட்டடவாக்கப் பொருட்களை கொண்டு செல்லவும் திணைக்களம் பாதுகாப்பினை வழங்கியது.

வங்கியின் பாதுகாப்புக்குத் தேவையான பாதுகாப்பு வழி முறைகளை நடைமுறைப்படுத்துவதில் அரச பாதுகாப்பு நிறுவனங்களுடனும் புலனாய்வு முகவர்களுடனும் திணைக்களம் மிக நெருக்கமாகப் பணியாற்றியது.

## தகவல்

இத் திணைக்களம், தகவல் மத்திய நிலையமாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், தகவல்களைச் சேகரித்தல் மற்றும் வங்கி ஆளணி மற்றும் பொது மக்களுக்கு ஊடகத்துறையினூடாக தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவும் விளங்கியது.

வங்கிக்குள்ளே நிருவாகம் மற்றும் பொதுவான தகவல்களைப் பரப்புவதற்காக இத் திணைக்களம் உள்ளகச் செய்தி மடலைத் தொடர்ந்தும் ஒழுங்காக வெளியிட்டது.

வெளியுலகத் தகவல்களைப் பரப்பும் வகையில் இத் திணைக்களம், நாளாந்தச் செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச் சுட்டெண்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக் கடன்கள் தொடர்பான தகவல்களை மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு வெளியிடுவதற்காக ஒழுங்குகளை மேற் கொண்டது. இவற்றோடு, அலுவல்சார் பத்திரிகை வெளியீடுகள் மற்றும் வங்கியின் பிரசித்த வேலைகளும் இத் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டன.

முன்னைய ஆண்டுகளைப் போலவே இத் திணைக்களம், வங்கியின் சார்பில் ஆண்டறிக்கை, பொருளாதாரத்தின் நிலை, இலங்கைப் பொருளாதாரத் தரவு, மாதாந்தச் செய்தித்திரட்டு, 2000ஆம் ஆண்டுக்கான பொருளாதார மற்றும் சமூகப் புள்ளி விபரங்கள் ஆகியவற்றை அச்சிட்டது. அலுவலர் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட இரு புத்தகங்கள் (இதழ் 25-26 மற்றும் 27 – 28 ) வெளியிடப்பட்டதோடு நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீடு 1996/ 97 (பகுதி 11) மற்றும் இலங்கைப் பொருளாதாரம் 1999 மற்றும் நடுத்தரகால வாய்ப்புக்கள் ஆகியனவும் வெளியிடப்பட்டன. மாதாந்தம் சிங்களத்தில் வெளியிடப்படும் "சட்டகன" மற்றும் மாதத்துக்கு இருமுறை ஆங்கிலத்தில் வெளியிடப்படும் நியூஸ் சேர்வே ஆகியனவே இத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் ஏனைய இரு வெளியீடுகளாகும்.

மத்திய வங்கியின் 50ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக "இலங்கையில் நாணயக் குத்திகளினதும் நாணயத் தாள்களினதும் வரலாறு" என்ற தலைப்பில் புத்தகமொன்று வெளியிடப்பட்டது. இந் நிகழ்வினைக் குறிக்கும் முகமாக மத்திய வங்கியின் கருமங்கள் மீதான "பகன் தறுவ" என்ற கல்வி சம்பந்தமான தொலைக்காட்சி விவரணப்படம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் அச்சகம், வங்கியின் அச்சிடல் தேவைகளின் பெரும் பகுதியைத் தொடர்ந்தும் ஈடு செய்வதாகக் காணப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்ட வெளியீடுகளை அச்சிடுவது தவிர நிதி, திட்டமிடல் அமைச்சுக்காக "அரச நிதியின் போக்குகள்" என்னும் பிரசுரத்தையும் அச்சிடுவதனையும் இவ்வச்சகம் பொறுப்பேற்றுக் கொண்டது. வங்கியின் புகைப்பட மற்றும் ஓவிய வடிவமைப்புப் பணிகளையும் இத் திணைக்களம் வழங்கியது.

### நூலகம் மற்றும் தகவல் நிலையம்

தகவல்களைப் பரப்புவதற்குப் பொறுப்பான வங்கியின் நூலகமானது நூலகம் மற்றும் தகவல் நிலையமென மீளப் பெயரிடப்பட்டது. இலங்கை மத்திய வங்கி நூலகத்தினை மீளமைப்பதற்கான நிதியை வழங்கிய உலக வங்கித் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐடீஎப் செயற்றிட்டத்தின் கீழ் நூலகம் மற்றும் தகவல் நிலையத்தின் தொழிற்பாடுகள் தன்னியக்கப்படுத்தப்பட்டு மத்திய வங்கி அலுவலகத்தின் மீளமைப்பு நிறைவு செய்யப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கீழ் "உலகளாவிய வாணிப சஞ்சிகைகள் மீதான கணனித்தட்டு " நூலகத்திலுள்ள சேகரிப்புக்களுடன் சேர்க்கப்பட்டதுடன், வெளி

நாடுகளின் நூலகங்களினது நடைமுறை அபிவிருத்திகள் தொடர்பில் நூலக அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது இவ்வாண்டில், தற்போதைய நிகழ்வுகள் பற்றிய கட்டுரையின் தலைப்புக்களுடனான பிரிவெடைகள் , வெப்வாச், அண்மைக்கால கைக்கொள்ளல்கள் நடைமுறை விடயங்கள், பீ.ஐ.எஸ். ஆய்வு, வெப் அகராதி மற்றும் இணையத்தினூடாக உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கித் தொழில் போன்றவற்றின் தொகுப்புக்களைத் தொடர்ந்தும் வழங்கியது. நூலகத்திலுள்ள வெளியீடுகளை இலகுவில் எய்தக் கூடிய தயார் நிலையிலுள்ள நூற்பட்டியல் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வின் கீழான ஆண்டில் நூலகம் மற்றும் தகவல் நிலையம் 9,040 புத்தகங்கள் மற்றும் 494 பருவகால வெளியீட்டுத் தலைப்புக்கள் மற்றும் 680 குறுந்தட்டு - றோம்ஸ் ஆகியவற்றைக் கொண்ட சேகரிப்பொன்றை ஏற்படுத்தியிருந்தது.

## தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது வங்கியின் கணனி முறைமையின் முகாமைத்துவம் தொழிற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தகவல் செயல்முறைத் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்குப் பதிலிறுக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்ப வசதிகள் வங்கியின் பெருமளவிலான ஊழியர்களை சென்றடையும் விதத்தில் விரிவாக்கப்பட்டதுடன், கணனி மயமாக்கப்பட்ட சூழலொன்றில் அவர்கள் செயலாற்றுவதை இயலச் செய்யவும், செயற்றிறனை ஊக்குவிப்பதிலும் தொழிற்பாட்டுச் செலவைக் குறைப்பதிலும் அவர்களுக்கு உதவும் வகையிலும் அமைந்திருந்தது. புதிய தொழில் நுட்பத்தை அறிமுகஞ் செய்தல், தற்போதுள்ள கணனி முறையினை மீளத்திட்டமிடுதல், வங்கியின் நீண்டகால நோக்குடன் இணைந்து செல்லும் விதத்தில் எதிர்கால அறைகூவல்களுக்கு முகங் கொடுப்பதற்காக அலுவலர்களின் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியினைத் தரமுயர்த்துதல் ஆகியன பற்றியே தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தனது முக்கிய கவனத்தைச் செலுத்தியது.

தற்போது நடைமுறையிலுள்ள ஏஎஸ் 400 கணனி முறைகள் இவ்வாண்டில் தரமுயர்த்தப்பட்டன. செய்முறை முதன்மைப் பதிவு மற்றும் இரண்டாம் நிலைக் களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றின் நியதிகளில் விரிவாக்கப்பட்ட இயலளவானது அடுத்த 3 - 4 ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் புதிய பொருத்துக்களுக்கும் மேலும் விரிவடையக் கூடிய தற்போதைய விண்ணப்பங்களுக்கும் ஆதரவினை வழங்கும்.

புதிய மத்திய வங்கிக் கட்டடத்தில் அமைந்துள்ள திணைக்களங்களினது 250 தனிப்பட்ட கணனிகளை இணைக்கும் விதத்தில் உள்ளக கணனி வலையமைப்பொன்று நிறுவப்பட்டது. உச்ச தொழிற்பாட்டுக்கு உறுதித்தன்மைக்காக கண்ணாடி இழைய ஒளிக்கம்பிகள் ஊடாக திணைக்களங்களுக்கிடையிலான இணைப்பு வழங்கப்பட்டது. உள்ளக கணனி வலையமைப்பு தற்போது தகவல்களைச் சிறந்த முறையில் பரப்புவதற்கும் திணைக்களங்களுக்கிடையில் தரவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் தொழிற்பாடுகளின் இரட்டிப்புத் தன்மையைக் குறைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. உள்ளக வலையமைப்பின் ஏனைய அடிப்படைப் பண்புகளான (அ) பெரும் எண்ணிக்கையிலான பயன்பாட்டாளர்களுக்கிடையில் நுண்ணிய மென்கலப் பொருட்கள், சுற்றுபுறக் கருவிகள் ஆகிய தகவல் தொழில்நுட்ப மூலவளங்களைப் பகிருதல் (ஆ) மின்னஞ்சல்மூலமான தனிப்பட்ட தொர்பூட்டலை வழிமுறைப்படுத்துதல் மற்றும் (இ) பதியப்பட்ட விடயங்கள் வேறொரு இடத்தில் பதியப்படும் செய்முறையைப் பயன்தரு முறையில் மேற்கொள்ளல் ஆகியவற்றை இயலச் செய்தமையேயாகும். உள்ளக வலையமைப்பை நிறுவியதன் பின்னர் நூலகத்திலிருந்து, உசாத்துணைக்கும், எடுத்துச்செல்வதற்கும் நூல்களை உடனடியாகவே ஒதுக்கீடு செய்தல் இயலக் கூடியதாயிருந்ததுடன் "லிப்சிஸ்" முறையை கூடிய அளவில் பயன்தரத்தக்க விதத்தில் பயன்படுத்துவதையும் இயலச் செய்தது. வங்கிக்குள்ளேயும், வங்கிக்கு வெளியேயுள்ள நிறுவனங்களிடையேயும், விரைவானதும், இலகுவானதும் மற்றும் சிக்கனமானதுமான தொடர்பூட்டலை எளிதாக்குவதற்காக மின்னஞ்சல் வசதியானது இரு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வேளையில் இணைய வசதி, மூத்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

மத்திய வங்கியுடன், அனைத்து வர்த்தக வங்கிகளின் தலைமை அலுவலகங்களையும் முதன்மை வணிகர்களையும் இணைக்கும் விசாலித்த வலையமைப்பு இவ்வாண்டில் நிறுவப்பட்டு தொழிற்படுத்தப்பட்டது. இவ்விசாலித்த வலையமைப்பு, வங்கிகள் மற்றும் முதன்மை வணிகர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஏஎஸ்/ 400 கணனியுடன் ஒரே நேரத்தில் தொடர்பு கொள்வதனை இயலச் செய்கிறது. இதன்படி, கணனிமுறை உட்கட்டமைப்பானது நவீன கொடுப்பனவு முறையொன்றுக்கு நகருவதற்கு ஆயத்தமாகியதுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளூடாகத்

தீர்க்கப்பட்ட பெருமளவு பெறுமதியைக் கொண்ட நிதியங்களை பாதுகாப்புடன் உடனடியாகவே கொடுக்கல் வாங்கல் செய்ய இயலுமாக இருக்கும்.

விசாலித்த வலையமைப்பு தற்போது பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

- திரவத் தன்மையின் முகாமைக்காக இலங்கை மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களை வங்கிகள் வழங்குவதற்கு
- திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு
- அரசபடுகடன் பிணையங்களை வழங்குவதற்கான முதனிலை ஏலத்தை நடத்துவதற்கு
- வர்த்தக வங்கி வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் இருவழிக் குறிப்பீடுகளைக் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தகவல் தொழிற்நுட்ப திணைக்களம் பல்வேறு ஏஎஸ்/ 400 மற்றும் தனிப்பட்ட கணனியின் அடிப்படையிலான பயன்பாட்டினைத் தொடர்ந்தும் விருத்தி செய்தது. உடனடியான வர்த்தகம் மற்றும் முதனிலை வணிகர்களுக்கிடையிலான அரசபடுகடன் பிணையங்களின் தீர்ப்பனவு ஆகியவற்றுக்கான பயன்பாட்டு முறையொன்று விருத்தி செய்யப்பட்டு அவற்றின் திறைசேரி அலுவலகங்களில் நிறுவப்பட்டது. கொடுக்கல் வாங்கலொன்றுக்கு இணைத்தரப்பினரிடம் பிணையங்கள் மற்றும் நிதியங்கள் கிடைக்கக் கூடியதாயிருக்கும்போது மட்டும் வர்த்தகத் தீர்ப்பனவுகள் ஏற்படுமிடத்து வழங்கல் எதிர் கொடுப்பனவுப் பொறிமுறையை இது இலகுவாக்கியது. ஆகக் கூடியளவில் பரீட்சிக்கப்பட்டதுடன் இதன் "சமாந்தரமான தொழிற்பாடு" 2001 ஏப்பிறலில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் தொழில் நுட்பத்திணைக்களம், சிறந்த பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் மனிதத் தலையீட்டினைக் குறைக்கும் செய்முறையை வழிமுறைப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் முறைமையினைச் செப்பனிடும் நோக்குடன் அலுவலர் கொடுப்பனவு மாதிரிகளைப் பரிசோதனை செய்தது. அலுவலர் நலன்புரி கடன்களுக்கான புதிய முறையொன்று 2001ஆம் ஆண்டு சனவரி மாதம் 1ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்காக விருத்தி செய்யப்பட்டது. விதவைகள், மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறையானது அதன் தொழிற்பாட்டுத்திறனைத் தரமுயர்த்துவதற்காகவும் அவசியமான பாதுகாப்பு நியமங்களை ஈடு செய்வதற்காகவும் திருத்தியமைக்கப்பட்டது. இம் முறைமை பற்றிய ஆய்வொன்றினைக் கையேற்ற பின்னர் அலுவலர் கொடுப்பனவுப் பட்டியலுக்கான புதிய முறையொன்று ஆண்டின் நான்காம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் கடன்களின் திட்டத்தை கணனிமயப்படுத்தியது.

ஊழியரின் வரவு, விடுப்பு மற்றும் ஏனைய இன்றியமையாத இதேபோன்ற தகவல்களை ஏஎஸ்/400 இன் சூழலொன்றில் செய்முறைப்படுத்துவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட முறையொன்று முன்னேற்றமடைந்திருந்தது. இம்முறை, ஊழியர் வரும்போதும், போகும்போதும் கையெழுத்திடும் நேரங்கள் விடுப்பு மற்றும் குறுவிடுப்புப் பதிவுகள், மேலதிக வேலை மற்றும் முறைமாற்று வேலைத் தகவல்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக மையப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றைப் பேணும். நிருவாக நோக்கங்களுக்காக திணைக்களங்கள் தமது ஊழியர்களுக்குத் தேவையான பதிவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தை அணுகும். தனிப்பட்ட ஒவ்வொரு திணைக்களத்திலும் இப்பதிவுகளைப் பேணுவதில் தற்போது ஈடுபட்டுள்ள கைவேலைகளை எதிர்காலத்தில் இம் மையப்படுத்தப்பட்ட முறையானது கணிசமான அளவில் குறைக்கும். புதியமுறையின் "சமாந்தரமான ஓட்டம்" தற்போது நடைமுறையிலுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் திணைக்களமானது தொடர்ந்தும் ஊழியர் சேமநிதிய பிரயோக முறையினைப் பேணியதுடன் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தை மேலும் தன்னியக்கப்படுத்தும் வேலைகளைக் கையேற்றது. எஞ்சிய மீளளிப்புக் கொடுப்பனவுகள், மீளளிப்புக் கொடுப்பனவு அறிக்கைகள், வங்கிக் கணக்குச் சமன்பாடு , உறுப்பினர் கணக்குகளை இணைத்தல், வீடமைப்புக்கடன் சான்றிதழை அச்சிடுதல் மற்றும் கடன் விண்ணப்பங்களை கண்காணித்தல் உள்ளகப் பதிவுகளின் நகர்வு முறை ஆகியவற்றைக் கணனிமயப்படுத்துவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவை விருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. ஊழியர் சேமநிதிய முதலீட்டைக் கணனிமயப்படுத்துவதற்கான முறையொன்று கையேற்கப்பட்டு, அதன் ஆரம்ப நடவடிக்கையாக திறைசேரி உண்டியல்களின் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் கணனிமயப்படுத்தப்பட்டன. இது ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள ஊழியர் சேம நிதிய

கணனி முறையின் பொதுவான பேணலுக்கு மேலதிகமானதாகும்.

வங்கிகளுக்கிடையிலான பரிமாற்றம் மற்றும் காசோலைத் தீர்ப்பனவு ஆகியவற்றுக்கான முறைசார் முறையொன்றினை இலங்கை தன்னியக்க தீர்வகம் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. 2000ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 5.8 சதவீதத்தினால் அதிகரித்து 34,561,846 காசோலைகளை அடைந்தது. அதே வேளையில் இதே ஆண்டில் கையாளப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி ரூ.9.23 பில்லியனாகக் காணப்பட்டது. கணனியில் ஏதேனும் தடங்கல் ஏற்படும்போது அல்லது முதன்மை அமைவிடத்தில் ஏதேனும் பாதகமான நிகழ்வுகள் ஏற்படும்போது துணை நிற்கும் விதத்தில் தொலைவிலுள்ள அமைவிடமொன்றிலிருந்து ஆதாரக் கணனியின் இயக்கத்தினையும் உள்ளடக்கி காசோலைத் தீர்ப்பனவு முறையின் தொழிற்பாட்டு நம்பகத் தன்மையினை மேலும் வலுப்படுத்துவதற்கான உபாயமொன்றினை தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஏற்படுத்தவுள்ளது.

அண்மை ஆண்டுகளில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து இவ்வாண்டில் இலங்கை இடைக் கொடுப்பனவு முறை 29.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இடைக் கொடுப்பனவு கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 1999இன் ரூ.42.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில், ரூ.51.9 பில்லியனாகக் காணப்பட்டிருந்தது. இலங்கை இடைக் கொடுப்பனவுமுறை கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கப்பட்ட விரைவான வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இலங்கை இடைக் கொடுப்பனவு முறையின் மென்கல செய்முறைக்கான திருத்தங்கள் செய்முறை நேரத்தைக் குறைக்கும் நோக்கில் கையேற்கப்பட்டன. மென்கல அபிவிருத்தியானது தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டது. நீண்ட காலத்துக்கு, ஓரளவில் செயலற்றிருந்த நேரடிப் பற்று மாற்றல்முறை, பல கம்பனிகள் தொடர்பூட்டப் பணிகளை வழங்கியமையினாலும் மற்றும் வங்கிகள் தமது உண்டியல்கள் மற்றும் கொடுகடன் அட்டைக் கொடுப்பனவுகளை இம் முறையினூடாகச் சேகரிப்பதற்கு இணைந்ததனாலும் முன்னேற்றமொன்றைக் காட்டியது.

## முகாமைக் கணக்காய்வு

ஒவ்வொரு ஆண்டுக்குமான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2000ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுத் திட்டம் ஆகியவற்றுக்கிசைவாக முகாமைக் கணக்காய்வுத் திணைக்களமானது, மத்திய வங்கியின் செயலாற்றத்தில் செயற்றிறன், சிக்கனம் மற்றும் பயன்தரு தன்மை ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்குடன் தனது உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைப் பணித் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

வங்கியின் விரிவாக்க நீடிப்புக் கட்டடத்தின் நிருமாணம் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடத்தின் புத்தாக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுப்பனவுகள், வங்கி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ஊதியங்கள், ஓய்வூதிய நிதியம், ஊழியர் சேம நிதியம், விதவை மற்றும் தாரமிழந்தோர் ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் மத்திய வங்கியின் ஏனைய நலன்புரித் திட்டங்கள் மற்றும் இளைப்பாறும் போதான அல்லது மீளளிப்புக்கள் ஆகியன தொடர்பில் செயலக மற்றும் நலன்புரித் திணைக்களங்களினால் தயாரிக்கப்பட்ட ஆண்டு நிதியியற் கூற்றுக்கள் ஆகியவற்றின் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 31.12.2000இல் உள்ளபடியான மத்திய வங்கியின் ஐந்தொகை மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையம் மற்றும் இலங்கை தன்னியக்கத் தீர்வகம் ஆகியவற்றின் வரவு மற்றும் செலவுக் கூற்றுக்கள் முகாமைக்குச் சமர்ப்பிக்கப்பட முன்பே முன் கணக்காய்வு செய்யப்பட்டன.

முகாமைத்துவப் பணிகள் பிரிவு, ஒட்டுநர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் வங்கியின் தொழில்நுட்பத் தரத்திலுள்ள சிற்றூழியர்களின் வேலைச் செயலாற்றம் பற்றிய ஆய்வினை உள்ளடக்கி பல ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது.

## பயிற்சி

நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 27இன் நியதிகளின்படி, வங்கி தொடர்பான விடயங்களில் பொருத்தமான ஊழியர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சிகளை வழங்குவதற்கு ஊக்குவிப்பும் அனுசரணையும் வழங்குகின்றது. மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்வதுடன் தொடர்பான தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள திணைக்களங்களிலொன்று என்ற வகையில் பயிற்சித் திணைக்களம் 2000ஆம் ஆண்டு முழுவதும் பல்வேறு பயிற்சி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டது.

கல்விசார் துறையின் பயிற்சி பொருளாதாரம் மற்றும் அதனுடன் இணைந்த துறைகளில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் பட்டப்பின் படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் பொருளாதாரத்திலும் நிதியிலும் முதுமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடருவதற்காக இரு அலுவலர்கள் வெளிநாட்டுக்குச் சென்றனர். ஒரு அலுவலர் பொருளாதாரத்தில்

முனைவர் பட்டத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்வதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கும் இரு அலுவலர்கள் கணனித் தொழில் நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு டிப்பிளோமாவைத் தொடர்வதற்காக அதே பல்கலைக் கழகத்திற்கும் சென்றுள்ளனர். மேலும் ஒரு அலுவலர் கல்கத்தாவிலுள்ள பன்னாட்டுப் புள்ளிவிபரவியல் கல்வி நிலையத்தில் புள்ளி விபரவியல் டிப்பிளோமா கற்கை நெறியைத் தொடர்ந்தார்.

2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் மத்திய வங்கியின் பத்து அலுவலர்கள் வெளிநாடுகளில் பட்டப் பின்படிப்பினைத் தொடர்ந்தனர். இவ்வாண்டில் ஐந்து அலுவலர்கள் தமது பட்டப்பின்படிப்புக்கு நிகழ்ச்சித் திட்டங்களை வெளிநாடுகளில் வெற்றிகரமாக முடித்துக் கொண்டு வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர். 1999இலும் 2000இலும் பட்டப்பின் படிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பான தகவல்களை அட்டவணை II.28 தருகின்றது.

அட்டவணை II.28
அலுவலர் பயிற்சி
பட்டப்பிற்படிப்பு ஆய்வுகள் 1999 / 2000

| ஆண்டு | பட்டப்பிற் படிப்பிற்கு அனுப்பப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | பட்டப்பிற் படிப்பினை முடித்துக் கொண்டு திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை | 2000 திசெம்பர் 31இல் உள்ளவாறு பட்டப்பிற் படிப்பைத் தொடரும் அலுவலர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | முனைவர் பட்டம் | முதுமாணி/ பட்டப்பிற்படிப்பு டிப்பிளோமா |
| 1999 | 7 | 8 | 3 | 6 /1 |
| 2000 | 6 | 7 | 1 | 10 /4 |

ஆய்விற்குரிய ஆண்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்காக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான வங்கி அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவை வங்கியுடன் தொடர்பான துறைகளின் குறுங்கால பாடநெறிகள் ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. 2000ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் நடத்தப்பட்ட அத்தகைய குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மொத்தமாக 100 அலுவலர்கள் பங்குபற்றிய வேளையில் 728அலுவலர்கள் வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட 76 நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினர். 2000ஆம் ஆண்டுப் பகுதியில் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/ ஆய்வரங்குகளில் கலந்து கொண்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1999ஆம் ஆண்டின் ஒப்பிடத்தக்க தரவுகளுடன் அட்டவணை II.29இல் தரப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டுப் பகுதியில் 54 அலுவலர்கள் பன்னாட்டு நாணய நிதியம், இங்கிலாந்து வங்கி, பெடரல் றிசோர்வ் வங்கி, உலக வங்கி, சுவிஸ் நசனல் வங்கி, மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கியின் நிலையம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

அட்டவணை II.29
அலுவலர்களின் பயிற்சி
குறுகியகால பயிற்சித் நிகழ்ச்சித் திட்டம்/ ஆய்வரங்கு

*பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை*

| திணைக்களம் | வெளிநாடு | | உள்நாடு (மத்திய வங்கியினால் நடாத்தப்பட்டது) | |
|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 1999 | 2000 |
| 1. வங்கித்தொழில் | 21 | 10 | 28 | 44 |
| 2. பொருளாதார ஆராய்ச்சி | 21 | 16 | 29 | 45 |
| 3. வங்கி மேற்பார்வை | 20 | 14 | 104 | 87 |
| 4. தகவல் தொழில்நுட்பம் | 15 | 4 | 12 | 46 |
| 5. செயலகம் | - | - | 32 | 54 |
| 6. ஊ.சே.நிதியம் | 5 | 2 | 11 | 43 |
| 7. பொதுப்படுகடன் | 8 | 4 | 23 | 41 |
| 8. வங்கி தொழில் அபிவிருத்தி (அ) | 6 | 3 | 23 | 36 |
| 9. கிராமிய கொடுகடன் | 6 | 7 | 24 | 25 |
| 10. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் | 2 | 4 | 6 | 12 |
| 11. நாணயம் | 3 | 4 | 132 | 15 |
| 12 அபிவிருத்தி நிதி | 2 | 1 | 10 | 19 |
| 13 நிறுவகம் | 2 | - | 12 | 16 |
| 14 செலாவணிக்கட்டுப்பாடு | 3 | 6 | 8 | 19 |
| 15 நிதியியல் சந்தை | 1 | 1 | 2 | 3 |
| 16 முகாமைக் கணக்காய்வு | 2 | 1 | 8 | 17 |
| 17 கட்டடம் | 1 | - | 8 | 9 |
| 18 புள்ளிவிபரம் | 5 | 5 | 20 | 35 |
| 19 வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை | 3 | 3 | 37 | 60 |
| 20 நலன்புரி | 1 | - | 11 | 18 |
| 21 பயிற்சி | - | 1 | 4 | 5 |
| 22 பாதுகாப்புப் பணிகள் | - | - | 7 | 8 |
| 23 புதிய கட்டடங்கள் | - | - | 2 | 11 |
| 24 சட்டம் | - | 1 | 2 | 13 |
| 25 தகவல் (நூலகம் உட்பட) | - | 13 | 18 | 47 |
| மொத்தம் | 127 | 100 | 573 | 728 |
| பயிற்சிக்கான செலவு (ரூ.மில்) | 24.1 | 12.7 | 2.8 | 3.9 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

*(அ) பிரதேச அலுவலகங்கள் உட்பட.*
* 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் தொடக்கம் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டது

## நலன்புரி

நலன்புரித் திணைக்களத்தின் ஊடாக வங்கி ஆளணியினரின் நலன்களைக் கவனிக்கின்றது.

நலன்புரித் திணைக்களம், ஏனை விடயங்களுக்கிடையில் வங்கி ஊழியர்களுக்கு சலுகை வீதங்களில் கடன் திட்டங்களையும், வங்கி ஊழியர்களுக்கும் அதேபோன்று வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் வைத்திய நன்மைத் திட்டங்களையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியும், நிருவகித்தும் வருகின்றது.

வீடமைப்புக் கடன் வசதிகள் அதிகரிக்கப் பட்டமையினால் இவ்வாண்டில் பல ஊழியர்கள் தமது வீடுகளின் விஸ்தரிப்புக்கு அல்லது திருத்தங்களை மேற் கொள்ளுவதற்கு இவ்வதிகரிக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்தினர்,

நலன்புரித் திணைக்களத்தின் கீழ் வங்கிச் சிகிச்சை நிலையமானது ஊழியர்களின் மருத்துவ ஆலோசனைகளுக்காக முழுநேர வைத்தியர் ஒருவரை உள்ளக மருத்துவச் சாலையூடாக மருந்து வழங்கலையும் மேற் கொண்டு அலுவலக நேரத்தில் ஊழியர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கியது. இவ்வங்கிச் சிகிச்சை நிலையம், ஊழியர்கள் ஈ.சி.ஜி, இரத்தப் பரிசோதனை போன்ற நோயியற் பரிசோதனைகளுக்கு ஆளாவதை இயலச் செய்யும் வகையில் அவசியமான கருவி மற்றும் ஆளணியினரைக் கிடைக்கச் செய்கின்றது.

## ஆளணி

"கடமைப் பொறுப்புக்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் அவற்றைத் திறமையாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றுதல் மற்றும் அவசரத்தேவைகளையும் சவால்களையும் தயக்கமின்றி எதிர் கொள்ளல் ஆகிய ஆற்றலுடன் தனது உண்மையான உள்ளார்ந்த ஆற்றலை அபிவிருத்தி செய்யுமுகமாக திறமையானதும் செயற்றிறன் மிக்கதுமான தொழிற்படையொன்றை உருவாக்குதல்" என்ற அதன் தொலை நோக்கினைப் பேணும் விதத்தில் நிறுவகத் திணைக்களம் ஆட்சேர்ப்பு, நியமனங்கள், பதவி உயர்வுகள், ஓய்வுபெறல் மற்றும் ஆளணியினர் தொடர்பான ஏனைய விடயங்களில் 2000 காலப்பகுதியில் தனது தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் ஆற்றியது.

2000ஆம் ஆண்டில் நாற்பது உயர்பதவி அலுவலர்கள் வெளியிலிருந்து வங்கிப் பணிக்கு நியமிக்கப்பட்டதுடன் வங்கிக்குள்ளிருந்து இருபது உயர்பதவி உதவியாளர்கள் உயர்பதவி வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

ஆளுநர் திரு.ஏ.எஸ். ஜயவர்தன 2000ஆம் ஆண்டுப் பகுதியில் பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

1. மலேசியாவின் கோலாலம்பூரில் 2000ஆம் ஆண்டு சனவரி 27 தொடக்கம் 29ஆம் நாள்வரை நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களின் 35ஆவது மாநாடு.
2. ஐக்கிய அமெரிக்காவில் வாசிங்டனில் நடத்தப்பட்ட 2000ஆம் ஆண்டு ப.நா.நிதிய இளவேனிற்கால கூட்டத்தொடரில் கலந்து கொண்டதுடன் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 09 இலிருந்து 23 வரை சிக்காக்கோ வர்த்தக சபைக்கு விஜயம்.
3. மோல்டாவில் 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் 19 இலிருந்து 21வரை நடைபெற்ற பொதுநலவாய நிதி அமைச்சர்கள் கூட்டம்
4. பாரிசில் 2000ஆம் ஆண்டு திசெம்பர் 17 இலிருந்து 19 வரை நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டம் (உதவிக்குழுக் கூட்டம்)

## வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை முடிவுக்குக்கொண்டுவரல்

மத்திய வங்கியின் தொழிற்பாட்டினை ஒழுங்கு முறைப்படுத்தும் செயற்பாடாக, பிரதேச அலுவலகங்களுடன் சம்பந்தப்பட்டவை தவிர்ந்த வங்கித் தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட கருமங்கள் கிராமிய கொடுகடன் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வொழுங்குகளுடன் வங்கித் தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2000ஆம் ஆண்டு யூலை 24 இலிருந்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

### நியமனங்கள்

1. நிறுவனப் பணிப்பளார் திரு.டி.போயாகொட, சிறப்புத் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு 2000ஆம் ஆண்டு மே 9ஆம் நாளன்று ஆளுநரின் உதவியாளராக பதவியிலமர்த்தப்பட்டார்.
2. முதன்மைக் கணக்காளர் திரு. எம்.பீ. திசநாயக்கா, சிறப்புத் தரத்திற்கு உயர்த்தப்பட்டு 2000ஆம் ஆண்டு மே 9ஆம் நாளிலிருந்து ஆளுநரின் உதவியாளராக பதவியிலமர்த்தப்பட்டார்.
3. பதில் கண்காணிப்பாளர் , ஊழியர் சேம நிதியம் மற்றும் பணிப்பாளர் கிராமியக் கொடுகடன் திணைக்களம் திரு. இடபிள்யூ.ஏ. விஜேயவர்த்தன சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 2000ஆம் ஆண்டு மே 9ஆம் நாளிலிருந்து ஆளுநரின் உதவியாளராப் பதவி உயர்த்தப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் 2000ஆம் ஆண்டு யூன் 20ஆம் நாளிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
4. பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் திரு. ஆர்.எஸ். ஜயதிஸ்ஸ சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 2000ஆம் ஆண்டு யூன் 20ஆம் நாளிலிருந்து ஆளுநரின்

உதவியாளராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

5. பின்வரும் அலுவலர்கள் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு 2000ஆம் ஆண்டு மே 9ஆம் நாளன்று மூத்த திணைக்களத் தலைவர்களாக பதவியிலமர்த்தப்பட்டனர்.
   (i) முனைவர் என். எல். சிறிசேன வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர்
   (ii) திரு. எம்.ஐ.எம். கமீட் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் கண்காணிப்பாளர்
   (iii) திரு. ரி. எஸ்.என். பர்னாந்து பொதுப் படுகடன் கண்காணிப்பாளரும் பதிவாளரும்
   (iv) திரு. பி. ரி. சிறிசேன நிதிச் சந்தைகள் பணிப்பாளர்
   (v) திரு. எம். ஆர். பர்னாந்து நாணயக் கண்காணிப்பாளர்
   (vi) முனைவர் எஸ். எஸ். கொலம்பகே புள்ளி விபரப் பணிப்பாளர்
   (vii) திரு.கே.சி.எம். குணசேகர பயிற்சிப் பணிப்பாளர்

6. மேலதிகப் பணிப்பாளர் புள்ளிவிபரவியல் திணைக்களம் திரு.பி. டி.ஜே. பர்னாந்து அவரின் கடமைகளுக்கு மேலதிகமாக 2000ஆம் ஆண்டு சனவரி 26ஆம் நாளிலிருந்து தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்கு மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் 2000ஆம் ஆண்டு மே 1ஆம்நாளிலிருந்து தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. பின்வரும் நியமனங்கள் 2000ஆம் ஆண்டு மே 10ஆம் நாளிலிருந்து மேற் கொள்ளப்பட்டன.
   (i) திரு.எஸ். ரூபசிங்க நிறுவனப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
   (ii) திரு. எம்.எஸ். சிறிபாலா முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
   (iii) திரு. வை,எம்.இடபிள்யூ.பீ. வீரசேகர முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.
   (iv) திருமதி.சி.கே. நாணயக்கார கிராமியக் கொடுகடன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
   (v) திரு.இடபிள்யூ.எஸ்.எல். பர்னாந்து செயலாளராக நியமிக்கப்பட்டார்.
   (vi) திருமதி. பி.ரி. பெரேரா நலன்புரித் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
   (vii) திரு.எம். டி.டி. குணதிலக ஊழியர் சேமநிதிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
   (viii) முனைவர் டி.எஸ். விஜேசிங்க பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

8. திரு.என்.ஜே. பெரேரா 2000ஆம் ஆண்டு மே 10 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேமநிதியத்தின் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் 2000ஆம் ஆண்டு யூலை 10 ஆம் நாளிலிருந்து ஊழியர்சேமநிதியத்தின் பதில் கண் காணிப்பாளராகவும் 2000ஆம் ஆண்டு ஓகத்து 29ஆம் நாளிலிருந்து ஊழியர் சேமநிதிய கண்காணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

9. முனைவர் (திருமதி) அனிலா பண்டாரநாயக்க 2000ஆம் ஆண்டு யூன் 8ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர், 2000ஆம் ஆண்டு ஓகத்து 8ஆம் நாளிலிருந்து புள்ளி விபரத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப் பாளராகவும் 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் 14ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் 2000ஆம் ஆண்டு திசெம்பர் 14ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரப் பணிப் பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

10. திரு.பி.ரி. சிறிசேன 2000ஆம் ஆண்டு ஓகத்து 8ஆம் நாள் தொடக்கம் நிதியியல் சந்தைப் பணிப்பாளர் என்ற அவரின் கடமைக்கு மேலதிகமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

11. திருமதி. எல். கே. குணதிலக்க 2000ஆம் ஆண்டு செத்தெம்பர் 20ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு ஒத்தோபர் 16ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

12. 2000ஆம் ஆண்டு நவெம்பர் 10ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் முனைவர்

ஏ.ஜீ. கருணாசேன அவர்கள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஓய்வு பெறல்

1. திருமதி. எஸ்.என். பர்னாந்து தகவல் தொழில் நுட்பம் 2000 மே 1ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
2. திரு.ஜே.எல்.ஈ. பீரிஸ் மேலதிகச் செயலாளர் 2000 யூன் 1ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
3. செல்வி. சி.ஐ. பர்னாந்து பணிப்பாளர், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2000 யூன் 2ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
4. திரு. பி. அமரசிங்க துணை ஆளுநர் 2000 யூன் 14ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
5. திரு.ஏ.ஆர்.ஏ. மிகுந்துகுலசூரிய பணிப்பாளர், புதிய கட்டடங்கள் திணைக்களம் 2000யூன் 28ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் 2000 யூலை 3ஆம் நாளிலிருந்து மீண்டும் அதே பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.
6. திரு. எம். டீ. டீ. குணதிலக்க கண்காணிப்பாளர் ஊழியர் சேம நிதி 2000 ஓகத்து 29ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
7. முனைவர் எஸ். எஸ். கொலம்பகே பணிப்பாளர் புள்ளிவிபரம் 2000 திசெம்பர் 11ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.
8. திரு. எம்.ஜீ. சேனநாயக்க மேலதிகப் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனம் 2000 திசெம்பர் 30ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. முனைவர் (திருமதி) ராணி ஜெயமக இலண்டனிலுள்ள பொதுநலவாய நாடுகள் செயலகத்திற்கு.
2. திருமதி. எம். ஏ. ஆர். சி கூறே இறைக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்களின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
3. திரு. ஆர். ஏ. ஜயதிஸ்ச மாற்று நிறைவேற்று பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.
4. முனைவர் யு. விதானபத்திரன பணிப்பாளர் நாயகமாக (அபிவிருத்தி) கடமையாற்றுவதற்காக பொதுநிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு.
5. திரு. எம்.ஜே.எஸ். அபேசிங்க நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
6. திரு. ஏ. அபேரத்ன நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.
7. திரு. பி. ஜி. ஜயதுங்க நீர்ப்பாசன சக்தி அமைச்சிற்கு.
8. திரு. ஆர். அக்குறுகொட கமகே நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.